# ஸ்ரீபுரந்தரதாஸரின் 108 உகாபோகங்கள்

## (தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)

ஸ்ரீபுரந்தரதாஸர் (14841564)
மன்மனோபீஷ்டவரதம் ஸர்வாபீஷ்ட பலப்ரதம் |
புரந்தர குரும் வந்தே தாஸஸ்ரேஷ்டம் தயாநிதிம் ||

தாஸரெந்தரெ புரந்தரதாஸரய்யா
வாஸுதேவ கிருஷ்ணன ஸூஸி பூஜிஸுவந்த |
நீதி எல்லவனரிது நிகமவேத்யன நித்ய
வாத ஸுதனல்லிஹன வர்ணிஸுதலி |
கீத நர்த்தனதிந்த கிருஷ்ணன்ன பூஜிஸுவ
பூதாத்ம புரந்தரதாஸரிவரய்யா ||

நாரதரே ஈ கலியுகதி புரந்தரதாஸராகி பந்தரு
ஸாரஸம்ஸாரதலி நவகோடி நாராயணனாகி மெரெதரு
நாராயணதேவன மனெபாகிலிகெ அலெவந்தெ மாடிதரு
தாராளதன ஸதியிந்த கலிது ஸர்வஸ்வ தான மாடிதரு
மாரனய்யன தாஸ்ய பரஸுகவெந்து குருபாத ஹிடிதரு
நாரியர ஸந்ததியு ஸாவிரவாகலி எந்து ஹரஸிதரு
ஸோரி ஸ்ரீ புரந்தரவிட்டலன பரிபரி ஆடவாடிதரு
தீர ஸ்ரீ மங்களாங்க ஹரிவிட்டலன குணகான பாடிதரு ||

****

புத்தகத்தை வெளியிட்டவர்:
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
380, 2A Main, 16th Cross, JP Nagar 4th Phase
Bengaluru : 560078
https://jagannathakesava.blogspot.com
httis://dasa-sahitya.blogspot.com
Ph: 8904458276. haridasa.vijayam@gmail.com

# ஸ்ரீபுரந்தரதாஸரின் 108 உகாபோகங்கள்

## (தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)



வெளியீடு:
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
பெங்களூரு

# ஸ்ரீபுரந்தரதாஸரின்
# 108 உகாபோகங்கள்
## (தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)

வெளியீடு:

ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
பெங்களூரு

**ஸ்ரீபுரந்தரதாஸரின்**
**108 உகாபோகங்கள்**
**(தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)**

ஸ்ரீஹரிவாயுகுருகளின் ஆசியுடன், விஸ்வாவஸு வைசாக சுத்த த்ராயோதசி, ஸ்ரீவேதவ்யாஸ ஜயந்தி நாளான 10.05.2025 அன்று இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது.

தமிழில் உரை எழுதி வெளியிட்டவர்கள்:
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
380, 2A Main, 16th Cross, JP Nagar 4th Phase
Bengaluru : 560078
https://jagannathakesava.blogspot.com
httis://dasa-sahitya.blogspot.com
Ph: 8904458276. haridasa.vijayam@gmail.com

**இந்தப் புத்தகத்தை வெளியிட பொருளுதவி செய்த அனைத்து ஹரிபக்தர்களுக்கும் நன்றி!!**

**|| ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||**

## உகாபோகங்கள் - முன்னுரை

ஹரிதாஸ கீர்த்தனைகளில் தேவரநாமா, உகாபோகம், ஸுளாதி, ஸுவ்வாலி, வ்ருத்தநாமா, தண்டக போன்ற பல வகைகள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான விதிகள் உள்ளன. கன்னட ஹரிதாஸர்கள் இந்த அனைத்து வகைகளிலும் கீர்த்தனைகளை இயற்றி, பக்தி ஸாஹித்யத்தை மக்களிடையே பரப்பி, தத்வ வாத கருத்துக்களை அனைவருக்கும் நன்கு புரியுமாறு செய்தனர்.

ஸ்ரீஸ்ரீபாதராஜர், ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீவாதிராஜர், பின்னர் ஸ்ரீபுரந்தரதாஸரே முதலான ஹரிதாஸரிலிருந்து இன்றைய காலத்தில் இருக்கும் ஸ்ரீஹரிப்ரிய தீர்த்தர் (முன்னர் ஸ்ரீஜாம்பவதிப்ரிய விட்டல தாஸர்) வரை அனைவரும் உகாபோகங்களை இயற்றியுள்ளனர். அவற்றில் அனேகம் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டும் உள்ளது.

உகாபோகம் என்னும் சொல்லுக்கு மூலம் 'யுகாபோக' என்று சொல்வதுண்டு. பகவந்தனுடன் ஒன்றி ப்ரஹ்மானந்தத்தை அனுபவிப்பது என்று இதற்கு அர்த்தம் வருகிறது. உகாபோகம் என்பதை 'சிறிய பாடல்' என்றும் சொல்லலாம். தமிழகத்தில் கர்னாடக இசைக் கச்சேரி வட்டாரங்களில் 'துக்கடா' என்று சொல்லும் பாடல் வகையை இதற்கு ஒப்பிடலாம். 3 வரிகளிலிருந்து 20+ வரிகள் வரை கொண்டதும், கடைசியில் அங்கித முத்திரையும் கொண்டதாகவும் உள்ள இந்த வகையில், தேவரநாமாவில் பாடக்கூடிய அனைத்தையும் (பகவந்தன் சிறப்புகள், ஸித்தாந்தம், ஸதாசாரம், ஞான பக்தி வைராக்யம், உபதேசம்) பாடலாம். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்பது போல இதில் கிடையாது. ஸுளாதிகளைப் போல பல தாளங்களைக் கொண்டதும் இது இல்லை. உகாபோகங்கள், ராகத்தில் இசையமைத்து பாடக்கூடியதே ஆகும்.

இந்தப் புத்தகத்தில் ஸ்ரீபுரந்தரதாஸரின் பற்பல உகாபோகங்களில் 108 மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றிற்கான அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அர்த்தங்களும், நமது மற்ற புத்தகங்களான ஹரிதாஸ ஹ்ருதய, ஹரிகதாம்ருதஸார பாவப்ரகாசிகை போன்றவற்றிலிருந்து எடுக்கப்பட்டவையே.

ஹரிதாஸர்களின் மற்ற வகைகளைப் போல, இந்த புத்தகத்தில் வந்திருக்கும் உகாபோகங்களிலும் பாட பேதங்கள் இருக்கலாம். ஓரிரு வார்த்தைகள் முன்பின்னாகவோ, மாறுபட்டோ வந்திருக்கலாம். முடிந்த அளவிற்கு 2-3 வெவ்வேறு தொகுப்புக்களில் இவற்றின் வரிகளை ஒப்பிட்ட பிறகே, இதில் சேர்த்திருக்கிறேன். ஏதேனும் தவறுகள் இருந்தால் தெரிவிக்கவும்.

இந்த 108 உகாபோக அர்த்தங்களையும் படித்து, பிழைகளை நீக்க உதவிய திரு.J.முரளிதரன், கோவை (தொலைபேசி எண்: 95002 88035) அவர்களுக்கு என் மனமார்த்த நன்றிகள்.

குர்வந்தர்கத பாரதிரமண முக்யப்ராணாந்தர்கத ஸ்ரீஜகன்னாத கேசவ ப்ரீயதாம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

**'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்**
**8904458276**

**28.04.2025**

## உகாபோகங்களின் பட்டியல்:
## (தொடக்க வரிகள் இவ்வாறு)

1. ஏளுத்த கோவிந்தகெ கைய முகிவெ
2. ஹரே கோவிந்தா எந்தேளு ஹத்தாவதாரவ பேளு
3. ப்ராத: காலத நித்ரெ பரிஹரிஸி ஹரிய ஸ்மரிஸி
4. ஹலவு கர்மகளிகெ ஹவணெ எரடாசமன
5. குலபதிதனாதரு ஸந்த்யாவந்தன
6. அனாமிகா மத்யத எரடனெய கெரெயாதி
7. ஆதிவார ஸஞ்ஜெ ராத்ரிலி அங்காரக ஸுக்ரவாரதி
8. ஸ்ரீதுளஸி இல்லதித்தரெ ஸ்ரீகிருஷ்ண துளஸி
9. தனு ஶுத்தியில்லதவகெ தீர்த்தத பலவேனு
10. ஹகலு நின்ன நெனெயலில்ல ஹஸிவெத்ருஷெயிந்த
11. ஶுபவிது ஶோபன ஹரிகெ
12. ஹரி நீ முனிதரெ ஆரு ஒலிதேன மாடுவரு
13. ஹ்ருதய கமலதல்லி நானின்ன
14. எலெ ஜிஹ்வெ நீ கேசவன நாமவனெ ஸ்துதிஸு
15. இந்தின தினவே ஶுபதினவு
16. ஹாடிதரெ என்னொடெயன ஹாடுவெ
17. ஸ்ரவணதிந்தோயிது ப்ரஹ்ம ஹத்யா பாபவு
18. பரமானந்த ஹரிகெ
19. ஹரி நின்ன சரணவ ஸ்மரிஸலு துரித பீடிபுதுண்டெ
20. அணுரேணு த்ருணதல்லி பரிபூர்ணனாகிருவ
21. நித்ய பதிபாவ ஸ்ரீலகுமிதேவிகய்ய
22. கெரெய நீரனு கெரெகெ செல்லி
23. சத்ருவாகலி சோரசண்டாலனாகலி
24. மனெயல்லி விப்ரபாதோதகத ஹெஸரில்லதித்தரெ
25. ஒந்தக்ஷர பேளிதரெ ஊர்வியொளு அவரே குரு
26. கலியுகக்கெ ஸமயுகவு இல்லவய்ய
27. அணுவிகெ அணுவாகி கனகெ கனவாகி
28. நினகெ நீனே மோஹ நினகெ நீனே ப்ரீதி
29. நின்னந்த தந்தெ எனகுண்டு நினகில்ல
30. ஒந்து காலதல்லி ஆனெ குதுரெ மேல்மெரெஸுவி
31. எந்திகாதரு நின்ன பாதாரவிந்தவே கதி
32. ஸ்வேதத்வீபதி அமுக்தஸ்தளதல்லி சதுரமுக பவ இந்த்ராதி
33. ஒடவெயனெ களிஸிதரெ சோரர பயவுண்டு
34. ஏகைக மூருதி லோகக்கெல்ல
35. ஸிக்கிதெயெலோ ஸிரிகிருஷ்ணா
36. அன்யரொப்பர காணெ மன்னிபர என்ன ஆ
37. நின்ன நாம பண்டாரவ கத்த கள்ள நானு
38. ஹெத்த மக்களு மூர்க்கராதரெ தாயி தந்தெ
39. படவரொளகெ என்னிந்தாரு படவரல்ல
40. நின்ன நுடிதெ நானு நின்ன பாடிதெ நானு
41. எரகி பஜிபெனோ நின்ன சரணஸன்னிதிகெ
42. க்ஷீரஸாகரக்கெ ஸ்ரீரமண பந்தந்தெ
43. ஹரிஹரி எந்து கரெயுவதெ தட
44. மன ஸஞ்சலதி தபவ மாடலஶக்யவு
45. நீனே கர்த்தனு அகர்த்தரு ஸிரி அஜபவேந்த்ராத்யமரரு

46. உதயகாலத ஜப நாபிகெ ஸரியாகி
47. கர்ப்பவாஸ கிர்ப்பவாஸ ஜனன கினன
48. த்ரிவித ஜீவரிஹரு ஜகதொளகெ
49. ஸுகவாதரெ என்னிந்தாயிதெம்பரு
50. கெட்டனெந்தெனல்யாகெ க்லேஷ படுவத்யாகெ
51. என்னம்ம ஸிரிதேவி இன்னூ அரியளு மஹிமெ
52. ஹீனமானவ யோனியலி ஜனிஸிதெனோ நானு
53. நின்ன தாஸனு ஆகி நின்ன எஞ்ஜலுண்டவன
54. ஸிரி விரிஞ்சாதிகளு அரியதிஹ மஹிமெ
55. ஸ்ரீபதிய கடாக்ஷ வீக்ஷணவு தப்புவாக
56. மத்வஸரோவரதல்லி இத்து பூஜெயகொம்போ
57. ஏகானேகமூருதி லோகவெல்ல மூருதி
58. காவ தெய்வவு நீனே கொல்லுவ தெய்வவு நீனே
59. ஆவின கொம்பின துதியல்லி ஸாஸிவெ நிந்தித்த கா
60. ஹா க்ருஷ்ண ஹா த்வாரகாவாஸ எந்தெனலு
61. அதளதல்லிரிஸோ ஸுதளதல்லிரிஸோ
62. அல்லத கர்மவ ஆசரிஸிதவ கெட்ட
63. எரடு களிகெ பௌகு இரலு க்ரஹஸ்தகெ ஸ்னான
64. யதுகிருஷ்ண யாதவகிருஷ்ண எந்தவரிகெ அந்த்யகாலதல்லி
65. கஜதுரக ஸஹஸ்ரதான கோ குலகோடி தான
66. ஸ்ரீதேவிய மூருதியல்லி
67. நாரதமுனி நிம்ம பாடிதனல்லதெ
68. தர்மபதவ மெட்டலு மனவெரகது துஷ்
69. தனதாஸெ தைன்யவம்படிஸுதிதெ
70. காளிகிக்கித தீவிகெயந்தெ ஈதேஹ
71. ஹிம்ஸகர ஸங்கதிந்த பந்த பாதகக்கெ
72. ஹரிசரணரு என்ன மனெகெ பந்தரெ மனெ பாவன்னவப்பது
73. பாதகரொளகெல்ல நானு வெக்களவனய்ய
74. ஸ்வானன கங்குளொளகிட்டு வாரணாஸிகெ போதனந்தெ
75. ஸுகக்கெ தானாரோ துக்கக்கெ தானாரோ
76. கண்ணல்லி கேளுவ காம்புதனரிவ
77. அந்து கோகுலதல்லி கோபாலகராகி
78. ஒப்பர பண்டனாகி கால களெவுதுகிந்த
79. காலமேலெ மலகி ஸிம்பிலி ஹால குடிது பௌதெ
80. அல்லி வனகளுண்டு அப்ராக்ருதவாத
81. மனெயெம்ப ஆஸெயு என்ன முந்துகெடுஸுதிதெ
82. ஏனு ஓதிதரேனு ஏனு கேளிதரேனு
83. நின்ன கால்ஹெஜ்ஜெய பிடிது நா நில்லுவெ
84. மலகி பாடிதரெ குளிது கேளுவனு
85. தன்ன தானரியதா ஞானவேனு
86. ஹரிகுருகளிகெ எரகதெ ஹரிபக்தி ஒதகுவுதெ
87. அபாய கோடிகோடிகளிகெ
88. லேஸு தாஸரிகெ க்லேஶ துஷ்டரிகெ
89. ஆவாவ யுகதலி விஷ்ணுவ்யாபகனாகி
90. ஸிரிசதுர்முக ஸுரரு மனு முனிகளு
91. ஸனகாதிகள ஹம்ஸதந்தெ கமலதலி
92. நின்னன்னெ ஹாடுவெ நின்னன்னெ பாடுவே
93. ஹரிய பஜிஸபேகு மனமுட்டி

94. அந்து பாஹோது நமகிந்தே பரலி
95. ஹரிஸிரிசரணவிரலு மிக்க
96. எல்லி ஹரிகதா ப்ரஸங்கவோ அல்லி கங்கா
97. புட்டுவ பீதி பொந்துவ பீதி
98. அர்ப்பகன தொதல் நுடி தாய்தந்தெ கேளி மன
99. கிச்சினொளகெ பித்த கீட நானய்யா
100. ப்ரபன்னரக்ஷக நீனு பாலிஸோ நின்னவனு நானு
101. தப்புஸாஸிரகள ஒப்பி காயோ க்ருபாளு
102. நவரத்னகளு கண்ட கண்ட டாவினல்லி உண்டே
103. ஹகலு நால்கு ஜாவ ஹஸிவெயலி களெதனோ
104. மன ஸஞ்சலதி தபவ மாடலு அஶக்யவு
105. ஸதத கணநாத ஸித்தியனீவ கார்யதலி
106. ஆதியல்லி கஜமுகன அர்ச்சிஸி ஆரம்பிஸலு
107. அங்குடொங்காத மஞ்ச அனந்தகாலத மஞ்ச
108. பாரிபாரிகெ நின்ன சரணக்கெ சரணெந்தெ

***

# ஸ்ரீபுரந்தரதாஸரின்
# 108 உகாபோகங்கள்
## (தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)

**ஸ்ரீகுருப்யோ நம:**

**ஏளுத்த கோவிந்தகெ கைய முகிவெ**
**கண்ணெவெ தெகெது நோடுவே ஸ்ரீஹரிய**
**நாலிகெயலி நாராயண நரஹரி**
**ஸோளஸாஸிர கோபியர அரஸ எம்பெ**
**என்னாளுவ தொரெயெ புரந்தர விட்டல || 1**

(விடியலில்) எழுந்தவுடன் கோவிந்தனை நினைத்தவாறு கை குவித்து அவனை வணங்குவேன். கண்களைத் திறந்து முதலில் ஸ்ரீஹரியையே பார்ப்பேன். உடனே வாயில், 'நாராயணா, நரஹரி, 16,000 கோபிகளின் அரஸனே' என்பேன். என்னை ஆள்பவனே, தலைவனே, புரந்தரவிட்டலனே.

பொதுவாக நாம் அனைவரும் காலையில் எழுந்தவுடன் சொல்லும் ஸ்லோகம் இதுவாகவே இருக்கும்.

கராக்ரே வஸதே லக்ஷ்மி கரமத்யே ஸரஸ்வதி |
கரமூலே து கோவிந்த: ப்ரபாதே கரதர்ஶனம் ||

கையின் முனையில் லக்ஷ்மிதேவியும், நடுவில் சரஸ்வதி தேவியும், மூலத்தில் கோவிந்தனும் இருக்கிறான் என்று காலையில் கர தரிசனத்தை செய்தவாறு, அனுஸந்தானம் செய்ய வேண்டும்.

எழுந்தவுடன் எதை பார்க்க வேண்டும், என்ன சொல்ல வேண்டும் என்பதை மிகவும் எளிமையாக விளக்கும் ஸ்ரீபுரந்தரதாஸர், பின் அதையே நாள் முழுவதுமே செய்ய வேண்டும்; அதாவது, பகவத் ஸ்மரணை செய்ய வேண்டும் என்பதையும் சேர்த்து சொல்கிறார் என்றே புரிந்து கொள்ள வேண்டும்.

***

**ஹரே கோவிந்தா எந்தேளு ஹத்தாவதாரவ பேளு**
**மூடல தெஸெகெ நடெ கோவிப்ர துளஸிகெரகு**
**பந்து நைருத்யதல்லி த்ரணவிட்டு சௌசமாடு**
**குருபரம்பரா யெல்ல அந்து புரந்தரவிட்டலா என்னு || 2**

ஸ்ரீஹரியே, கோவிந்தனே என்று கூவியவாறே எழுந்திருப்பாயாக. மத்ஸ்ய, கூர்ம என்று பகவந்தனின் 10 அவதாரங்களையும் சொல்வாயாக. கிழக்கு திசை நோக்கி நடப்பாயாக (வணங்குவாயாக). பசு, ப்ராஹ்மணன், துளஸி ஆகியோரை வணங்குவாயாக. வீட்டின் நைருத்ய (தென் மேற்கு) திசையில் அமர்ந்து சௌசம் (காலைக் கடன்களை) செய்வாயாக. பின், குரு பரம்பரையினரை முழுக்க சொல்லி, புரந்தரவிட்டலா என்று அவனுக்கு சமர்ப்பணம் செய்வாயாக.

காலையில் செய்ய வேண்டிய செயல்களைப் பற்றிய உகாபோகம் இது. எந்தெந்த திசையில் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சுருக்கமாக சொல்கிறார். காலையில் பகவந்தனின் 10 அவதாரங்களை சொல்ல வேண்டும் என்கிறார் ஸ்ரீதாஸர்.

மத்ஸ்ய கூர்ம வராஹ காயோ முத்து நாரஸிம்ஹ காயோ
ஹெச்சின வாமனனே காயோ பார்க்கவனே காயோ

அச்ச ராம கிருஷ்ண காயோ புத்த கல்கி ரூப காயோ
ஸச்சிதானந்தனே காயோ ஸ்வாமி எந்தளு ||

என்று ஸ்ரீபுரந்தரதாஸரே பாடியிருக்கும் த்ரௌபதி மானஸம்ரக்ஷணையில், திரௌபதிதேவி சொல்வதாக வரும் இந்த தசாவதார பத்யமானது நாம் நினைப்பதற்கும் உகந்ததாகும்.

பின், நமது குருபரம்பரா ஸ்லோகங்களை சொல்லி, அவர்கள் அனைவரையும் காலையில் நினைக்க வேண்டும் என்கிறார். அவரவர் மடத்திற்கேற்ப உள்ள குருகளின் சரம ஸ்லோகங்கள் மற்றும் ஹரிதாஸர்களின் சரம ஸ்லோகங்கள் அனைத்தையும் சொல்லி, அவர்களில் அந்தர்யாமியாக இருக்கும் முக்யப்ராணாந்த ர்கதனான பகவந்தனை நினைக்க வேண்டும்.

***

**ப்ராத: காலத நித்ரெ பரிஹரிஸி ஹரிய ஸ்மரிஸி**
**நாத கோவிந்தகெ ப்ரதக்ஷிணெ மாடி**
**ப்ரீதியொள அதிதிபூஜெகெய்து புராண சாஸ்த்ரவகேளி**
**நாத ஸ்ரீ புரந்தர விட்டலகெ நமோ என்னி ||3**

தினம்தோறும் நாள் முழுதும் நாம் செய்ய வேண்டிய செயல்களைப் பற்றிய இன்னொரு உகாபோகம் இது.

விடியலில் தூக்கத்தை களைந்து, சீக்கிரமாக எழுந்து, ஸ்ரீஹரியை நினையுங்கள். தலைவனான கோவிந்தனுக்கு ப்ரதிக்ஷணை செய்யுங்கள். பிறகு மதியத்தில் வரும் அதிதிகளுக்கு மிகவும் அன்புடன் பூஜையை செய்து, மாலையில் புராண சாஸ்திரங்களை அறிஞர்கள் மூலமாக கேளுங்கள். தலைவனான ஸ்ரீபுரந்தர விட்டலனுக்கு நமோ என்று சொல்லுங்கள்.

ஸ்ரீவாதிராஜர் இயற்றிய 'மனெ வார்த்தெ ஹாடு' . 34 பத்யங்களைக் கொண்ட ஒரு க்ருதி. பெண்கள் ஒரு நாள் காலையிலிருந்து, இரவு வரை செய்ய வேண்டிய ஆத்யாத்மிக செயல்களைப் பற்றிய ஒரு பட்டியலாக இருக்கிறது.
உதயகாலக்கெ எத்து பதுபனாபன நெனெது, கருட வாஹன நிம்ம அரமனெ கெலஸவ முததி மாட தொடகுவெ என்று விடியலில் செய்யும் செயலிலிருந்து.. க்ஷீர ஸாகரதல்லி ஸேஷன ஹாஸிகெயல்லி ஸ்ரீலக்ஷ்மி ஸஹிதாகி மலகிர்ப்ப ஹரியன்னு தியானிஸுத பதிய ஹாஸிகெயலி மலகுவெ.. என்று இரவு படுக்கப் போகும்வரையிலான செயல்களை சொல்லியிருக்கிறார்.

அந்த க்ருதியில் ஒரு சுருக்கமாகவே இந்த உகாபோகமும் இருக்கிறது என்பதை பார்க்கிறோம்.

***

**ஹலவு கர்மகளிகெ ஹவணெ எரடாசமன**
**மலமூத்ர விஸர்ஜனக்கெ மாடு மூராசமன**
**நலிதுண்டம்யாலெ மத்தெ மாடு நால்காசமன**
**லலனெயர ஸங்கக்கெ மாடு ஐதாசமன**
**அல்லிந்தொலிவனு புரந்தரவிட்டல ஆசமனவனு மாடெ ||4**

அனைத்து கர்மங்களுக்கும் முன்னர் ஆசமனம் செய்ய வேண்டியது அவசியம். மூன்று முறை உத்தரணியில், மிகச்சிறிய அளவிற்கு நீர் எடுத்து அருந்துவதே ஆசமனம். இந்த ஆசமன கர்மத்தின் அர்த்தம் பின்வருமாறு.

கேசவாய ஸ்வாஹா - ப்ரஹ்மதேவருக்கு மற்றும் ருத்ரதேவருக்கு நியாமகனான பகவானுக்கு ஹோமம் செய்கிறேன். நாராயணாய ஸ்வாஹா - தோஷங்கள் அற்ற, குணபூர்ணனான நாராயணனுக்கு ஹோமம்

செய்கிறேன். மாதவாய ஸ்வாஹா - லக்ஷ்மிபதிக்கு ஹோமம் செய்கிறேன். என்று பகவந்தனின் மூன்று ரூபங்களுக்கு ஜலாஹுதியை சமர்ப்பித்து புனிதர் ஆகவேண்டும்.

உகாபோகத்தின் அர்த்தம் இவ்வாறு: பற்பல கர்மங்களுக்கு, அவற்றிற்கு ஏற்றாற்போல, இரண்டு ஆசமனங்களை செய்ய வேண்டும்; மல, மூத்ர விஸர்ஜனங்களுக்கு மூன்று ஆசமனங்கள்; நன்றாக உண்டபிறகு, நான்கு முறை ஆசமனம் செய்ய வேண்டும். பெண் சங்கத்திற்கு (முன்) ஐந்து முறை ஆசமனம் செய்ய வேண்டும். இவ்வாறு, இவ்வளவு முறை ஆசமனம் செய்தால், அங்கிருந்து கொண்டு, புரந்தரவிட்டலன் நம்மை காப்பான்.

நித்யப்படி நாம் செய்யும் ஸந்தியாவந்தனம், பூஜை, விரதங்களுக்கு இரு முறை ஆசமனமும், சிரார்த்தம், தர்ப்பணம் போன்றவற்றிற்கு ஒரு முறையும் ஆசமனம் செய்வதை நாம் அறிவோம். பகவானின் 24 (சதுர்விம்ஷதி) ரூபங்களில், 3 ஆசமனத்திலும், இதனைத் தொடர்ந்து, கோவிந்தாய நம: என்று அடுத்த 21 நாமங்களையும் விதிப்படி சொல்லி முடிப்பதே ஆசமனத்தின் நிறைவு ஆகும்.

***

**குலபதிதனாதரு ஸந்த்யாவந்தன**
**கெய்யத பாபியாதரூ ஸஹ த்ரோஹியாதரு**
**பாபகெய்யுத பரபத்னிய நெரதரு ஸ்ரீபதி**
**கோபிசந்தன லிப்தாங்ககெ பூபதி**
**புரந்தரவிடல பாதவ தோர்வ ||5**

கோபிசந்தனத்தை பூசிக் கொள்வதின் முக்கியத்துவத்தையும், அதன் சிறப்பினையும், ஸ்ரீமதாசார்யார் கிருஷ்ணாம்ருத மஹார்ணவத்தில் மிகவும் தெளிவாக சொல்லியிருக்கிறார். அதனையே இங்கு ஸ்ரீபுரந்தரதாஸரும் மேற்கோள் காட்டி பாடியிருக்கிறார்.

குலத்தின் பெயரை கெடுத்தவனேயானாலும், ஸந்தியாவந்தனமே செய்யாத பாவியானாலும், சக மனிதர்களுக்கு த்ரோகம் செய்தவனானாலும், பாவம் செய்தவாறு, பிற பத்னியரை நினைத்தவனேயானாலும், கோபிசந்தனம் பூசிய / தடவிய தேகத்திற்கு, ஸ்ரீபதியான, பூபதியான, புரந்தரவிட்டலன், தனது பாதங்களை காட்டுவான்.
கோபிசந்தனம் இழைக்கும்போது, காயத்ரி மந்திரத்தை சொல்லி, சுக்ல பக்ஷத்தில் கேசவ முதல் தாமோதர வரைக்கும்; கிருஷ்ண பக்ஷத்தில் ஸங்கர்ஷணனிலிருந்து ஸ்ரீகிருஷ்ணன் வரைக்கும் நாமங்களை சொல்லி, நம் தேகத்தில் 12 இடங்களில் கோபி சந்தனம் தரித்து, புண்டரீகாக்ஷனை நினைக்க வேண்டும்.

த்வாரகாக்ஷேத்ர ஸம்பூதே ஸர்வ பாப ஹரே ஷுபே |
கிருஷ்ணமாத: நமஸ்துப்யம் கோபிசந்தன தே நம: ||

த்வாரகா க்ஷேத்திரத்தில் பிறந்தவனான, அனைத்து பாவங்களையும் களைபவனான கிருஷ்ணனை, தாயாக அடைந்த உனக்கு நமஸ்காரம். ஹே கோபிசந்தனமே உனக்கு நமஸ்காரம்.

***

**அனாமிகா மத்யத எரடனெய கெரெயாதி**
**இனிது மத்யாங்குலி கொனெகெரெ கூடிஸி**
**மனுமூர்த்தி பரிமாண அங்குஷ்டதிந்தலி**
**எணிஸு தர்ஜனிமூல பரியந்தர**
**கன ஹத்துகெரெ ஜப புரந்தரவிட்டலகெ**
**மனதி அர்ப்பிஸுத காயத்ரி ஜபவ || 6**

ஸந்தாவந்தனத்தின்போது செய்ய வேண்டிய காயத்ரி மந்திரத்தின் எண்ணிக்கையை எப்படி செய்வது என்பதை இந்த உகாபோகத்தில் அழகாக விளக்கியிருக்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

மோதிர விரலின் இரண்டாவது (நடு) ரேகையிலிருந்து தொடங்கி, ப்ரதக்ஷிணமாக வந்து, நடுவிரலின் கடைசி ரேகை வழியாக கட்டை விரலில் எண்ணி, பகவந்தனின் ரூபத்தை மனதில் நினைத்தவாறு, மோதிர விரலின் கடைசி ரேகையில் முடிக்க, 10 ஜப எண்ணிக்கை செய்ய வேண்டும். இவ்வாறு புரந்தரவிட்டலனை மனதில் நினைத்தவாறு, காயத்ரி மந்திரத்தை ஜபம் செய்து அவனுக்கு அர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு ஜபம் செய்யும்போது, அந்த எண்ணிக்கை செய்வதை மற்றவருக்கு தெரியாத வகையில் துணியினால் மூடியவாறு செய்வதும், ஜபத்தையும் வாய்விட்டு உச்சரிக்காமல், உதடுகள்கூட அசையாமல், மனதிலேயே அந்த மந்திரத்தை சொல்வதுமே உத்தமமான செயல் என்பதையும் விதிப்படி அறிய வேண்டும். அவ்வாறே ஜபம் செய்யும்போது, கண்களை மூடியவாறு, பகவானின் ரூபத்தை மனதில் நினைத்தவாறு, வேறு புற விஷயங்களில் கவனம் செலுத்தாதவாறு இருப்பதும் அவசியமாகும்.

விரல்களில் ஒவ்வொரு ரேகையாக ப்ரதக்ஷிணகாரமாக எண்ணி ஜபம் செய்யும்போதும், மேரு பர்வதத்தை நாம் சுற்றி வருவதாகவும் அனுஸந்தானம் செய்ய வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

***

**ஆதிவார ஸஞ்ஜெ ராத்ரிலி அங்காரக ஸுக்ரவாரதி**
**ஆதித்ய ஸோமக்ரஹணதி அமாவாஸ்யகய ஹுண்ணமி த்வாதஸிலி**
**வைத்ருதி வ்யதீபாத ஸங்க்ரமணகளலி துளஸி தெகதரெ**
**புரந்தரவிட்டலனு முனிவனு காணிரோ || 7**

ஸ்ரீ துளஸியை பறிப்பதற்கும் உபயோகப்படுத்துவதற்கும் கூட சாஸ்திரங்களில் விதி முறைகள் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீ துளஸியை வெறும் கையிலும், குளிக்காமலும், ராத்திரி வேளையிலும், சாப்பிட்ட பிறகும் பறிக்கலாகாது. ஸ்திரீகள் துளஸியை பறிக்கக் கூடாது.

ஞாயிற்றுக்கிழமைகளில், மாலை / இரவு நேரங்களில், செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில், ஸூர்ய / சந்த்ர கிரஹண காலங்களில், அமாவாசை / பௌர்ணமி நாட்களில், த்வாதஸியன்று, வைத்ருதி / வ்யதீபாத யோக நாட்களில், ஸங்க்ரமண நாட்கள் - என இந்த அனைத்து நாட்களிலும் துளஸியை பறிக்கக் கூடாது. அவ்வாறு பறித்தால், ஸ்ரீபுரந்தரவிட்டலன் மகிழ்ச்சி அடைவதில்லை.

இதையே பின்னால் வந்த ஸ்ரீ விஜய தாஸரும் "ரவி மங்களவார வைத்ருதி வ்யதிபாத ரவி ஸஸி ஸங்கம பர்வணி புண்ய கால திவஸ த்வாதஸி ஸ்ரேஷ்ட மொதலாத உபராக பித்ரு ஸிரார்த்ததிவுகளலி தெகெயதிரி நவவஸனவ பொத்து ஊடவமாடி தாம்பூல ஸவியுத்த முட்டதிரி யுவதி ஸூத்ரரிம் தரிஸுவுது உசிதவல்ல வெந்து திளிது கொண்டாடு" போன்ற பதங்களில் விளக்கியுள்ளார்.

இத்தகைய நாட்களில் பூஜைக்குத் தேவையான துளஸியை முன்னரே பறித்து வைத்துக் கொண்டு, அதனை வைத்து ஸ்ரீஹரியின் பூஜையை செய்ய வேண்டும். இத்தகைய மஹிமை வாய்ந்த ஸ்ரீ துளஸியை பக்தியுடன் ஆராதித்து ஸ்ரீ ஹரியின் ப்ரீதிக்கு பாத்திரராவோமாக!!.

***

**ஸ்ரீதுளஸி இல்லதித்தரெ ஸ்ரீகிருஷ்ண துளஸி**
**துளஸிதள இல்லதிரெ துளஸிகாஷ்ட**
**இல்லதிரெ துளஸி ஸுஷ்க அது ஹளெதாதரெ ஏனு**
**அவனிகெ அர்ப்பிஸ பஹுது**
**இல்லதிரெ சிகுரு துளஸி**
**இல்லதிரெ முகுளு தெனெ**
**இல்லதிரெ பேரு மண்ணு**
**இல்லதிரெ துளஸி துளஸி எந்து கூகிதரெ ஸாகு**
**இல்லதிரெ புரந்தரவிட்டலய்ய எல்ல வஸ்துகள ஈட்யாடுவ ||8**

ஸ்ரீகிருஷ்ணன் பகவத்கீதையில் 'பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோமே பக்த்யா ப்ரயச்சதி' என்று 'பத்ரம்' என்பதில் முக்கியமாக ஸ்ரீதுளஸியையே குறிப்பிட்டுக்கிறான் என்பதை அறிய வேண்டும். ஸ்ரீஹரியின் பூஜையில் அபிஷேகம், அர்ச்சனை, நைவேத்யம் மற்றும் ஸமர்ப்பணம் என அனைத்திலும் அங்கம் வகிக்கும் மிக இன்றியமையாத வஸ்துவாக ஸ்ரீ துளஸி உள்ளது. எவ்வளவு மிக விலை உயர்ந்த பதார்த்தங்கள் மற்றும் வைபவங்கள் இருப்பினும், ஸ்ரீ துளஸி இல்லாத பூஜையை ஸ்ரீ ஹரி ப்ரீதியுடன் ஏற்பதில்லை ஆகவே, ஸ்ரீஹரிபூஜையின்போது துளஸி கட்டாயம் தேவை.

ஒருவேளை துளஸி கிடைக்காவிடில், ஸ்ரீகிருஷ்ண துளஸி பயன்படுத்தலாம். அதுவும் இல்லையெனில், துளஸி காஷ்டம். அதுவும் இல்லையெனில், காய்ந்த துளஸி. அதுவும் இல்லையெனில், பழைய துளஸி. அதுவும் இல்லையெனில், அதன் விதை / பூ / மிருத்திகை என இவற்றை பயன்படுத்தலாம். இவை எதுவுமே கிடைக்கவில்லையெனில், துளஸி துளஸி என்று கூவினாலும்போதும். இவை செய்யாவிட்டால், ஸ்ரீபுரந்தர விட்டலன், நாம் சமர்ப்பித்த மற்ற எல்லா பொருட்களையும் நிராகரித்துவிடுவான் என்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

***

**தனு ஶுத்தியில்லதவகெ தீர்த்தத பலவேனு**
**மன ஶுத்தியில்லதவகெ மந்த்ரத பலவேனு**
**மிந்தல்லி பலவேனு மீனு மொஸளெயந்தெ**
**நிந்தல்லி பலவேனு ஸ்ரீ சைலகாகெயந்தெ**
**ஹொரகெ மிந்து ஒளகெ மீயதவர கண்டு**
**பெரகாகி நகுதிப்ப புரந்தரவிட்டலா || 9**

அக மற்றும் புறத் தூய்மைகளைப் பற்றி மிகவும் அழகாக பாடியிருக்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர். ஸ்ரீஹரிப்ரீதிக்கு ஆளாக வேண்டுமெனில், அக ஸாதனை மற்றும் புற ஸாதனைகளை நாம் செய்ய வேண்டும்.

உடல் சுத்தம் இல்லாதவன், பற்பல தீர்த்த க்ஷேத்திரங்களுக்கு சென்று ஸ்னானம் செய்வதால் என்ன பலன்?. எதுவும் இல்லை. மன சுத்தம் இல்லாதவன் எவ்வளவுதான் மந்த்ர ஜபம் செய்தால் என்ன? எதுவும் பலன் தராது. மீன், முதலைகள் கூட கங்கையில் இருக்கின்றன. ஆனால், அதன் மகிமை தெரியாமல் அதில் ஸ்னானம் செய்வதில் என்ன பலன்?. எதுவும் கிடையாது. மலை போல ஓரிடத்தில் நின்று சேவை செய்கிறேன் என்பதும், காக்கை போல பறந்து சேவை செய்கிறேன் என்று சொல்வதும், தக்கதான அனுஸந்தானம் இல்லாமல் செய்தால் பலன் இல்லை. வெளிப்புறத்தில் வேடம் போட்டுக் கொண்டு, உள்ளத்தில் கபடத்துடன் இருப்பவர்களைக் கண்டு, ஆச்சரியத்துடன் சிரித்துக் கொண்டிருக்கிறான் ஸ்ரீபுரந்தரவிட்டலன் - என்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

இதையே தனது இன்னொரு பாடலில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

உதய காலதலெத்து கடுகடு நடுகுத்த
நதியல்லி மிந்தெனெந்து ஹிக்குதலி
மத மத்ஸர க்ரோத ஒளகெ தும்பிட்டுக் கொண்டு
பதியல்லி இத்தவரிகாஸ்சர்ய தோருவ (உதர வைராக்யவிது)

***

**ஹகலு நின்ன நெனெயலில்ல ஹஸிவெத்ருஷெயிந்த**
**இருளு நின்ன நெனெயலில்ல நித்ரெய பரதிந்த**
**எரடரபாதெகெ நானொளகாதேனோ**
**ஸலஹோ புரந்தரவிட்டலா ||10**

நாள் முழுவதும் 24 x7 நாம் எப்போதும் பகவந்தனையே நினைக்க வேண்டும். ஆனால், நான் அப்படி நினைக்கவில்லை. ஏன்? சொல்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

பகலில் நான் உன்னை நினைக்கவில்லை. ஏனென்றால், நான் எப்போதும் பசி, தாகத்திலேயே இருந்தேன். இரவு நேரத்தில் நான் உன்னை நினைக்கவில்லை. ஏனென்றால், நான் தூக்கத்தில் இருந்தேன். இந்த பசி, தூக்கம் இரண்டினாலும் நான் பாதிக்கப்பட்டேன். என்னை அருள்வாயாக, ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

இந்த மனிதப்பிறவி மிகவும் பெரியது (சிறந்தது). இவ்வாறாக அரிதான பிறவியை எடுத்து வந்தபின், இதனை வீணடிக்காமல், ஸ்ரீஹரியின் த்யானத்தில் அதனை செலவிடுமாறு 'மானவ ஜென்ம தொட்டது' என்ற (மற்றும் பல்வேறு) தேவரநாமாக்களில் ஸ்ரீபுரந்தரதாஸர், இந்த பிறவியின் மற்றும் நமது நேரத்தின் (காலத்தின்) முக்கியத்துவத்தை தெரியப்படுத்திக் கொண்டேயிருக்கிறார். அப்படி நேரத்தை வீணடிப்பவர்களை 'ஹுச்சப்பகளிரா' (பைத்தியக்காரர்களே) என்றும் அந்தப் பாடலில் திட்டுகிறார் ஸ்ரீதாஸர்.

ஞான, பக்தி, வைராக்கியத்தை சம்பாதிக்கும் வகையை தேட வேண்டுமென்றும், அதற்கு இடையூறாக இருக்கும் பசி, தூக்கம் ஆகியவற்றை என்னிடமிருந்து விலக்கி, எனக்கு நீ அருளவேண்டும் என்பதாகவும் இங்கு வேண்டிக் கொள்கிறார். (நமக்காவவும் வேண்டுகிறார்).

***

**ஶுபவிது ஶோபன ஹரிகெ**
**ஶுபவிது ஶோபன ஸிரிகெ**
**ஶுபவிது புரந்தரவிட்டல ராயகெ**
**ஶுபவிது ஶோபன ஹரிகெ || 11**

அத்யத்புத ரூபம் கொண்டவனான ஸ்ரீஹரிக்கு மங்களம் (வெற்றி) உண்டாகட்டும். அத்யத்புத ரூபம் கொண்டவளான ஸ்ரீலட்சுமிதேவிக்கு மங்களம் (வெற்றி) உண்டாகட்டும். அத்யத்புத ரூபம் கொண்டவனான ஸ்ரீபுரந்தரவிட்டலனுக்கு மங்களம் (வெற்றி) உண்டாகட்டும். அத்யத்புத ரூபம் கொண்டவனான ஸ்ரீஹரிக்கு மங்களம் (வெற்றி) உண்டாகட்டும்.

ஸ்ரீஹரிக்கு வெற்றி உண்டாகட்டும் (ஜயதி) என்றால், அவன் மிகச் சிறந்தவனாக இருக்கிறான் என்று அர்த்தம். இவ்வாறான அர்த்தம் வருவதாக, ஸ்ரீடீகாக்ருத்பாதர், தனது மாயாவாத கண்டன டீகையில், ஸ்ரீமதாசார்யரின் மங்களாசரண ஸ்லோகத்திற்கு டீகை எழுதும்போது தெரிவிக்கிறார்.

அத்தகைய ஸர்வோத்தமனான, மிகச் சிறந்தவனான ஸ்ரீஹரி, நமக்கும் அந்த வெற்றியை / மங்களத்தை அருளட்டும் என்பதாக ப்ரார்த்தனை செய்வதாக அனுஸந்தானம் செய்து இந்த உகாபோகத்தை படிக்க வேண்டும்.

***

**ஹரி நீ முனிதரெ ஆரு ஒலிதேன மாடுவரு**
**ஹரி நீ ஒலிதரெ ஆரு முனிதேன மாடுவரு**
**புரந்தரவிட்டலா ||12**

ஸ்ரீஹரி நீ கோபப்பட்டால், வேறு யார் கோபப்பட்டு அவர்களால் என்னதான் செய்ய முடியும்?. ஸ்ரீஹரி நீ மகிழ்ந்து தரிசனம் அளித்தால், வேறு யார் மகிழ்ந்து தரிசனம் அளித்து அவர்களால் என்னதான் செய்ய முடியும்?. ஹே புரந்தரவிட்டலா.

ஸ்ரீஹரியின் ஸர்வோத்தமத்வம் இங்கு சொல்லப்படுகிறது. மஹாலக்ஷ்மியே முதலான அனைத்து தேவதைகளும் பகவானின் விருப்பப்படியே அனைத்து செயல்களையும் செய்கின்றனர். அப்படிப்பட்ட பகவான், தான் ஒரு விஷயம் செய்ய வேண்டும் என்று நினைத்துவிட்டால், அவருக்கு கீழ் தாரதம்யத்தில் இருக்கும் தேவதைகள், அவனை மீறி, அவனது இஷ்டத்திற்கு மாறாக, என்னதான் செய்ய முடியும்?. (எதுவும் செய்ய முடியாது என்று அர்த்தம்).

ஹிரண்யகசிபுவே முதலான அசுரர்களின் விஷயத்தில், ஸ்ரீஹரி கோபப்பட்டு, நரஸிம்ஹனாக அவதாரம் எடுத்து அவனை ஸம்ஹாரம் செய்தான். இவ்வாறு பகவான் கோபப்பட்டதால், அவனைத் தவிர மற்ற தேவதைகள் கோபப்பட்டு என்ன ஆகும்?. பகவான் கோபப்பட்டதாலேயே அசுர ஸம்ஹாரம் நடந்தது என்று அர்த்தம்.

திரௌபதி மான ஸம்ரக்ஷணை சமயத்தில், அவர் ஸ்ரீகிருஷ்ணனை மனதார நினைத்து கை குவித்து வேண்டியதில், ஸ்ரீகிருஷ்ணன் மகிழ்ந்து இரங்கி அவரது மானத்தை காத்தான். இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணன் அருளியதில், அந்த சமயத்தில், மற்ற தேவதைகள், என்னதான் செய்ய முடியும்?. பகவான் அருளியதாலேயே திரௌபதிக்கு அக்ஷய வஸ்த்ரம் கிடைத்தது என்று அர்த்தம்.

***

**ஹ்ருதய கமலதல்லி நானின்ன**
**பதபதுமவ நெனெவந்தெ மாடு**
**யதுராஜாதிராஜ ஸுதர்ஸன த3ர**
**யதுராஜாதிராஜ இதனெ க்ருபெ மாடெனகெ**
**மதனபதி புரந்தரவிட்டலா யதுராஜாதிராஜ || 13**

நான் உன்னை, உன் பாதங்களை என் ஹ்ருதய கமலத்தில் எப்போதும் நினைக்குமாறு செய். யதுகுலத்தின் ராஜாதி ராஜனே, ஸ்ரீகிருஷ்ணனே, ஸுதர்ஸன சக்ரத்தை ஏந்தியவனே. ஸ்ரீகிருஷ்ணனே நீ எனக்கு இதை அருள்வாயாக. மன்மதனின் தந்தையே ஸ்ரீபுரந்தரவிட்டலனே. ஸ்ரீகிருஷ்ணனே.

ஸ்ரீஹரியை நாம் நமது ஹ்ருதய கமலத்தில் இருப்பவனாக எப்போதும் நினைக்க வேண்டும். ஸந்த்யாவந்தனம் செய்யும்போது 'ஹ்ருத்கமல மத்ய நிவாஸி நாராயண ஸரஸிஜாஸன ஸன்னிவிஷ்ட: கேயூரவான் மகர குண்டலவான் கிரீடி ஹாரி ஹிரண்மய வபு: த்ருத ஷங்க சக்ர:' என்றெல்லாம் நம் ஹ்ருதய கமலத்தில் இருக்கும் பகவான் எப்படியெல்லாம் அலங்காரம் செய்து கொண்டுள்ளான் என்பதை வர்ணித்து சொல்லியிருக்கிறார்கள்.

நமது இதய கமலத்தில் இருக்கும் பகவானை எப்படியெல்லாம் அனுஸந்தானம் செய்து வணங்க வேண்டும் என்பதை, ஸ்ரீஹரிகதாம்ருதஸாரத்தில் ஸ்ரீஜகன்னாததாஸர், பல பத்யங்களில் சொல்லியிருக்கிறார். உதாரணம்: 'ஸுதபனேகோத்தர ஸுபஞ்சாஷத' என்று தொடங்குவதான பத்யம் பார்க்கவும்.

இதற்கு மிகச் சிறந்த இன்னொரு உதாரணம் 'அந்தரங்கத கதவு தெரெயுதிந்து' என்பதான ஸ்ரீவிஜயதாஸரின் பாடல். மனதில் இருக்கும் பகவானை அவர் எப்படி தரிசனம் செய்தார், அந்த பகவான் எப்படி இருந்தார் என்பதை விளக்கும் அந்த தேவரநாமாவின் அர்த்தத்தை அறிந்து கொள்ளவும்.

***

**எலெ ஜிஹ்வெ நீ கேசவன நாமவனெ ஸ்துதிஸு**
**எலெ கரகளிர ஸ்ரீ ஹரிய பூஜெய மாடி**
**எலெ நேத்ரகளிர ஸ்ரீகிருஷ்ணன மூர்த்திகள நோடி**
**எலெ காலுகளிர ஸ்ரீஹரிய யாத்ரெய மாடி**
**எலெ நாஸிகவெ முகுந்தன**
**சரணபரிமளவனாக்ராணிஸுதிரு**
**எலெ சிரவெ நீனதோக்ஷஜன பாத ஜலருஹதல்லி எரகிரு**
**எலெ மனவெ நீ வரதகேசவ புரந்தரவிட்டலன**
**பகுதி விஷயகளல்லி அனுதினவு களெயுத்திரு || 14**

ஹே நாக்கே, நீ எப்போதும் கேசவனின் நாமத்தையே ஸ்துதித்துக் கொண்டுப்பாயாக. ஹே கைகளே, நீங்கள் எப்போதும் ஸ்ரீஹரியின் பூஜையையே செய்து கொண்டிருங்கள். ஹே கண்களே. நீங்கள் எப்போதும் ஸ்ரீகிருஷ்ணனின் மூர்த்தியையே பார்த்துக் கொண்டிருங்கள். ஹே கால்களே, நீங்கள் எப்போதும் ஸ்ரீஹரியின் க்ஷேத்திரங்களின் யாத்திரையையே செய்யுங்கள். ஹே மூக்கே, நீ எப்போதும் முகுந்தனின் பாத சரணங்களின் நறுமணத்தையே நுகர்ந்து கொண்டிரு. ஹே தலையே, நீ எப்போதும் அதோக்ஷஜனின் பாத கமலங்களில் வணங்கியவாறு இரு. ஹே மனமே, நீ வரம் அருளும் கேசவ புரந்தரவிட்டலனின் பக்தி விஷயங்களில் எப்போதும் நிலைத்திரு.

நமது கர்மேந்த்ரிய, ஞானேந்த்ரியங்கள் அனைத்தினாலும் பகவானை எப்போதும் வணங்கிக் கொண்டிருக்க வேண்டும். அந்த அனைத்து இந்த்ரியங்களும் அதன செயல்களை செய்தவாறு, எப்போதும் ஆத்யாத்மிக சிந்தனையில் இருக்க வேண்டும் என்பதை ஸ்ரீபுரந்தரதாஸர் இந்த அழகான உகாபோகத்தில் விளக்கியிருக்கிறார்.

***

**இந்தின தினவே ஶுபதினவு**
**இந்தின வார ஶுபவார**
**இந்தின தாரெ ஶுபதாரெ**
**இந்தின கரண ஶுபகரண**
**இந்தின யோக ஶுபயோக**
**இந்தின லக்ன ஶுபலக்ன**
**இந்து புரந்தரவிட்டல ராயன**
**பாடித தினவே ஶுபதினவு ||15**

பொதுவாக மக்கள் எந்த வேலைக்கும் நல்ல நேரம் இருக்கிறதா என்று பார்க்கின்றனர். சுப காரியங்களுக்கு கண்டிப்பாக இது பார்க்கின்றனர். ஆனால், சில விஷயங்கள் நம்மால் கண்டிப்பாக / உடனடியாக செய்ய வேண்டியதாக இருக்கும்போது, எந்தவொரு காரணத்தினாலும் அதை தாமதப்படுத்தக்கூடாது. நேரம் போய்விட்டால் பின்னர் எவ்வளவு வேண்டினாலும் கிடக்காது. வராது. மீனம் மேஷம் பார்க்கும் நிலை வேண்டாம். இதைப் பற்றி ஸ்ரீபுரந்தரதாசர் சொன்ன வாக்கினை கேட்டு, அதன்படி நடப்போமாக.

இன்றே நல்ல நாள்; இதுவே நல்ல வாரம்; இப்போது கிடைத்திருப்பதே நல்ல நட்சத்திரம், இதுவே நல்ல கரணம், இதுவே நல்ல யோகம், இதுவே நல்ல லக்னம். ஸ்ரீபுரந்தரவிட்டலனை நாம் பாடும் நாளே நல்ல நாள் என்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

அதாவது, இந்த நாள் நல்ல நாள் ஆகவேண்டுமெனில், பகவந்தனின் நாமஸ்மரணையை எப்போதும் செய்ய வேண்டும் என்பதும், இதனால், என்று நாம் அந்த நாமஸ்மரணையை செய்யவில்லையோ, அன்று நல்ல நாள் இல்லை என்பதையும் சொல்கிறார் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

***

**ஹாடிதரெ என்னொடெயன ஹாடுவெ**
**பேடிதரெ என்னொடெயன பேடுவெ**
**ஒடெயகெ ஒடலனு தோருத என்னய**
**படதன பின்னஹ மாடுவெ காடுவெ**
**ஒடெய புரந்தரவிட்டலராயன**
**அடிகளனு ஸாரி பதுகுவெ ஸேரி பதுகுவே ||16**

பாடினால் என் பகவானை மட்டுமே பாடுவேன். வேண்டினால் என் பகவானிடம் மட்டுமே வேண்டுவேன். பகவானுக்கு என் சரீரத்தையே அர்ப்பணம் செய்து, என் ஏழ்மையைக் குறித்து வேண்டுவேன். திரும்பத்திரும்ப வேண்டுவேன். என் தலைவனான ஸ்ரீபுரந்தரவிட்டலனின் அடிகளை சேர்ந்து, அதனை அடிபணிந்து வணங்குவேன்.

‘பலு நீசரல்லிகெ போகி யாசிஸதெ’ என்று ஸ்ரீஜகன்னாததாஸர் தனது ‘பலவிது பாள்துதக்கெ’ கிருதியில் பாடியது இதையே. வேறு கீழானவர்களிடம் (தேவதைகளிடம்) எதையும் வேண்டாமல், அனைத்தையும் தருவது ஸ்ரீஹரியே என்ற அறிவு கொண்டு, ஆகையால், அவனையே வேண்டிக் கொள்ள வேண்டும். இதர தேவதா பூஜைகளில் (கணேஷ பூஜை, நவக்ரஹ பூஜை) அவர்களின் அந்தர்யாமியாக ‘முக்யப்ராணாந்தர்கத ஸ்ரீஹரியையே’ வேண்ட வேண்டும் என்பதையே ஸ்ரீபுரந்தரதாஸர் இந்த உகாபோகத்தில் குறிப்பிடுகிறார்.

என்னுடைய ஏழ்மையை வேண்டிக் கொள்வேன் என்றால், அது செல்வம் / பணம் அல்ல. நம்மிடம் குறைவாக இருக்கும் ஞான, பக்தி, வைராக்கியம் ஆகியவற்றை. அவற்றை அவன் நமக்குத் தர வேண்டும் என்று திரும்பத்திரும்ப வேண்டிக் கொள்வேன் என்கிறார்.

அனைவருக்கும் (லக்ஷ்ம்யாதி தேவதைகளுக்கும்) தலைவனான ஸ்ரீஹரியின் பாதாரவிந்தங்களில் சரணடைந்தாலே அனைத்தும் கிடைக்கும் என்பது கருத்து.

***

**ஸ்ரவணதிந்தோயிது ப்ரஹ்ம ஹத்யா பாபவு**
**ஸ்மரெணெயிந்தோயிது ஸேரித்த பாபவு**
**எல்லித்த அஜமிள எல்லித்து வைகுண்ட**
**கொட்டாதனெ பல்ல புரந்தரவிட்டல ||17**

ஸ்ரவணத்தின் சிறப்பினை விளக்கும் இன்னொரு உகாபோகம் இது. ஸ்ரவணம் என்றால் - பகவானின் சிறப்புகள் / மகிமைகள் / அவதாரக் குறிப்புகள், பகவானின் பக்தர்களின் மகிமைகள், பகவானைக் குறித்து அவர்கள் எழுதிய கிரந்தங்களின் உபன்யாஸங்கள் ஆகியவை ஆகும்.

ஸ்ரவணத்தினால் ப்ரம்ஹ ஹத்யா பாவம் விலகுகிறது. ஸ்ரவணத்தினால் சேர்ந்த பாவங்கள் அனைத்தும் விலகுகின்றன. அஜமிளன் எங்கு இருந்தான்?. வைகுண்ட எங்கு இருந்தது? (மிகவும் தூரமாக இருந்தது என்பது கருத்து). அந்த வைகுண்டத்தை அந்த அஜமிளனுக்கு ஸ்ரீபுரந்தரவிட்டலன் கொடுத்தானே? - என்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

ஸ்ரவணத்தைக் குறித்தான ஸ்ரீஹரிகதாம்ருதஸாரத்தின் புகழ்பெற்ற பத்யத்தை அனைவரும் அறிவோம். ‘ஸ்ரவணமனகானந்தவீவுது, பவஜனித துக்ககள களெவுது’ . ஸ்ரவணம் என்பது என்னவெல்லாம் செய்யும் என்று இங்கு ஸ்ரீபுரந்தரதாஸர் சுருக்கமாக சொல்லியிருப்பதை அந்த பத்யத்தில் ஸ்ரீஜகன்னாததாஸர் சிறிது விளக்கமாக சொல்லியிருப்பார்.

ஒரு கன்னட பத்யமோ / ஸம்ஸ்க்ருத வாக்கியங்களோ, எதை ஸ்ரவணம் செய்கிறோமோ, அதனை அதன் அர்த்த அனுஸந்தானத்துடன் சேர்த்து புரிந்து கொள்வதே, ஸ்ரவணம் என்பதற்கான முக்கியமான அர்த்தம். அந்த அர்த்த அனுஸந்தானம் இல்லாமல் வெறும் கேட்பதால் எவ்வித பலனும் இல்லை என்பது ஆன்றோர் கருத்து.

***

**பரமானந்த ஹரிகெ**
**பரமானந்தவு ஸிரிகெ**
**பரமானந்தவு நம்ம புரந்தரவிட்டல ராயகெ ||18**

ஸ்ரீஹரிக்கு பரமானந்தமான சரீரம். ஸ்ரீலட்சுமிதேவிக்கு பரமானந்தமான சரீரம். நம் ஸ்ரீபுரந்தரவிட்டல ராயனுக்கு பரமானந்தமான சரீரம் இருக்கிறது.

ஸ்ரீஹரிக்கு பற்பல நற்குணங்கள் உள்ளன. அவை அனைத்தும் அனந்தமாக உள்ளன. இந்த அனைத்து குணங்களில், ஒன்றை மட்டும், அதிலும் தினமும் புதிதுபுதிதான விஷயங்களைக் கண்டு தினமும் ஸ்ரீலட்சுமிதேவி மகிழ்கிறார் என்பதை ஸ்ரீஜகன்னாததாஸர் ஸ்ரீஹரிகதாம்ருதஸாரத்தில் சொல்லியிருப்பதை அறிகிறோம். ‘பகெபகெய நூதனவ காணுத மிகெ ஹருஷதிம் பொகளி ஹிக்குவ’ .

இவ்வாறாக ஸ்ரீஹரியின் குணங்களையே நாமும் அனுஸந்தானம் செய்து அவனை வணங்க வேண்டும். அவன் குணபூர்ணன், நிர்தோஷன், ஞானானந்தாத்மக சரீரம் கொண்டவன் ஆகியற்றையே நாம் சிந்திக்க வேண்டும். இந்த நற்குணங்களில் ஒன்றான ஞானானந்தாத்மக சரீரத்தையே, இங்கு ஸ்ரீபுரந்தரதாஸர் 'பரமானந்த ஹரிகே' என்று சிந்தனை செய்திருக்கிறார். இவ்வாறு சிந்தனை செய்து வணங்கினால், நமக்கும் அந்த பரமானந்தமான மோக்ஷத்தையே ஸ்ரீஹரி அருள்கிறான் என்பது கருத்து.

***

**ஹரி நின்ன சரணவ ஸ்மரிஸலு துரித பீடிபுதுண்டெ**
**அரிது பஜிபரிகெல்ல கைவல்ய ஜோகெ**
**கருணவரிது தன்ன மகன கூகிதவகெ**
**மரணகாலதி ஒதகிதெ ஸ்ரீ புரந்தரவிட்டலா ||19**

ஸ்ரீஹரியே உன் சரணங்களை நினைத்தால், கஷ்டங்கள் / துன்பங்கள் எங்களை பீடிக்குமா? (இல்லை). இந்த விஷயத்தை அறிந்து அப்படி உன்னை பஜிப்பவர்களுக்கு, மோக்ஷம் நிச்சயம் கிடைக்கும். உன்னுடைய இந்த கருணையை அறிந்து, (அஜாமிளன்), தனது மரண காலத்தில் (நாராயணா) என்று தன் மகனை அழைத்தவனுக்கு அந்த மோக்ஷத்தை நீ அளித்தாயே புரந்தரவிட்டலனே.

பகவானின் பாத கமலங்களை நம் இதயகமலத்தில் நிரந்தரமாக தியானம் செய்ய வேண்டும். சுதர்ஷன பதாம்போஜ ஸமீபஸ்தோsஹமன்வஹம் ||. பகவந்தனின் பாத கமலங்களின் அருகிலேயே நான் இருக்கிறேன் என்னும் அனுசந்தானம் ஒவ்வொரு நொடியும் இருக்க வேண்டும். நாம் செய்யும் அனைத்து சத்கர்மங்களையும் பகவந்தனின் பாத கமலங்களிலேயே சமர்ப்பணம் செய்ய வேண்டும். பகவானின் பாதங்களின் தரிசனத்திற்காக நிரந்தர விருப்பம் இருக்க வேண்டும். இவ்வாறு யார் இருக்கிறார்களோ, அவர்கள் பகவந்தனின் தேக சிந்தனையை செய்வதற்கு சமர்த்தராக இருக்கின்றனர் – – என்று ஸ்ரீத்ரிவிக்ரம பண்டிதாசார்யார் தனது 'விஷ்ணு ஸ்துதி' யில் தெரிவித்திருக்கிறார்.

பகவந்தனின் மிருதுவான கால்களில் விரல்கள் மிகவும் அழகாக இருக்கின்றன. அதில் நகங்கள் சந்திரனைப் போல ஒளிர்கிறது. சௌந்தர்யமாக இருக்கிறது. கால் மோதிரம் மற்றும் கால் கொலுசுகளிலிருந்து ஒளிரும் பாத கமலங்கள் இரு பாத கமலங்களிலிருந்து ஒளிரும் கால் கொலுசுகளைப் பார்ப்பதற்கு இரு கண்களே போதாது – என்று பகவானின் பாதங்களைக் குறித்தான வர்ணனை தொடர்கிறது.

*******

**அணுரேணு த்ருணதல்லி பரிபூர்ணனாகிருவ**
**குணவந்தனே நின்ன மஹிமெய கணனெ மாடுவராரு**
**எணிஸி நோடுவளின்னு ஏனாக்ஷி ஸிரிதேவி**
**ஞான ஸுகுணதத்வ வேணுகோபால ஹரியே**
**காணிஸோ நின்ன மஹிமெயனு புரந்தரவிட்டலா ||20**

மிகச் சிறியதான அணு, புல் ஆகியவற்றிலும் பரிபூர்ணனாக இருப்பவனே. நற்குணங்களைக் கொண்டவனே. உன்னுடைய மகிமைகளை யாரால்தான் முழுமையாக தெரிந்து கொள்ள முடியும்?. ஸ்ரீமகாலட்சுமிதேவியும்கூட அந்த மகிமைகளை தினமும் எண்ணிக் கொண்டெ இருக்கிறாளே. ஞான, ஸுகுண தத்வமே, வேணுகோபால ஹரியே, உன் மகிமையை எனக்கு காட்டி அருள்வாயாக ஸ்ரீபுரந்தரவிட்டலா.

மகாலட்சுமியானவர், அந்த பரமாத்மன் தன் அவதார மற்றும் மூல ரூபங்களால் எந்தெந்த வேலைகளை செய்துவருகிறாரோ, அந்தந்த வேலைகளில் சிறப்புகளை, அவனின் குணரூபங்களை ஆலோசனை செய்து அறிந்தவாறு; பாரதத்திலும், வேத ராசிகளிலும்கூட சொல்லப்பட்டிருக்காத புதுப்புது பகவத் மகிமைகளை, குணரூபங்களை, ஒவ்வொரு நொடியும் கண்டவாறு, அந்த பரமாத்மனை போற்றிப் புகழ்ந்தவாறு, அவனின் மகிமைகளை எவ்வளவு பார்த்தாலும் அவனிடம் இருக்கும் மகிமைகளின் ஒரு சிறிய அம்சத்தைப்

பார்ப்பதற்கும் சாத்தியம் இல்லை என்று வியப்படைகிறாள் - என்று ஸ்ரீஹரிகதாம்ருத ஸாரத்தில் படிக்கிறோம்.

இவ்வாறு ஸ்ரீமகாலட்சுமிக்கே எண்ணி முடிக்கமுடியாத உன் மகிமைகளை, உன் பக்தனான எனக்கு காட்டுவாயாக, அருள்வாயாக என்று வேண்டிக் கொள்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

***

**நித்ய பதிபாவ ஸ்ரீலகுமிதேவிகய்ய**
**நித்ய புத்ரபாவ பொம்ம ப்ராணரிகெ**
**நித்ய பௌத்ரபாவ கருட ருத்ரரிகெ**
**நித்ய ப்ருத்யபாவ இந்த்ர காம ஆத்மஜீவரிகெ**
**இந்தெந்த புரந்த்ரவிட்டலா ||21**

ஸ்ரீலக்ஷ்மிதேவிக்கு என்றும் ஸ்ரீஹரியின் பத்னி என்னும் சிந்தனை இருக்கிறது. (அவர்கள் நியத பதி பத்னிகள்). சதுர்முகபிரஹ்மர் மற்றும் முக்யப்ராண தேவருக்கும் என்றும் அவர்கள் ஸ்ரீஹரியின் புத்ரர்கள் என்னும் சிந்தனை இருக்கிறது. கருட ருத்ரர்களுக்கு என்றும் அவர்கள் ஸ்ரீஹரியின் பௌத்ரர்கள் என்னும் சிந்தனை இருக்கிறது. இந்த்ர, காம ஆகியோருக்கு அவர்கள் என்றும் ஸ்ரீஹரியின் ப்ருத்யர்கள் (சேவகர்கள்) என்னும் சிந்தனை இருக்கிறது.

தத்வவாதத்தின் மிக முக்கிய கோட்பாடுகளில் ஒன்றான தாரதம்ய க்ரமத்தினை விளக்குவதான உகாபோகம் இது. முதல் கக்ஷையில், ஸர்வோத்தமனான ஸ்ரீஹரி. அதற்கு அடுத்து, அவரது நியத பத்னியான ஸ்ரீமஹாலக்ஷ்மி. மூன்றாம் கக்ஷையில், சதுர்முக ப்ரஹ்மதேவர் மற்றும் முக்யப்ராண தேவர். அடுத்த (ஐந்தாம்) கக்ஷையில் கருட, ஸேஷ, ருத்ரர்கள் வருகிறார்கள். பிறகு (எட்டாம்) கக்ஷையில் இந்த்ர, காமர்கள் வருகிறார்கள்.

இப்படி தாரதம்ய க்ரமத்தில் வரும் தேவதைகளுக்கு அவரவர்களின் கக்ஷையின்படி, கல்ப ஸாதனைகள் மற்றும் குணங்களின் சொல்லப்பட்டுள்ளன. இவற்றை ஸ்ரீஹரிகதாம்ருதஸாரத்தில் ஸ்ரீஜகன்னாததாஸர் விவரமாக சொல்லியிருக்கிறார் என்பதை பார்க்கிறோம்.

அனைத்து தேவதைகளையும் அவரவர்களின் தாரதம்ய க்ரமத்திலேயே, அவர்களின் அந்தர்யாமியாக, பாரதிரமண முக்யப்ராணாந்தர்கதனான லக்ஷ்மியுடனான ஸ்ரீஹரியையே நாம் வணங்க வேண்டும் என்பது உபாஸனா முறை என்பதை அறிய வேண்டும்.

***

**கெரெய நீரனு கெரெகெ செல்லி**
**வரவ படெதவரந்தெ காணிரோ**
**ஹரிய கருணதலாத பாக்யவ**
**ஹரிஸமர்ப்பணெ மாடி பதுகிரோ**
**ஸிரி புரந்தரவிட்டலராயன**
**சரணகமலவ நம்பி பதுகிரோ || 22**

இந்த சாதனை சரீரத்தை, அதிலும் வைஷ்ணவ ஜென்மத்தை நமக்கு அளித்த ஸ்ரீஹரியினுடையதே இந்த தேகம், உள்ளிருக்கும் உறுப்புகள், நாடிகள் என அனைத்தும். அனைத்துமான அவனிடம், அனைத்தும் உன்னுடையதே ஸ்வாமி என்று சமர்ப்பிப்பது அனைவரின் கடமை. இவ்வாறாக அனைத்தையும் ஸ்ரீஹரிக்கே சமர்ப்பணம் செய்து, அவனின் சரண கமலத்தை நம்பி வாழுங்கள் என்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

நாம் எப்படி கிணற்று / ஆற்று நீரினை எடுத்து அங்கேயே ஊற்றி, அர்க்யம் கொடுக்கிறோமோ, அது போல, பகவந்தன் மூலமாக கிடைத்த இந்த தேகத்தை அவனுக்கே சமர்ப்பியுங்கள். அவனுடைய கருணை

பலத்தினால் கிடைத்த பாக்கியங்களை அவனுக்கே சமர்ப்பணம் செய்து வாழுங்கள். பின், அவனுடைய சரண கமலங்களை நம்பி வாழுங்கள்.

லௌகீக விதமாக இந்த உகாபோகத்திற்கு இப்படியும் அர்த்தம் கூறியிருப்பதை பார்க்கிறோம். ஸ்ரீஹரியின் கருணையால், மனித, அதிலும் ப்ராஹ்மண, அதிலும் மாத்வப் பிறவி நமக்கு தற்போது கிடைத்திருக்கிறது. அதற்காக, ஸ்ரீஹரிக்கு நன்றி செலுத்தும் விதமாக, இந்த மாத்வ சமூகத்திற்கு பயன்பெறுமாறு சேவையை அனைவரும் செய்ய வேண்டும் (Give back to the Community / Society) - என்றும் இதற்கு ஒரு அர்த்தம் சொல்லலாம்.

***

**சத்ருவாகலி சோரசண்டாலனாகலி**
**பித்ரு காதகியாகலி ப்ரீதி மாடலு பேகு**
**அதிதியாகி மத்யான்ஹகாலதி ஆவ பந்து உண்டரெ**
**ஸ்வர்க்கவீவ புரந்தரவிட்டலா || 23**

எதிரியாகட்டும், கடும் பாவங்களை செய்தவன் ஆகட்டும், தந்தையை கொன்றவனே ஆகட்டும் - அப்படிப்பட்டவர்கள் அதிதியாக மதிய காலத்தில் வந்தால், அன்பு செலுத்த வேண்டும். வயிறார உணவளிக்க வேண்டும். அப்படி செய்பவர்களுக்கு ஸ்ரீபுரந்தரவிட்டலன் ஸ்வர்க்கத்தை அளிக்கிறான்.

அதிதி ஸத்காரத்திற்கு எப்படிப்பட்ட முக்கியத்துவம் இருக்கிறது / கொடுக்க வேண்டும் என்பதை இங்கு விளக்குகிறார் ஸ்ரீபுரந்தரதாஸர். அதுவே ‘தர்மம்’ என்று உணர வேண்டும் என்கிறார்.

இதையே தனது ‘தர்மவே ஜயவெம்ப திவ்ய மந்த்ர’ என்னும் தேவரநாமாவில் மேலும் பல உதாரணங்களை கொடுத்து சொல்லியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

விஷவிக்கிதவகெ ஷட்ரஸ உணிஸலு பேகு (விஷம் கொடுத்தவனுக்கு அறுசுவை உணவளிக்க வேண்டும்), த்வேஷ மாடிதவன போஷிஸலி பேகு (த்வேஷம் செய்தவனை நாம் போஷிக்க வேண்டும்), ஹிந்தே நிந்திபரன்னு வந்திஸுதலிரபேகு (நமக்கு பின்னர் நின்று திட்டுபவர்களை, நாம் வணங்க வேண்டும்) என்றெல்லாம் சொல்லி, இதுவே தர்மம்.. அந்த தர்மத்தின் மர்மத்தை அறிந்து, ஸ்ரீபுரந்தரவிட்டலனை கொண்டாடி நாம் தன்யர் ஆகவேண்டும் என்று இந்த கீர்த்தனையில் கூறியதையே இந்த உகாபோகத்திலும் சொல்லியிருக்கிறார் என்று அறிய வேண்டும்.

***

**மனெயல்லி விப்ரபாதோதகத ஹெஸரில்லதித்தரெ**
**மனெயல்லி வேதசாஸ்த்ர த்வனி கர்ஜிஸதித்தரெ மத்தெ**
**மனெயல்லி ஸ்வாஹாகார ஸ்வதாகார மாடுவதில்லதித்தரெ**
**ஆமனெ ஸ்மஸானக்கெ ஸமவெம்ப புரந்தரவிட்டலா || 24**

வீட்டில் விப்ரரின் (அறிஞர்களின்) பாதோதகங்கன் இல்லையென்றால்; வீட்டில் வேத சாஸ்திரங்களின் த்வனி கர்ஜிக்கவில்லையென்றால்; வீட்டில் ஸ்வாஹாகாரங்கள் (ஹோம, யாகங்கள்), ஸ்வதாகார (பித்ரு காரியங்கள்) ஆகியவை செய்யவில்லையென்றால்; அந்த வீடு ஸ்மஷானத்திற்கு சமம் ஆகும் என்கிறான் ஸ்ரீபுரந்தரவிட்டலன்.

பகவானின் ஆணைகளான, பகவானின் சிறப்பு நற்குணங்களை விளக்குவதான / நமக்கு புரிய வைப்பதான வேத மந்திரங்கள் நம் வீட்டில் ஒலிக்க வேண்டும். அத்தகைய வேத பாராயணம், ஹோமங்கள், பித்ரு காரியங்கள் வீட்டில் தொடர்ச்சியாக செய்ய வேண்டும். மற்றும் கற்றறிந்த அறிஞர்கள் வீட்டிற்கு வருவதாக இருக்க வேண்டும். அவர்களின் பாதங்களைக் கழுவிய பாதோதகங்கள் நம் வீட்டில் பாய வேண்டும் / தரித்துக் கொள்ள வேண்டும்.. இவ்வாறெல்லாம் நடக்காத வீடுகள் சுடுகாட்டிற்கு சமம் என்று கூறுகிறார்.

நிஷ்காம கர்மங்களை நாம் செய்ய வேண்டும் என்று பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணன், அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும்போது கூறிய பற்பல விஷயங்களின் சாரமாக இந்த உகாபோகம் இருக்கிறது என்று அறியலாம்.

இவ்வாறு செய்வதன் மூலம், பாரதி ரமண முக்ய ப்ராணாந்தர்கதனான ஸ்ரீலட்சுமிதேவி உடனான ஸ்ரீஹரி மற்றும் இதர அனைத்து தேவதைகள், பித்ரு தேவதைகள் என நம் வீடு ஒரு கோயில் / க்ஷேத்திரம் ஆகிறது என்ற அனுஸந்தானம் இருக்க வேண்டும். அப்படியில்லையேல், என்ன ஆகிறது என்பதை ஸ்ரீதாஸரே சொல்லிவிட்டார்.

***

**ஒந்தக்ஷர பேளிதரெ ஊர்வியொளு அவரே குரு**
**எந்து இளியொளு பஹுமான மாடபேகு குந்ததெ**
**ஒந்து பாரியாதரு ஒந்திஷ்டு அவமான மாடிதரெ**
**குந்ததெ நூறு ஸ்வானஜன்மகோடி ஹொலெ ஜன்ம**
**தந்தீவனு புரந்தரவிட்டலா || 25**

நமக்கு ஒரேயொரு அக்ஷரத்தை (எழுத்தினை) யாரொருவர் சொல்லிக் கொடுத்திருந்தால், அவர் நம் குருவாகவே ஆகிறார். இந்த உலகில் என்றென்றும், எவ்வித சந்தேகமும் / சோர்வும் இன்றி, அவரை நாம் கௌரவிக்க வேண்டும். அப்படி ஏதாவது ஒரு முறை அவரை நாம் அவமானம் செய்துவிட்டால், நமக்கு அடுத்த நூறு பிறவிகள் நாய் பிறவியே கிடைக்கிறது. கோடி பிறவிகள் கெட்ட பிறவிகளே கிடைக்கின்றன. அவற்றை ஸ்ரீபுரந்தரவிட்டலன் நமக்கு அளிக்கிறான்.

குரு மகிமை இங்கு சொல்லப்படுகிறது. மோக்ஷத்திற்கு ஞானம் தேவைப்படுகிறது. அந்த ஞானத்தை வழங்குபவர், அவர் ஒரேயொரு எழுத்தினை நமக்கு சொல்லிக் கொடுத்திருந்தாலும், குரு எனப்படுகிறார். அத்தகைய குரு ஸ்தானம் எப்படிப்பட்டது, அவருக்கு நாம் வழங்க வேண்டிய பக்தி / மரியாதை எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்குவதான ஹரிதாஸர்களின் பாடல்கள் ஏராளமாக உண்டு.

குருவின் அருளினால் மட்டுமே அனைத்தும் கிடைப்பதற்கு சாத்தியம். 'முகுந்த பக்த்யை குருபக்தி ஜாயை' குருபக்தியினாலேயே ஹரிபக்தி கிடைக்கும். ஆகையால், 'குருவின குலாமனாகுவ தனக தொரெயதண்ண முகுதி' என்று கூறினார் ஸ்ரீதாஸர்.

அத்தகைய குருவை நாம் பக்தியுடன் வணங்கியவாறு, எள்ளளவும் அவமரியாதை செய்யாமல், மோக் ஷத்தின் மார்க்கத்தில் செல்வோமாக.

***

**கலியுகக்கெ ஸமயுகவு இல்லவய்ய**
**கலுஷஹர கைவல்யவு கரஸ்தவய்ய**
**ஜலஜலோசன நம்ம புரந்தரவிட்டலன்ன**
**பலகொண்டு ஸுகிஸி பாளுவுதகெ**
**கலியுகக்கெ ஸம யுகவில்லவய்யா ||26**

கலியுகத்திற்க்கு சமமான யுகம் வேறு இல்லை. தோஷமற்ற மோக்ஷ ஸ்தானத்தை அடைவது, (இந்த கலியுகத்திலிருந்து) மிகவும் சுலபம். தாமரைக் கண்ணனான நம் ஸ்ரீபுரந்தரவிட்டலனின் அருளால், நாம் இஹ லோகத்தில் சுகமாக வாழ்வதற்கு, நமக்கு கலியுகத்தை தவிர வேறு யுகம் எதுவும் சுலபம் இல்லை ஐயா.

கலியுகத்தில் இருக்கும் சிறப்பு குணங்களை இங்கு நிரூபிக்கிறார். புராணத்தில் 'கலௌ சங்கீர்த்ய கேசவம்' என்றது போல, ராஜர் இங்கு ஸ்ரீஹரியை நினைத்தால் பாவங்கள் அனைத்தும் நீங்கி மோட்ச பதவியையே கொடுக்கிறான் என்கிறார். இதையே ஸ்ரீபுரந்தரதாசர் 'கலியுகதலி ஹரி நாமவ நெனெதரே குலகோடிகளு உத்தரிசுவுது' என்றார். அவனை நினைத்தாலே சாயுஜ்ய மோட்சம் கிடைக்கும் என்கிறார். ஒரு இடத்தில் ஸ்ரீவாதிராஜர் 'ஹரிபதவ நெனெவங்கெ நரகத பயவில்ல' என்றார்.

ஸ்ரீவியாசராஜரும் இதைப் பற்றி சொல்லும்போது:
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண எந்து மூரு பாரி நெனெயிரோ
சந்துஷ்டனாகி முகுதி கொட்டு மிக்க பார ஹொருவனோ || என்றார்.

ஸ்ரீஹரியின் நாமங்களின் மகிமை, அனைத்தையும் கொடுக்க வல்லது என்றே அனைவரும் பாடுகின்றனர். எந்த காலத்திற்கும் நிஸ்சல தூய்மையான பக்தியுடன், நற்சிந்தனையுடன் ஸ்ரீஹரியை நினைக்க வேண்டுமென்பதே அனைவரின் விருப்பமாக இருக்கிறது.

***

**அணுவிகெ அணுவாகி கனகெ கனவாகி**
**குணத்ரய தத்வக்கெ மீரித தொரெயாகி**
**த்ருண மொதலாகி மேரு பரியந்த இருவே நீனாகி**
**குணநிதி புரந்தரவிட்டல நின்ன மஹிமெ**
**எணிகெ மாடுவர்யாரோ என்னப்பனெ || 27**

அணுவில் அணுவாக, மஹத் பொருட்களில் மஹத்தாக இருப்பவன் ஸ்ரீஹரி. ஸத்வ, ரஜஸ், தம என்பதான மூன்று குண தத்வங்களுக்கும் மீறியவனாக இருப்பவன். ஒரு சிறிய புல் முதலாக மேரு பர்வதம் வரையிலான அனைத்திலும் வ்யாப்தியை கொண்டிருப்பவன். நற்குணங்களின் நிதியான ஸ்ரீபுரந்தரவிட்டலனின் மகிமையை யாராலும் எண்ணவே முடியாது.

ஸ்ரீஹரியின் வ்யாப்தியை விளக்கும் உகாபோகம். மிகவும் அற்புதமான சக்தியுள்ள ஸ்ரீஹரியே சர்வோத்தமன். அனைத்து ஜீவர்களும் அவனின் சேவகர்கள் - தாசர்கள். அவன் இல்லாமல் யாரும், எப்போதும், எந்த செயல்களையும் செய்யமுடியாது. இந்த உலகத்தில் அனைத்து இடங்களிலும் நிலைத்திருந்து, அனைத்தையும் செய்விப்பவனாக இருக்கிறான் ஸ்ரீஹரி. அவனே செய்பவன், செய்விப்பவன். படைத்தல் முதலான அஷ்ட - கர்த்ருத்வத்திற்கு அதிபதி. புருஷோத்தமன், பிரம்மாண்டத்திலும், புருஷ ரூபத்தினால் நம் தேகத்திலும் நிறைந்திக்கிறான், அணுவிலும் சரி மிகப் பெரிய பொருட்களிலும் சரி நிறைந்திருக்கிறான். அவன் இல்லாத இடம் என்பதே இல்லை. இது ஹரியினுடையது இல்லை என்பதே இல்லை.

இப்படிப்பட்ட ஸ்ரீஹரியின் வ்யாப்தியைப் பற்றி மேலும் விரிவாக அறிய, ஸ்ரீஹரிகதாம்ருதஸாரத்தில் வ்யாப்தி ஸந்தியை படிக்கலாம்.

***

**நினகெ நீனே மோஹ நினகெ நீனே ப்ரீதி**
**நினகெ நீனே பக்த நினகெ நீனே த்வேஷி**
**நினகெ நீனே ஞானி நினகெ நீனே மாள்பே**
**நினகெ நீனே புரந்தரவிட்டலா || 28**

உனக்கு நீயே பிடித்தமானவன். உனக்கு நீயே அன்பு செலுத்துபவன். உனக்கு நீயே பக்தன். உனக்கு நீயே த்வேஷம் செய்பவன். உனக்கு நீயே ஞானி. உனக்கு நீயே அனைத்து. ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

ஸ்ரீஹரியின் புகழை சொல்லி முடியாது. ரமா பிரஹ்மாதிகளாலும் சொல்லி விளக்க முடியாதது. அறிய முடியாத, பார்க்க முடியாத அற்புத ஆளுமை. 'ஏகமேவ அத்விதீயம் பிரஹ்ம' என்று வேதங்கள் புகழும், நற்குணங்களின் கடல், ஸ்ரீஹரி. அனைத்து செயல்களையும் செய்பவன், அனைவரிலும் இருப்பவன், அனைத்து இடங்களிலும் இருப்பவன், ஸ்வதந்திரன் ஸ்ரீஹரி. இந்த தத்வத்தை மிக அழகாக இந்த உகாபோகத்தில் சொல்லியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீஹரி எதற்காகவும், யாரையும் எதிர்பார்க்காதவன். அனைத்தையும், தன் இஷ்டப்படியே, தானாகவே செய்யத் தக்கவன். அப்படியே செய்பவன். ஆகவே, அவனுடைய நிலையில், அவனுக்கு சமமாகவோ, அவனைவிட உயர்ந்ததாகவோ யாரும் இல்லை என்று விளக்குவதான, ஸ்ரீஹரியின் ஸர்வோத்தமத்வத்தை ஹரிதாசர்கள் தம் சிறிய கிருதிகளில் இப்படியாக விளக்கியிருப்பது மிகவும் அற்புதமாக இருக்கிறது.

***

**நின்னந்த தந்தெ எனகுண்டு நினகில்ல**
**நின்னந்த ஸ்வாமி எனகுண்டு நினகில்ல**
**நின்னந்த தொரெயொப்ப எனகுண்டு நினகில்ல**
**நீனே பரதேஶி நானே ஸ்வதேஶி**
**நின்ன அரஸி லக்ஷ்மி எனகெ தாயியுண்டு**
**எனகித்த தாயி தந்தெ நினக்யாரு**
**தோரோ புரந்தரவிட்டலா ||29**

ஸ்ரீஹரியைக் குறித்தான, தினமும் அனைவரும் சொல்ல வேண்டிய ஸ்தோத்திரமாக இது இருக்கிறது.
த்வமேவ மாதா ச பிதா த்வமேவ |
த்வமேவ பந்துஸ்ச சகா த்வமேவ |
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ |
த்வமேவ சர்வம் மம தேவதேவ ||

ஸ்ரீமதாசார்யார், த்வாதஷ ஸ்தோத்திரத்தில் சொல்வது இவ்வாறு:
ஹரிரேவ பரோ ஹரிரேவ குரு: ஹரிரேவ ஜகத் பித்ருமாத்ருகதி:

இதையே ஸ்ரீபுரந்தரதாஸர் இந்த உகாபோகத்தில் 'நிந்தா ஸ்துதி' வடிவில் பாடியிருக்கிறார்.

ஸ்ரீஹரியே, உன்னைப் போன்ற ஒரு தந்தை / கடவுள் / முதலாளி எனக்கு இருக்கிறார். உனக்கு இல்லை. உனக்கு நாடென்று ஒன்று இல்லை. எனக்கு (ஸ்ரீஹரியின்) இருப்பிடம் உள்ளது. உனது அரஸியான லக்ஷ்மிதேவி போன்ற தாய் எனக்கு உண்டு. உனக்கு இல்லை. எனக்குக் கிடைத்ததைப் போன்ற தாய் / தந்தையர் உனக்கு யார் இருக்கிறார்கள்?. அப்படி இருந்தால் காட்டுவாயாக, ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

இதிலிருந்து நம் ஸித்தாந்தக் கருத்துக்களான ஹரி ஸர்வோத்தமத்வம், ஜீவ - ஈஷ பேதம், ஈஷனின் ஸர்வ ஸ்வதந்த்ரத்வம், ஜீவனின் அஸ்வதந்த்ரத்வம் - ஆகியவற்றை விளக்கியிருக்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

***

**ஒந்து காலதல்லி ஆனெ குதுரெ மேல்மெரெஸுவி**
**ஒந்து காலதல்லி பரிகாலல்லி நடெஸுவி**
**ஒந்து காலதல்லி ம்ருஷ்டான்ன உணிஸுவி**
**ஒந்து காலதல்லி உபவாஸவிரிஸுவி**
**நின்ன மஹிமெயனு நீனே பல்லியோ**
**பன்னங்கஶயன ஸ்ரீபுரந்தரவிட்டலா ||30**

ஸ்ரீஹரியின் கருணை இருந்தால் என்ன நடக்கும், கருணை தப்பினால் என்ன ஆகும் என்பதை மிகவும் அற்புதமாக விளக்கியிருக்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர். 'இட்டாங்கே இருவேனோ ஹரியே என்ன தொரெயே' என்று ஸ்ரீஸ்ரீபாதராஜர் பாடிய தேவரநாமாவின் கருத்துக்களையே இங்கு சுருக்கமாக சொல்லியிருக்கிறார்.

ஒரு சமயம் நம்மை யானை, குதிரையில் ஏற்றி நடத்துவாய்; மற்றொரு சமயம் வெறும் காலில் நடக்கச் செய்வாய். ஒரு சமயம் நல்ல சுவையான உணவுகளை உண்ண வைப்பாய்; மற்றொரு சமயம் எதுவும் கிடைக்காமல் உபவாஸம் இருக்கச் செய்வாய். ஸ்ரீபுரந்தரவிட்டலனே, ஸர்ப்பத்தில் படுத்திருப்பவனே, உன்னுடைய மஹிமையை நீயே அறிவாய்.

நாம் அஸ்வதந்த்ரர்கள்; ஸ்ரீஹரி மட்டுமே ஸ்வதந்த்ரன். நமக்கு கிடைப்பவை / கிடைக்காதவை அனைத்தும் அவனுடைய இஷ்டத்தினாலேயே. அவன் கொடுத்தால், நாம் அதனை ஏற்றுக் கொண்டு, அந்த விஷயம் கிடைத்ததால் மிகவும் அதிகமாக மகிழ்ச்சி அடையாமலும்; அவன் எதையும் கொடுக்கவில்லை என்றால், நாம் அதனையும் ஏற்றுக் கொண்டு, அதற்காக அதிகமாக துன்பம் அடையாமலும், ஸ்ரீபகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் 'நிர்த்வந்தோ' என்று சொன்னதைப் போல, சுகதுக்கம் இரண்டையும் சரிசமமாகப் பார்த்தவாறு, அவனையே சரணடைய வேண்டும் என்கிறார் ஸ்ரீதாஸர்.

***

**எந்திகாதரு நின்ன பாதாரவிந்தவே கதி**
**யெந்து நம்பிதேனோ பந்து பளகவ பிட்டு**
**பந்தெ நின்ன மனெகிந்து மந்தரதர கோ**
**விந்த புரந்தரவிட்டலனே நீ பந்து || 31**

ஸ்ரீஹரியே, எப்போதும் உன்னையே நம்பியிருக்கிறேன். உன் பாதாரவிந்தங்களையே பிடித்திருக்கிறேன். என் உற்றார் உறவினர் அனைவரையும் விட்டு உன்னிடம் சரணடைந்திருக்கிறேன். மந்தர மலையைப் பிடித்து, கோகுல மக்களை காத்தவனே, கோவிந்தனே, ஸ்ரீபுரந்த்ரவிட்டலனே, என்னை காப்பாயாக.

ஸ்ரீஹரியின் நவவித பக்திகளில் ஒன்றான 'பாத ஸேவன' பக்திக்கு உதாரணமாக சொல்லக்கூடிய உகாபோகம் இது. ஸ்ரீத்ரிவிக்ரம பண்டிதாசார்யார் இயற்றிய 'விஷ்ணு ஸ்துதியில்' ஸ்ரீஹரியின் பாத மகிமை இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

பகவந்தனின் பாதமும்கூட பிரம்மருத்ராதி தேவதைகளின் ப்ரீதிக்கு பாத்திரமாகின்றன. ஸகல தேவதைகள் தலை குனிந்து வணங்கும்போது, அவர்களின் விஷயத்தில் எங்கும் இல்லாத அன்பு காட்டுகிறது. சில தேவதைகளுக்கு பாதமே சிக்காமல், தூரத்திலிருந்தே வணங்கும் சந்தர்ப்பம் வருகிறது. அப்போது பாதமே அவர்களிடம் சென்று, அவர்களை மகிழ்வித்து அருள்கிறது. இவ்வாறு நிரந்தரமாக தேவதைகளின் அருளுக்காக, பாதங்களை லட்சுமிதேவி தன்னில் நிலைத்திருக்குமாறு விரும்புகிறாள். பதி ஸேவையை எந்த நொடியிலும் விடக்கூடாது என்று நினைக்கிறாள். காலடி மேல் காலடி வைத்தவாறு லட்சுமிதேவி வந்தால், கால் சலங்கைகளிலிருந்து மதுரமான சங்கீதம் வெளிவந்தது. அந்த சங்கீதத்திற்கு, அவளின் பதிசேவைக்கு மயங்கிய ஹரிபாதங்கள், தேவதைகளின் சமூகத்திலிருந்து லட்சுமிதேவியிடம் நகர்ந்து வருகிறது. ஜகன்மாதையை ப்ரீதிப்பதற்காக வந்த இத்தகைய விஷ்ணுபாதம் என்னை காக்கட்டும்.

***

**ஸ்வேதத்வீபதி அமுக்தஸ்தளதல்லி சதுரமுக பவ இந்த்ராதி**
**ஸுரரு பூபார இளுஹபேகெந்து நின்ன பேடிகொண்டாடெ பஹு**
**காலதல்லி மத்ஸ்யகூர்ம வரஹனாகி துஷ்டர தரிதொட்டி**
**ஸிஷ்டர பாலிபனெம்ப பிருது ஸல்லுவுது நினகெ**
**சரணாகத வஜ்ரபஞ்ஜர புரந்தரவிட்டலரேயா || 32**

ஸ்வேதத்வீபத்தில் நீ இருந்தபோது, அத்தகைய அமுக்த ஸ்தளத்தில், பிரஹ்ம, ருத்ர, இந்திராதி தேவதைகள் அனைவரும் வந்து, பூமியின் பாரத்தை இறக்க வேண்டும் என்று உன்னிடம் வேண்டி, ஸ்தோத்திரம் செய்தபோது, நீ வெவ்வேறு காலங்களில், மத்ஸ்ய, கூர்ம, வராக போன்ற பல அவதாரங்களை எடுத்து, துஷ்டர்களை ஸம்ஹரித்து, உன் பக்தர்களை காத்தாய். பக்தவத்ஸல போன்றதான பெருமை உனக்கே பொருந்தும். சரணாகதி அடைந்தவர்களை காப்பவனே, ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

துஷ்டர்களின் / அசுரர்களின் அட்டகாசங்கள் பூமியில் அதிகரித்தபோது, பிரஹ்மாதி தேவதைகள் ஸ்ரீஹரியின் சென்று முறையிட்டனர். அப்போது ஸ்ரீஹரி அவர்களுக்கு அபயம் அளித்து, தன்னுடைய சிறந்த அவதாரங்களால், அசுரர்களைக் கொன்று, தன் பக்தர்களை காத்தான். இத்தகைய ஸ்ரீஹரியின் மகிமைகளை அறிந்து அவனை கொண்டாட வேண்டும் என்கிறார் ஸ்ரீதாஸர்.

'தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே' என்று பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணனே கூறியிருப்பதைப் போல, அதர்மம் அதிகரிக்கும்போது, தர்மத்தை மறுபடி நிலைநாட்ட, அவனே அவதாரம் எடுத்து வருகிறான்.

அப்படி அவன் எடுத்த பற்பல அவதாரங்களில் எவ்வித பேதங்களையும் பார்க்காமல், அனைத்தும் ஸ்ரீஹரியின் முழுமையான ரூபங்களே என்று நினைத்து, ஸர்வோத்தமனான அவனை போற்றிக் கொண்டாட வேண்டும் என்பதே கருத்து.

***

**ஒடவெயனெ களிஸிதரெ சோரர பயவுண்டு**
**ஸொபகுள்ள மடதியென களிஸிதரெ ஜாரர பயவுண்டு**
**பொடவியனு களிஸிதரெ பரராஜர பயவுண்டு**
**நின்ன பாதவனெ களிஸிதரெ மத்யார பயவில்ல புரந்தரவிட்டலா || 33**

சொத்தினை அதிகமாக சேர்த்தால், திருடர்களின் பயம் இருக்கிறது. அழகான மனைவியை கட்டினால், அவளை மயக்கும் பிறரின் பயம் இருக்கிறது. அதிக பூமியை சேர்த்தால், பிற அரசர்களின் பயம் இருக்கிறது. ஆனால், ஸ்ரீபுரந்தரவிட்டலனே, உன்னுடைய பாதங்களை சேர்த்தால் (அதனை அடைந்தால்), யாருடைய பயமும் இல்லை.

ஸ்ரீஹரி பாதங்களின் மகிமையை சொல்லக்கூடிய மற்றொரு உகாபோகம். ஸ்ரீத்ரிவிக்ரம பண்டிதாசார்யார் தனது விஷ்ணு ஸ்துதியில் ஸ்ரீஹரியின் பாத மகிமைகளை இவ்வாறு சொல்கிறார்.

பகவந்தனின் பாத கமலங்களின் ஒளி என் இதய கமலத்தை கழுவட்டும். மலரட்டும். ஹ்ருதயத்தில் இருக்கும் அனைத்து பாவங்களும் பரிகரிக்கட்டும். ஞானிகள் இவ்வாறு சிந்திக்கின்றனர். ஆராதனை செய்கின்றனர். பகவந்தனின் கால்களின் தியானத்தினாலேயே துக்கத்தை போக்கிக் கொள்கின்றனர். அனைத்து எதிரிகளை வெல்கின்றனர். தம் மனதினை பகவந்தனின் பாதங்களின் தேஜஸ்ஸின் ஒளி சிறைபிடித்திருக்கிறது. இத்தகைய ஒளிபொருந்திய பாதங்களில் நான் செய்திருக்கும் அனைத்து கர்மங்களையும் சமர்ப்பணம் செய்கிறேன். பாதங்களின் ஒளி நெருப்பைப் போல இருக்கிறது. இவற்றில் அனைத்து கர்மங்களை சமர்ப்பித்தபோது புடம் போட்ட தங்கத்தைப் போல சுத்தமாகிறது. இத்தகைய பகவந்தனின் கால்கள் என்னை பவித்ரமாக்கட்டும்.

***

**ஏகைக மூருதி லோகக்கெல்ல**
**ஈதனெ மூருதி கோகுலதொளகெல்ல**
**கோபால மூருதி ஏக நாம புரந்தரவிட்டலா**
**நமகொந்தே மூருதி || 34**

உலகிற்கு இருக்கும் ஒரே மூருதி (ஸர்வோத்தமன்). இவனே கோகுலத்தில் இருக்கும் மூருதி. கோபால மூருதி. ஸ்ரீபுரந்தரவிட்டலனே. அவனே நம் அனைவருக்கும் இருக்கும் ஒரே கதி.

ஸ்ரீஹரியே ஸர்வோத்தமன். அவன் மட்டுமே நமக்கு கதி என்பதை தெரிவிப்பதான ஹரிதாஸர்களின் க்ருதிகளில் இந்த உகாபோகமும் ஒன்று. தத்வவாதாவின் முக்கிய கோட்பாடான இதனையே ஹரிதாஸர்கள் தொடர்ந்து தமது க்ருதிகள் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

எப்போதும், ஸ்ரீஹரியே சர்வோத்தமன், படைத்தல் முதலான அஷ்டகர்த்ருத்வ, அனைத்தையும் காப்பாற்றுபவனாக, சர்வஸ்வாமியாக இருக்கிறான். அனைத்துமான ஸ்ரீஹரி ஞானானந்தமயன் என்று, அனைத்து இடங்களிலும் வியாப்தனாக இருக்கிறான். அனைத்து ஜீவர்களும் அவனின் சேவகர்களே ஆவர். உண்மையான தூய்மையான பக்திக்கு மட்டுமே தரிசனம் அளித்து, நித்யசுகமான சத்கதியைக் கொடுப்பவனாகிறான். பகவத் த்வேஷிகளை அவரவர்களின் தகுதிக்கேற்ற இடங்களில் வைக்கிறான். வேதங்களினால் போற்றப்படும் புருஷோத்தமன் ஆகிறான். ஜீவர்களின் ஸ்வரூபத்திற்கேற்ப அவரவர்களின் கதியை தீர்மானிக்கிறான்.

***

**ஸிக்கிதெயெலோ ஸிரிகிருஷ்ணா**
**ஸிக்கிதெயெலோ நீ கள்ளர குருவே**
**ஸிக்கிதெயெலோ ஸிரிகிருஷ்ணா**
**டக்கிஸிகொண்டரூ பிடெ புரந்தரவிட்டலா || 35**

சிக்கிக் கொண்டாயே ஸ்ரீகிருஷ்ணா, திருடர்களின் தலைவனே, ஸ்ரீகிருஷ்ணா, நீ எங்கு மறந்திருந்தாலும் உன்னை நான் விடமாட்டேன், ஸ்ரீபுரந்தரவிட்டலா.

மகனான ஸ்ரீகிருஷ்ணனின் குறும்புகளை பொறுக்க முடியாமல், தாய் யசோதை அவனை பிடிக்க பெரும்பாடு பட்டு, கடைசியில் அவனை பிடித்துவிட்டாள். அப்போது அவனைக் குறித்து சொல்வதாக இந்த உகாபோகம் இருக்கிறது.

பகவந்தனான மகாவிஷ்ணு ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்து அனேக பாலலீலைகளை காட்டியிருக்கிறான். கோபியர் யசோதையிடம் வந்து, ‘கோபியே கேள் உன் மகனின் குறும்பு’ என்று புகார் கூறுகின்றனர். இந்த புகார்களின் பின்னால், ஸ்ரீகிருஷ்ணனை திட்டும் நோக்கம் இருப்பதில்லை. அந்த லீலைகளைக் கண்டு அதனால் தமக்கு உண்டான சுகத்தை யசோதையிடம் வந்து பகிர்ந்து கொள்வதைப் போல தோன்றுகிறது. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மனின் ஒவ்வொரு லீலைகளும் மோட்சத்தைக் கொடுப்பதாக இருக்கிறது.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மனின் அனைத்து பால லீலைகளையும் ஹரிதாஸர்கள் பற்பல பதங்களில் பாடி வர்ணித்திருக்கின்றனர். அந்த அனைத்து பத்யங்களிலும் ஸ்ரீகிருஷ்ணனின் அதிஅற்புதமான மகிமையே நமக்கு காணக்கிடைக்கிறது.

***

**அன்யரொப்பர காணெ மன்னிபர என்ன ஆ**
**பன்ன ரக்ஷகனெ பரிபாலிஸு இன்னு**
**பன்னங்கஶயன ஸ்ரீபுரந்தரவிட்டலனெ || 36**

என்னை மன்னிப்பவர்கள் (காப்பவர்கள்) என நான் வேறு யாரையும் காணேன். பக்தர்களை காப்பவனே. என்னை காப்பாயாக. ஸர்ப்பத்தின் மேல் படுத்திருப்பவனே. ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

ஸ்ரீஹரி ஸர்வோத்தமத்வம், ஜீவனின் அல்பஜ்ஞத்வம், ஈஷ - தாஸ பாவம், ஸ்ரீஹரியின் ஸ்வதந்த்ரத்வம், ஜீவனின் அஸ்வதந்த்ரத்வம், ஈஷ - ஜீவ பேத - என்பது போன்றதான தத்வவாதாவின் பல கோட்பாடுகளை இந்த ஒரேயொரு சிறிய உகாபோகத்தில் மிகவும் எளிமையாக புரிய வைத்திருக்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர் என்பதை பார்க்கிறோம்.

ஸ்ரீஹரியின் அத்யந்த பக்தர்கள், வாழ்க்கையில் எதையும் கேட்பதில்லை. அனைத்திற்கும் ஸ்ரீஹரியே காரணம் என்பர். இந்த பக்தர்களின் மனது - அசலம் (சலனப்படாதது), தூய்மையானது மற்றும் எப்போதும் திருப்தியுடன் இருப்பது. ஸ்ரீஹரியைத் தவிர வேறெதையும் எப்போதும் கேட்கமாட்டார்கள்.

நின்னனே நம்பிதனோ நீ நன்ன சலஹய்யா -- இது புரந்தரதாசரின் வாக்கு. வேறு யாரும் இல்லாமல் உன்னை மட்டுமே சரணடைகிறேன் என்றால் - ‘அன்யதா ஷரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம’ - என்பதுபோல அனைத்து ஜீவராசிகளையும் காப்பாற்றுபவன் அவன் ஒருவனே. அதற்கே இப்படி பாடினார் தாஸர்.

***

**நின்ன நாம பண்டாரவ கத்த கள்ள நானு**
**நின்ன பக்தியெம்போ ஸங்கோலெயனிக்கி**
**நின்ன தாஸர கையல்லி என்ன ஒப்பிஸிகொட்டு**
**நின்ன முத்ரிகெயிந்த காஸி படிஸு கிருஷ்ண**
**நின்ன வைகுண்டதுர்கதொளகென்ன ஸெரெயிட்டு**
**சென்னாகி ஸலஹோ ஸ்ரீபுரந்தரவிட்டலா ||37**

ஹரிதாஸர்கள் தங்களை ஸ்ரீஹரியின் தாயாக, குழந்தையாக, கணவனாக, மனைவியாக என பல்வேறு விதங்களாக கற்பனை செய்து ஹரிதாஸர்கள் பாடியிருக்கின்றனர். ஆனால், இந்த சிறிய உகாபோகத்தில் ஸ்ரீபுரந்தரதாஸர் தன்னை ஒரு திருடனாக - ஸ்ரீஹரியின் நாமத்தை திருடிய திருடனாக - சொல்லிக் கொண்டு, என்னை கைது செய்வாயாக என்று பகவானிடம் வேண்டிக் கொள்கிறார்.

உன்னுடைய பெயர் என்னும் கருவூலத்தை திருடிய திருடன் நான். உன்னுடைய பக்தி என்னும் சங்கிலியை என் கையில் போட்டு கட்டி, என்னை உன்னுடைய தாஸரின் கையில் ஒப்படைத்துவிடு. உன் முத்ரிகையினால் என்னை தொந்தரவு செய் கிருஷ்ணா. உன்னுடைய வைகுண்ட மாளிகையில் என்னை சிறையில் வைப்பாயாக. வைத்து என்னை நன்றாக பார்த்துக் கொள்வாயாக ஸ்ரீபுரந்தரவிட்டலா.

ஸ்ரீஹரியே நமக்கு மோக்ஷத்தை கொடுப்பவன். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இங்கு சொல்வதாக புரிந்து கொள்ள வேண்டும். அவனின் நாமத்தை திருட வேண்டும் (தொடர்ந்து சொல்ல வேண்டும்). ஹரிதாஸர்களின் சங்கம் செய்ய வேண்டும். அவனுடைய முத்ரிகை உடைய பாடல்களை பாட வேண்டும். அப்படி செய்தால், வைகுண்டத்தில் நம்மை சிறை வைப்பான் ஸ்ரீஹரி என்கிறார் ஸ்ரீதாஸர்.

***

**ஹெத்த மக்களு மூர்க்கராதரெ தாயி தந்தெ**
**எத்தி இளுஹதெ திப்பெயொளு ஒரகிஸுவரெ கோவிந்த**
**மத்தெ நின்ன தாஸ நா அஜ்ஞானியாதரெ**
**கர்த்ரு நீ பொரெயதிருவுதேனோ புரந்தரவிட்டலா ||38**

திப்பெ = தேவையற்ற பொருட்கள் போட்டு வைக்கும் அறை / கிடங்கு.

பெற்ற குழந்தைகள் அடம் பிடித்தால், பெற்றவர்கள் அவர்களை தூக்கிக் கொஞ்சாமல், அவர்களை கிடங்கில் போட்டு மறந்து விடுவார்களோ? (மாட்டார்கள்). ஹே கோவிந்தனே. அதைப் போல, உன்னுடைய தாஸனான நான் அஞ்ஞானியானால், என்னை படைத்தவனான நீ என்னை காக்காமல் இருப்பது ஏனோ?. ஹே புரந்தரவிட்டலனே.

எப்போதும் ஸ்ரீஹரியின் சிந்தனையிலேயே இருந்து, அவன் சொல்படியே கேட்டு நடப்பவன் நான். ஆனால், கர்மபலன்களால் அஞ்ஞானமும் சேர்ந்திருக்கிறது. என்னை படைத்தவனான நீயே அந்த அஞ்ஞானத்தை போக்க வேண்டும். உன்னுடைய தாஸன் நான். என்னை கவனிக்காமல் புறக்கணிப்பது உனக்கு நியாயமா? என்பது போல உரிமையாக தன்னுடைய ஈஸனான ஸ்ரீபுரந்தரவிட்டலனிடம் கேட்பதாக இருக்கிறது இந்த உகாபோகம்.

‘மாதா ந்ருஸிம்ஹஸ்ச பிதா ந்ருஸிம்ஹோ...’ என்று சொல்லும் ஸ்லோகத்தைப் போல, ஸ்ரீஹரியே நம் தாய், தந்தை, நம் அனைத்தும் என்று அவனிடம் தாஸனாக சரணாகதி அடைவதையும் குறிக்கிறது இந்த உகாபோகம்.

***

**படவரொளகெ என்னிந்தாரு படவரல்ல**
**கொடுவரொளகெ நின்னிந்தாரு கொடுவரில்ல**
**த்ருடபகுதி எனகெ நின்னல்லி கல்பிஸி**
**பிடதெ ஸலஹோ புரந்தரவிட்டலா ||39**

கடும் பாமரனில் என்னைப் போன்றவர் வேறு யாரும் இல்லை. கொடுக்கும் தயாளுகளில் உன்னைப் போன்றவர் யாருமில்லை. உன்னில் எனக்கு த்ருட பக்தியைக் கொடுத்து, கைவிட்டுவிடாமல் காப்பாற்றுவாயாக, ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் கடமைகள் நம்மை கட்டிப்போடுகின்றன. எதையும் விட முடியாத சூழ்நிலை. இப்படி இருக்கையில் மனதை ஒருநிலைப்படுத்துவது எப்படி? இதுவே ஸம்ஸாரம். இந்த ஸாகரத்தில் மூழ்கித் தவிக்கும் நாம் யாரிடம் முறையிட வேண்டும்? இது மிகவும் சுலபம் என்கிறார் தாஸர். யார் நம்மை காப்பாற்றவல்லரோ, யாருக்கு ஸம்ஸாரம் என்பது இல்லையோ, அவனை கைபிடிக்க வேண்டும். அவனே ஸ்ரீஹரி. இதனை அறிந்த தாஸர், ஸ்ரீஹரியை வேண்டும் வழியை தெரிவிக்கிறார்.

அன்யதா சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம |
தஸ்மாத் காருண்ய பாவேன ரக்ஷரக்ஷ ரமாபதே ||
என்பதான ஸ்லோகத்தின் ஸாரமாகவே இந்த உகாபோகம் உள்ளது.

எப்போதும் உன் நினைவிலேயே இருக்கிறேன். உன்னைப் பற்றி பாடியவாறே இருக்கிறேன். உன்னிடம் பக்தி, உன்னைப் பற்றியதான க்ஞானம் ஆகியவற்றை தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறேன். ஆகவே, என்னைப் போன்ற ஏழை வேறு யாரும் இல்லை. இவை அனைத்தையும் கொடுக்கக் கூடியவன் நீ ஒருவனே. ஆகவே, உன்னைப் போன்ற அருளாளன் வேறு யாரும் இல்லை.

***

**நின்ன நுடிதெ நானு நின்ன பாடிதெ நானு**
**நின்ன காடிதெ நானு நின்ன முந்தெ**
**என்ன படதன பேளிகொண்டு**
**அன்னந்த பகெயிந்த கொண்டாடுவேனு விட்டல**
**என்ன பார நின்னது அனந்த க்ஷணக்கெ**
**முன்னைபேளுவுதெல்ல உபசாரவோ ஸ்வாமி**
**கன்ன பண்டரிராய ரன்ன ப்ரஸன்ன ஸம்**
**பன்ன மதியகொடு புரந்தரவிட்டலா ||40**

உன்னைப் பற்றி நான் பேசினேன். நான் உன்னைப் பற்றி பாடினேன்.
உன்னை தொந்தரவு செய்தேன், நான் உன் முன்னால்
என்னுடைய ஏழ்மையப் பற்றி சொல்லிக் கொண்டு
உன்னை பற்பல விதமாக சொல்லி கொண்டாடுவேன் விட்டலனே
என்னுடைய பாரம் (கஷ்டங்கள்) அது உன்னுடையது எப்போதுமே
கூறிய மற்ற அனைத்தும் உபசாரங்களே ஸ்வாமி
ஸர்வோத்தமனே பண்டரிராயனே. மிகச் சிறந்தவனே. ப்ரஸன்னனே.
சிறந்ததான மதியை எனக்குக் கொடு ஸ்ரீபுரந்தரவிட்டலனே

ப்ரார்த்தனை ரூபமாக இருக்கும் உகாபோகம் இது. அனைத்தும் ஸ்ரீஹரியின் வசத்திலேயே இருக்கின்றன. அவன் ஈசன். நாம் அவனது தாஸன். அவனே அனைத்தையும் நடத்துகிறான். நடத்துகிறான் என்பதே உண்மையாக இருக்கும்போது, நான் செய்தேன், நான் பாடினேன் என்று கூறியதெல்லாம் வெறும் உபசார வார்த்தைகளே என்று கூறி, சரணாகதி தத்துவத்தை மிகவும் அழகாக இந்த உகாபோகத்தில் பாடியிருக்கிறார் ஸ்ரீதாஸர். ஸ்ரீஹரியை அறிவதற்கான மதியைக் கொடு என்பது மட்டுமே நாம் வேண்டிக் கொள்ள வேண்டும் என்பதையும் இதன் மூலம் நமக்குத் தெரிகிறது.

***

**எரகி பஜிபெனோ நின்ன சரணஸன்னிதிகெ**
**கருணதிந்தலி நின்ன ஸ்மரணெய எனகித்து**
**மரெயதெ ஸலஹோ ஸ்ரீபுரந்தரவிட்டலா ||41**

உன்னுடைய சரண சன்னிதியில் நான் மிகவும் மன்றாடி கேட்டுக் கொள்கிறேன். மிகவும் கருணையுடன் உன்னுடைய ஸ்மரணையை எனக்கு அளித்து, என்னை மறந்துவிடாமல் காப்பாற்றுவாயாக ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

பிறந்து வந்த மனிதனின் கடமை, நிரந்தரமாக ஸ்ரீகிருஷ்ணனின் ஸ்மரணையை செய்வதே. ஸ்ரீஹரியே ஜீவனின் உயிர். இத்தகைய ஸ்ரீஹரியின் ஸ்வரூபத்தை அறிந்து, அனைவரும் ஸ்ரீஹரியின் ஸேவகர்கள், அவர் பிறப்பு, இறப்பு இல்லாத ஸர்வ ஸ்வாமி. அவரின் நிரந்தர ஸ்மரணை ஸம்சார பந்தத்தை நீக்குகிறது என அறியவேண்டும்.

ஸ்ரவண, மனன, நிதித்யாஸன - ஸ்ரவண (கேட்டல்) இதுவே முதலில். பின்னர் இதிலிருந்து ஸ்மரணை (நினைத்தல்). இது ஸ்ரீஹரியைப் பற்றியே இருக்கவேண்டும். இத்தகைய ஹரி நாமஸ்மரணையை செய்யாதவன், இருந்தால் என்ன, இல்லையென்றால் என்ன - என்றும் பல ஹரிதாஸர்கள் பல்வேறு க்ருதிகளில் தெரிவித்திருக்கின்றனர். ஆகவே, கலியுகத்தில் ஹரி நாமஸ்மரணை அனைவருக்கும் கட்டாயம். எழும்போது, படுக்கும்போது, நடுவில் முழிப்பு வரும்போது, எப்போதும் நம் மனதில் ‘ஹரே ராம ஹரே ராம’ என்று அவன் நினைவு வரவேண்டும். யாராக இருந்தாலும், எங்கு இருந்தாலும், எந்த நிலையிலும், ஸ்ரீஹரியின் நாமஸ்மரணை இருக்கவேண்டும் என்றனர் ஹரிதாஸர்கள்.

***

**க்ஷீரஸாகரக்கெ ஸ்ரீரமண பந்தந்தெ**
**ப்ரஹ்லாதகெ ஒலிது நரஸிம்ஹ பந்தந்தெ**
**பகீரதன மனெகெ ஸ்ரீகங்கெ பந்தந்தெ**
**முசுகுந்தன மனெகெ முகுந்த பந்தந்தெ**
**விதுரன மனெகெ ஸ்ரீகிருஷ்ண பந்தந்தெ**
**லக்ஷ்மீகாந்த புரந்தரவிட்டல பரலு நன்ன நாலிகெ**
**துதியலி காயனவ மாடுத தன்யனாதெ ||42**

பாற்கடலில் ஸ்ரீரமணன் வந்ததைப் போல; ப்ரகலாதனுக்கு அருள்வதற்காக ஸ்ரீநரஸிம்ஹன் வந்ததைப் போல; பகீரதனின் வீட்டுக்கு ஸ்ரீகங்கை வந்ததைப் போல; முசுகுந்தனின் வீட்டுக்கு ஸ்ரீமுகுந்தன் வந்ததைப் போல; விதுரனின் வீட்டுக்கு ஸ்ரீகிருஷ்ணன் வந்ததைப் போல; லக்ஷ்மீ காந்தனான ஸ்ரீபுரந்தரவிட்டலன் என் நாக்குக்கு வருவதற்காக, நான் உன்னுடைய மகிமைகளைப் பற்றி பாடியவாறு தன்யன் ஆனேன்.

உதாரணங்களில் கூறப்பட்ட அனைத்து விஷயங்களில், ஸ்ரீஹரி வந்து அவர்களுக்கு அருளியதைப் போல, மோக்ஷத்தையே கொடுத்ததைப் போல, நாமும் நிரந்தரமாக ஹரி நாமஸ்மரணையை செய்தால், அனைத்தையும் அருள்பவனான ஸர்வோத்தமனான ஸ்ரீஹரி, நமக்கும் மோக்ஷத்தை அளிப்பான் என்பது ஸ்ரீபுரந்தரதாஸர் சொல்லும் செய்தி.

கலியுகத்து ஸாதகர்களுக்கு ஸ்ரீஹரி கொடுத்த சுலபமான வழி – ஹரி நாமஸ்மரணை. இதனை பயன்படுத்தி, எப்போதும் ஹரி நாமஸ்மரணை செய்தால் அவனின் அருள் கண்டிப்பாகக் கிடைக்கும். ஏனென்றால் ‘யோகக்ஷேமம் வஹாம்யஹம்’ என்றான் ஸ்ரீகிருஷ்ணன்.

***

**ஹரிஹரி எந்து கரெயுவதெ தட**
**கரெதல்லிகெ பருவ நரஹரியெந்து**
**ஸுர நரலோகதல்லெல்லித்தரு கரெதல்லிகெ பருவ**
**புரந்தரவிட்டலனெந்து கரியோ கரெதல்லிகே பருவ ||43**

ஹரி, ஹரி என்று நாம் கூப்பிட்டாலே போதும், நான் அழைத்த இடத்திற்கு வருவான் ஸ்ரீநரஹரி. தேவலோகத்தில், நரலோகத்தில் என எங்கிருந்தாலும், அழைத்த இடத்திற்கே அவன் வருவான். ஆகவே, ஸ்ரீபுரந்தரவிட்டலா என்று அழையுங்கள். அவன் அந்த இடத்திற்கு உடனே வருவான்.

ஸ்ரீபுரந்தரதாஸரே தனது இன்னொரு தேவர நாமாவில், அழைப்பவர்கள் அழைத்தவுடன் வந்து காப்பான் என்பதை பல்வேறு உதாரணங்களை சொல்லி பாடியிருக்கிறார்.

நானேனு மாடிதேனு ரங்கய்யா ரங்க
நீ என்ன காயபேகு.

அஜாமிளன் உன்னுடைய அக்கா பையனா, கரிராஜன் உன்னை அழைத்தானா, திரௌபதிதேவி கடிதம் எழுதி அழைத்தாளா என்றெல்லாம் கூறி, அவர்கள் அனைவரும் அழைத்தவுடன் வந்து அருளினாயே, அதைப் போல எனக்கும் அருள்வாயாக என்று வேண்டியிருக்கிறார் ஸ்ரீதாஸர். அதைப் போல, பக்தர்களின் குரலுக்கு வந்து அருள்பவன் ஸ்ரீஹரி என்று சொல்வதாக கருத்து.

ஆகவே, எப்போதும் நம் நாவில் அவனது நாமஸ்மரணை இருக்கவேண்டும் என்று சொல்கிறார் என்று அறிய வேண்டும்.

***

**மன ஸஞ்சலதி தபவ மாடலஶக்யவு**
**கன அஜ்ஞானதி ஸத்கர்மகளு ஹத்தவு**
**தன ஶுத்தியில்லதெ தானவு வ்யர்த்தவு**
**மனஶுத்தியில்லத த்யானவு வ்யர்த்தவு**
**இனிதாத்தரிந்த ஈயுகதி புரந்தரவிட்டலன**
**நாமஸ்மரணெயெ லேஸு லேஸு காணா(ணெ) ||44**

மனம் ஸஞ்சலமாக இருக்கையில், நம்மால் தவம் செய்ய முடியாது. நம்மை அஞ்ஞானம் சூழ்ந்திருக்கும்போது, ஸத்கர்மங்களை நம்மால் செய்ய முடியாது. சுத்தமான வழியில் கிடைக்காத செல்வத்தினால் செய்த தானம் வீண். மனம் சுத்தியில்லாமல் செய்த தியானம் வீண். என்று ஆனதால், இந்த கலி யுகத்தில், ஸ்ரீபுரந்தரவிட்டலனின் நாமஸ்மரணையே அனைத்திற்கும் காரணம், அதனையே திரும்பத்திரும்ப சொல்வாயாக.

பகவந்தனின் நாமஸ்மரணையானது ஸஞ்சலமாக இருக்கும் நம் மனதினை அமைதியாக்குகிறது. அதன் மூலம் தவம் செய்தால், பகவந்தனின் அருள் நமக்கு கிடைக்கிறது. பகவந்தனின் நாமஸ்மரணையானது, நம் அக்ஞானத்தை களைகிறது. அதன் மூலம் நாம் ஸத்கர்மங்களை செய்து, அவனின் அருட்பார்வையை பெற முடியும். ஆகவே, நம் மன, வாக்கு, தேக சுத்திகளுக்காக பகவந்தனின் நாமஸ்மரணையை செய்வோமாக என்கிறார் ஸ்ரீதாஸர்.

லேஸு என்றால் சுலபமானது, புனிதமானது, நல்லது, சரியானது என்னும் பல அர்த்தங்கள் உள்ளன. இந்த கலியுகத்தில் ஸ்ரீஹரியின் நாமஸ்மரணையே லேஸு. ஆகவே அதை நாம் செய்வோம் என்று நமக்கு அறிவுரை கூறுகிறார் ஸ்ரீதாஸர்.

***

**நீனே கர்த்தனு அகர்த்தரு ஸிரி அஜபவேந்த்ராத்யமரரு**
**நீனே ஸ்வதந்த்ர அஸ்வதந்த்ரவரு**
**நீனே ஸர்வாத்மகனாகி ஸ்வீகரிஸுவவ**
**ஞான நின்னாதீன கர்ம நின்னாதீன**
**அனாதி காலதி இருவ ஜீவரிகெ**
**நீனே ஸுகவனீவே நீனே துக்கவனீவே**
**ஜீவ கர்ம அஜ்ஞான அனாதிகளு நின்னாதீனவய்ய**
**அனாதி கர்ம நீனே புரந்தரவிட்டலா**
**நீனே ஸலஹோ நின்னடிய பொந்திதவர ||45**

ஸ்ரீஹரியே, நீயே அனைத்திற்கும் கர்தா. ஸ்ரீலட்சுமிதேவி, பிரம்மன், இந்த்ராதி அனைத்து தேவர்கள் - அகர்த்தர்கள். ஸ்ரீஹரியே, நீயே ஸ்வதந்த்ரன். அவர்கள் அனைவரும் அஸ்வதந்த்ரர்கள். ஸ்ரீஹரியே, நாங்கள் சமர்ப்பிக்கும் அனைத்தையும் நீயே ஏற்றுக் கொள்கிறாய். எங்களுடைய ஞான, கர்மங்கள் உன்னுடைய அதீனமே. அனாதி காலத்திலிருந்து இருக்கும் ஜீவர்களுக்கு சுக, துக்கங்களை கொடுப்பவன் நீயே. அத்தகைய அனாதியான ஜீவனின் கர்மங்கள், அஞ்ஞானங்களும் அனாதிகளே. அவை உன்னுடைய அதீனமே. ஸ்ரீபுரந்தரவிட்டலனே, அனாதி கர்மம் நீயே. உன்னுடைய சரணங்களில் அடைந்தவர்களை நீ காப்பாற்றுவாயாக.

ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன, ஞான, அஞ்ஞான, பந்த, மோக்ஷ என்பதான அஷ்ட கர்த்ருத்வங்களும், பகவந்தனின் செயல்களே ஆகும். இது வேறு யாருடதும் அல்ல. அவனைத் தவிர வேறு அனைவரும் அஸ்வதந்த்ரர்களே என்று ஸ்ரீஹரியின் சிறப்புகளை வெகு அற்புதமாக இந்த உகாபோகத்தில் பாடியிருக்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

***

**உதயகாலத ஜப நாபிகெ ஸரியாகி**
**ஹ்ருதயக்கெ ஸரியாகி மத்யான்ஹதி**
**வதனக்கெ ஸமனாகி ஸாயங்காலக்கெ நித்ய**
**பதுமனாப தந்தெ புரந்தரவிட்டலகெ**
**இதெ காயத்ரியிந்த ஜபிஸபேகு ||46**

ஸந்த்யாவந்தனம் செய்யும்போது, காயத்ரி மந்திரம் செய்யும் முறையை இந்த உகாபோகத்தில் விளக்குகிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

உதய காலத்தில் ஜெபம் செய்யும்போது, நம் கைகள், நம் நாபிக்கு சரியாக (நேராக) இருக்க வேண்டும். மதிய காலத்தில் ஜெபம் செய்யும்போது, நம் கைகள், நம் ஹ்ருதயத்திற்கு நேராக இருக்க வேண்டும். மாலை நேரத்தில் ஜெபம் செய்யும்போது, நம் கைகள் நம் வாய்க்கு அருகில் இருக்க வேண்டும். இவ்வாறு பத்பனாபநான ப்ரம்ஹ தேவரின் தந்தையான ஸ்ரீபுரந்தரவிட்டலனை, இவ்வாறு கைகளை வைத்தவாறு, இந்த காயத்ரி மந்திரத்தினால் ஜெபிக்க வேண்டும்.

காயத்ரி என்னும் பெயரைக் கேட்டால், அது பெண் தேவதை என்று பலர் நினைக்கின்றனர். ஆனால் காயத்ரி நாமக ஸ்ரீஹரியே மூன்று காலங்களிலும் பிரதிபாத்யனாக இருக்கிறான். சூரியனுக்கு ஒளியைக் கொடுப்பவன் காயத்ரி. வ்யாஸ ஸ்துதியில், ஸவித்ரு நாமக பரமாத்மன் என்று தெளிவாக சொல்லப்பட்டிருப்பதால், ஸாவித்ரி என்று அழைக்கப்படுகிறான்.

***

**கர்ப்பவாஸ கிர்ப்பவாஸ ஜனன கினன**
**மரண கிரண துக்க கிக்க ப்ரா**
**ரப்த கீரப்த ஆகாமி கீகாமி**
**ஸஞ்சித கிஞ்சித எல்ல புரந்தரவிட்டலா ||47**

நாம் சொல்லும் அனைத்தையும், ‘க’ காரத்தை துவக்கமாகக் கொண்டு மறுபடி இன்னொரு முறை விளையாட்டாக சொல்வது வழக்கம். தண்ணீர் கிண்ணீர், அரிசி கிரிசி என பேச்சுவழக்கத்தில் உள்ளதை அறிகிறோம். அப்படி இரண்டாவது சொல்லும் ‘க’ கார சொல்லுக்கு எந்த அர்த்தமும் கிடையாது. இந்தப் பழக்கம் ஸ்ரீபுரந்தரதாஸரின் காலத்திலேயே இருந்திருக்கிறது என்பது இந்த உகாபோகத்திலிருந்து தெரிய வருகிறது.

கர்ப்ப வாஸம், ஜனனம், மரணம், துக்கம், ப்ராரப்தம், ஆகாமி, ஸஞ்சித என இவை அனைத்தும் ஸ்ரீபுரந்த்ரவிட்டலனின் ஆதீனத்திலேயே இருக்கின்றன. அவனே இந்த அனைத்தையும் செய்பவன், நடத்துபவன் என்று பகவந்தனின் ஸர்வோத்தமத்வத்தை, ஸர்வ நியாமகத்வத்தை விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

கிருதிபதியான பிரத்யும்ன நாமக ஸ்ரீபரமாத்மன், இந்திரியங்களிலும், அவற்றின் குணங்களிலும், தத்வாபிமானி தேவதைகளிலும் நிலைத்திருந்து, ஜீவர்களின் அனாதி பிராரப்த கர்மங்களுக்கேற்ப, அறிவைக் கொடுத்து, செயல்களை செய்து, அவர்கள் மூலமாக செய்விக்கிறான். அவர்கள் மூலமாக சஞ்சித, ஆகாமி என அனைத்துவித கர்மங்களையும் செய்வித்து, ஸ்வர்க்க நரகாதி போகங்களைக் கொடுக்கிறான். முன்னர் செய்த கர்மங்களுக்கு சஞ்சித என்றும் பின்னர் செய்யப்போகும் கர்மங்களுக்கு ஆகாமி என்றும் பெயர்.

***

**த்ரிவித ஜீவரிஹரு ஜகதொளகெ**
**பவ விமோக்ஷ அவரவர கதிகளு**
**ஜீவ ஜீவரிகெ பேத ஜீவ ஜடரிகெ பேத**
**ஜட ஜடக்கெ பேத ஜடபரமாத்மங்கே பேத**
**இந்துக்ஞானவு நித்யவாகலெந்து ஸந்தத**
**வரத ஸ்ரீபதி புரந்தரவிட்டலரேய**
**இந்துக்ஞானவு நித்யவாகலி எனகெ ||48**

இந்த உலகில், மூன்று வித ஜீவர்கள் இருக்கின்றனர். ஸம்ஸார, மோக்ஷங்கள் அவரவர்களின் கர்மங்களுக்கேற்பவே கிடைக்கின்றன. ஜீவ ஜீவர்களிடையே பேதம். ஜீவ ஜடர்களிடையே பேதம். ஜட ஜடங்களுக்கிடையே பேதம். ஜட பரமாத்மனுக்கிடையே பேதம். (மற்றும் ஜீவ பரமாத்மனுக்கிடையே பேதம்). இந்த பேத க்ஞானமானது நித்யமாக இருக்கட்டும் என்று எப்போதும் வரங்களை அளிப்பவனான ஸ்ரீபதியான ஸ்ரீபுரந்தரவிட்டலன் அருளட்டும். இந்த ஞானமானது எனக்கு நித்யமாக இருக்கட்டும்.

மத்வ ஸித்தாந்தத்தின் முக்கிய தத்வங்களில் ஒன்றான பஞ்ச பேத ஸத்ய என்னும் தத்வத்தைப் பற்றி உகாபோகம் இது. ஸ்ரீபுரந்தரதாஸரே தனது இன்னொரு முக்கியமான கிருதியான ‘ஸத்ய ஜகதிது பஞ்ச பேதவு, நித்ய ஸ்ரீகோவிந்தன’ என்று பாடியிருக்கிறார். இந்த க்ஞானம் நமக்கு மிகவும் தேவை என்பதாலேயே அந்த ஞானம் நிரந்தரமாக தன்னிடம் இருக்கட்டும் என்று ஸ்ரீதாஸர் வேண்டிக் கொள்வதாக சொல்கிறார். அதுவே நமக்கும் பொருந்துகிறது என்று நினைக்க வேண்டும்.

***

**ஸுகவாதரெ என்னிந்தாயிதெம்பரு**
**துக்கவாதரெ தெய்வ மாடிதெம்பரு**
**ஸுகக்கெ தான்யாரு துக்கக்கெ தான்யாரு**
**விகலனாகி கெடபேட மனுஜ**
**ருக்மணியரஸ புரந்தரவிட்டல**
**ஸுகதுக்கவனு மாடிஸுவனு காணோ ||49**

ஸுகம் வந்தால், அது தன்னாலேயே ஆனது என்பார்கள். துக்கம் வந்தால், அது பகவந்தனின் செயல் என்பார்கள். ஸுகத்தைக் கொடுக்கவும், துக்கத்தைக் கொடுக்கவும் நீ யார் ஜீவனே?. இப்படி புத்திகெட்டதனமாக இருந்து கெட்டுப் போகாதே மனிதனே. ருக்மிணி அரசனான ஸ்ரீபுரந்தரவிட்டலன் அவனே, ஸுக துக்கங்களை அனைவருக்கும் செய்விக்கிறான் என்பதை அறிவாயாக.

நாம் அனைவரும் அஸ்வதந்த்ரர்கள். எந்தவொரு சுக, துக்கமும்கூட நம்மால் வந்ததல்ல. நம்மால் பரிகரிக்கப்பட்டதல்ல. அனைத்திற்கும் ஸ்ரீஹரியே காரணம். இதையே, பிறகு வந்த ஸ்ரீஜகன்னாததாஸர், தனது 'பலவிது பாள்துதக்கெ' என்னும் க்ருதியில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

வாஸவமுக விபுதாஸுர நிசயகெ
வாஸுதேவனே ஶுபாஶுபத
ஈ ஸமஸ்த ஜகதீஶ கேஶவ
ஈஶஜீவரெம்ப ஸுஞ்ஞானவே ||4

இந்திரன் முதலான தேவர்கள் மற்றும் அஸுரர்களின் சமூகத்திற்கு ஸ்ரீஹரியே சுப மற்றும் அசுபங்களைக் கொடுப்பவன். சேதன, அசேதனங்களால் நிரம்பிய இந்த ஜகத்திற்கு ஸ்ரீகேசவனே ஸ்வாமி (தலைவன்). ஜீவர்கள் அனைவரும் அஸ்வதந்த்ரர்கள் என்னும் யதார்த்த (உண்மையான) ஞானமே, (இந்த வாழ்க்கையின் உண்மையான அர்த்தம்).

***

**கெட்டனெந்தெனல்யாகெ க்லேஷ படுவத்யாகெ**
**ஹொட்டெகோஸுக பரர கஷ்டபடிஸல்யாகெ**
**பெட்டத ம்யாலித்தரேனு வனதொளகித்தரேனு**
**ஹுட்டிஸித தேவ தா ஹுல்லு மேயிஸுவனெ**
**கட்யாகி நெரெ நம்பு புரந்தரவிட்டலன**
**ஸ்ருஷ்டி மாடித தேவ ஸ்திதிமாடலரியனே ||50**

கெட்ட சிந்தனையை கொள்வானேன்?. பிறகு அதனால் கஷ்டப்படுவானேன்?. தன் வயிற்றுப் பாட்டிற்காக, பிறரை ஏன் கஷ்டப்படுத்த வேண்டும்?. மலை மேல் இருந்தால் என்ன, வனத்தில் இருந்தால் என்ன?. நம்மை படைத்த ஸ்ரீஹரி அவனே நம்மை புல் மேய்க்கச் செய்வான் (அனைத்தையும் பார்த்துக் கொள்வான்). ஆகவே, ஸ்ரீபுரந்தரவிட்டலனை கெட்டியாக (நன்றாக) சிந்தனை செய்து, நம்புவாயாக. ஸ்ருஷ்டியை செய்த பகவான், அவனுக்கு ஸ்திதி செய்யத் தெரியாதா (காப்பாற்றத் தெரியாதா) என்ன?.

ஸ்ரீபுரந்தரதாஸர் மிகவும் சுருக்கமாக இங்கு விளக்கியுள்ள விஷயத்தை ஸ்ரீகனகதாஸர் தனது ஒரு க்ருதியில் விவரித்துப் பாடியுள்ளார் என்பதை பார்க்கிறோம்.

பெட்டத துதியல்லி ஹுட்டித வ்ருக்ஷக்கெ
கட்டெயனு கட்டி நீரெரதவர் யாரு ||1
அடவியொளாடுவ ம்ருக பக்ஷிகளிகெல்ல
அடிகடிகெ ஆஹாரத்தவரு யாரு ||2
காகிநெலெ ஆதிகேஶவராயா
எல்லரனு ஸலஹுவனு இதக்கெ ஸம்ஶயவில்ல
தள்ளனிஸதிரு கண்ட்யா தாளு மனவே ||

ஆகவே, மனதில் நற்சிந்தனையை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஸ்ரீஹரியை திடமாக நம்ப வேண்டும். அனைத்தையும் அறிந்தவனான, ஸர்வோத்தமனான அவன் அனைத்தையும் பார்த்துக் கொள்வான்.

***

**என்னம்ம ஸிரிதேவி இன்னூ அரியளு மஹிமெ**
**குன்னி மானவனு நானேனு பல்லெனோ**
**பன்னகாத்ரி நிலயனெ பாவன மூருதி கிருஷ்ண**
**என்னன்னுத்தரிஸய்ய புரந்தரவிட்டலா ||51**

என்னுடைய தாயான ஸ்ரீலட்சுமிதேவி, இன்னும் ஸ்ரீஹரியின் மகிமைகளை முழுவதுமாக அறியவில்லை. வெறுக்கத்தக்க மானவனான நான் (அவனைப் பற்றி) அறிவேனோ?. ஸ்ரீஸேஷாசல வாசனான, பவித்ர மூர்த்தியான ஸ்ரீகிருஷ்ணனே, என்னை உத்தரிப்பாயாக. ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

ஸ்ரீஜகன்னாததாஸர் இதையே தனது ‘பலவிது பாள்துதக்கெ’ என்னும் க்ருதியில், அதன் பல்லவியிலேயே இவ்வாறு கூறியிருக்கிறார் என்பதை பார்க்கிறோம்.

பலவிது பாள்துதக்கே
ஸிரி நிலயன குணகள திளிது பஜிஸுவதே |ப|

ஸ்ரீஹரியின் மகிமைகளை அறிந்து, அதனால் உண்டாகும் அன்பே, பக்தி. பக்தியினால் வேண்டுவதே, இந்த மனிதப்பிறவியை அர்த்தமுள்ளதாக்குகிறது. ஆகையால், நம் தகுதிக்கேற்ப ஸ்ரீஹரியின் குணங்களை அறிவதற்கு முயலவேண்டும். ஸ்ரீஹரியின் செயல்கள் ஏராளம். அவற்றில் அஷ்ட-கர்த்ருத்வ என்று பெயர் பெற்றவை - ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன, க்ஞான, அக்ஞான, பந்த மற்றும் மோட்ச. இவற்றைப் பற்றி நாம் தொடர்ந்து தெரிந்து கொள்ள முயலவேண்டும். ஸ்ரீஹரியின் நற்குணங்களை தெரிந்துகொள்வதே அவருக்கு நான் செய்யும் பஜனை எனலாம். இப்படி செய்யவில்லை எனில், அந்த வாழ்க்கையே வீண் என்று பொருள்.

***

**ஹீனமானவ யோனியலி ஜனிஸிதெனோ நானு**
**ஏனாதரேனு தீனதயாஸாகரனெ**
**குயோனியலி என்ன தேஹ வின்னதந்தெ மாடோ**
**ஞானவனு போதிஸி ஸானுராகதி காயோ**
**வேணுதர வேதாந்த வேத்ய நரஹரியே**
**கானனதொளு கண்ணுகாணதவ பித்தந்தெ**
**நானு பித்திஹெ காயோ புரந்தரவிட்டலா ||52**

ஹீனமான மானவ யோனியில் நான் பிறந்திருக்கிறேன். இனி என்ன செய்வது, தீன தயாஸாகரனே. இந்த குயோனியில் வந்துள்ள என்னுடைய தேகம், வீணாகப் போய்விடாமல் செய்வாயாக. எனக்கு க்ஞானத்தை போதித்து, உன் இஷ்டப்படி என்னை காப்பாயாக. புல்லாங்குழல் பிடித்தவனே, வேதாந்தங்களினால் அறியப்படுபவனே. நரஹரியே. அடர்காட்டில் கண் தெரியாதவன் ஒருவன் வழிதவறி விழுந்ததைப் போல, நான் இந்த சம்சாரத்தில் விழுந்திருக்கிறேன். என்னை காப்பாயாக. ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனிடம் இவ்வாறு கூறுகிறான். ’ஹே பார்த்தா! என்னை த்வேஷிக்கும் க்ரூரனான அந்த நர-அதமர்களை நிரந்தரமாக தைத்ய குலத்திலேயே பிறக்க வைக்கிறேன். மூடர்களான அந்த த்வேஷிகள் தொடர்ந்து அனைத்து பிறவிகளிலும் அசுர யோனிகளிலேயே பிறந்து, என்னை த்வேஷித்து, இறுதியில் என்னை சேராமல், அந்தம் தமஸ்ஸிற்குப் போய் சேர்கிறார்கள்’ என்கிறார் ஸ்ரீகிருஷ்ணன். இதிலிருந்து தன்னை விட்டவரை சம்சார பந்தனத்தில் கட்டுகிறான். அவர்களின் விஷயத்தில் கடினன் என்று தீர்மானமாக சொல்கிறான். பக்தி என்னும் கயிற்றால் தன்னைக் கட்டிய பிரகலாதன், பலி, குசேல முதலானவர்களுக்கு, இஹத்தில் பலவித போகங்களைக் கொடுத்து, அவர்களை சம்சார பந்தனங்களிலிருந்து விடுவித்து, பரலோகத்தில் தன் பாதார விந்தங்களைக் கொடுத்து, பலவித போகங்களைக் கொடுக்கிறான்.

***

**நின்ன தாஸனு ஆகி நின்ன எஞ்ஜலுண்டவன**
**நீனு உதாஸீன மாடிதரெ லோககரு நகரெ**
**நின்ன சரண கமலவனு கொரளல்லி கட்டுவே**
**என்ன காயோ புரந்தரவிட்டலா || 53**

உன்னுடைய தாஸன் என்று ஆகி, உன்னுடைய எச்சிலை (நைவேத்யத்தை) உண்டவனை நீ உதாஸீனம் செய்தால், இந்த உலகத்தவர்கள் சிரிக்க மாட்டார்களா?. உன்னுடைய சரண கமலத்தை என் கழுத்தில் கட்டுவேன். என்னை காப்பாயாக ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

பக்தவத்ஸலனான ஸ்ரீபரமாத்மனை யார் தமது ஆபத்து காலங்களில், தமது ஸ்வதந்த்ர கர்த்ருத்வ புத்தியை விட்டு, நீயே கதி என்று அவனடி சேர்ந்தால், உடனடியாக அவர்களை காப்பாற்றுகிறான். இதற்கு உதாரணம்: திரௌபதியின் வஸ்த்ர அபஹரண சமயத்தில், துச்சாதனன் அவளது புடவையை இழுக்க, அவள் தன் மானத்தை காக்க முற்பட்டபோது, ஸ்ரீகிருஷ்ணன் அவளை காப்பாற்ற வரவில்லை. எப்போது இரு கை கூப்பி 'ஹே கிருஷ்ணா! த்வாரகா வாஸனே! யாதவ நந்தனனே! என்னைக் காப்பாற்று' என்று தன் முயற்சியை விட்டு வேண்டினாளோ, அப்போது ஸ்ரீகிருஷ்ணன் அவளது வஸ்திரத்தை முடிவில்லாததாக மாற்றி அவள் மானத்தை காப்பாற்றினான்.

இதே போல நானும் உன்னுடைய தாஸன் ஆகி, உன்னை வேண்டுகிறேன். என்னை காப்பாற்றுவாயாக என்று வேண்டுகிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

***

**ஸிரி விரிஞ்சாதிகளு அரியதிஹ மஹிமெ**
**அரிது பாடலு ஜகதி அரஹராரய்ய**
**அரவிந்த தள நயன சரணெந்தவர காவ**
**கருணாஸாகர நம்ம புரந்தரவிட்டலா || 54**

ஸ்ரீமகாலக்ஷ்மி, ப்ரஹ்மாதிகளே முதலான தேவர்கள் முழுமையாக அறியாத உன்னுடைய மகிமைகளை அறிந்து பாடுவதற்கு இந்த உலகில் அருகதை உள்ளவர்கள் யாரய்யா?. (யாரும் இல்லை). தாமரை இதழ்களைப் போன்ற கண்களைக் கொண்டவனே, தன்னை சரணடைந்தவர்களை காப்பவனே, கருணைக்கடலே, நம் புரந்தரவிட்டலனே.

வேதங்களில் பகவத் மகிமைகளைப் பற்றி எவ்வளவு சொல்லப்பட்டிருக்கிறதோ, பிரம்மாதிகள் அவ்வளவு மட்டுமே அறிந்து, அவ்வளவே மகிழ்ச்சியை அடைகின்றனர். லட்சுமிதேவியரோ, வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் பகவத் மகிமைகளை, யோசிக்காமலே அறியும் சக்தியைப் பெற்றிருக்கின்றனர். அவற்றில் சொல்லப்பட்டிருக்கும் அபாரமான குணங்களை யோசித்தவாறு, பரமாத்மனின் அனந்தானந்த ரூபங்களைப் பற்றி, அவற்றில் இருக்கும் அனந்தானந்த பாகங்களைப் பற்றி, அவற்றில் இருக்கும் அனந்தானந்த செயல்களைப் பற்றி, அவற்றில் இருக்கும் புதுப்புது விஷயங்களைப் பற்றி, ஒரு நொடியின் அனந்தானந்த பாகங்களில், ஒரு பாகத்தின் மிகச்சிறிய காலத்தில் மிகத்தெளிவாக அறிந்து, ஒரு முறை கண்ட வியப்பினை மற்றொரு முறை காணாமல், புதிதுபுதிதான விஷயங்களையே காண்கிறார் என்றும், அந்த மகிழ்ச்சியிலேயே மூழ்கி, ஸ்தோத்திரம் செய்தவாறு இருக்கிறார்.

இத்தகைய தேவதைகளின் நிலையே இவ்வாறு இருக்கையில், எங்களைப் போன்ற ஜீவர்களின் கதி என்ன?. உன்னைப் பாட இந்த உலகில் தகுதி கொண்டவர்கள் யார்? என்று கேட்கிறார் ஸ்ரீதாஸர்.

***

**ஸ்ரீபதிய கடாக்ஷ வீக்ஷணவு தப்புவாக**
**அனேக பந்துகளு லக்ஷ வைத்யருகளு**
**இரலாகி கண்ண கண்ண பிடுவரு**
**தாபஸி அரண்யதொளகெ ஒப்ப ஒண்டியாகிரலு**
**அஞ்ஜபேடெந்து நம்ம கஞ்ஜனாபனெ பந்து**
**ஆபத்துகள பரிஹரிஸுவ நம்ம புரந்தரவிட்டலா ||55**

ஸ்ரீபதியின் கருணைக் கண்பார்வை நம் மேல் விழாதபோது, பற்பல உறவினர்கள், லட்சக்கணக்கான வைத்தியர்கள் இருந்தும், அவர்கள் திருதிருவென முழிப்பார்கள் (அவர்களால் எதுவும் செய்ய முடியாது). அடர் காட்டில் ஒரு தனியாக இருக்க, பயப்பட வேண்டாம் என்று தாமரை போன்ற நாபியைக் கொண்டவனானவன் வந்து நம் ஆபத்துகளை பரிஹரிப்பான், அவனே நம் புரந்தரவிட்டலன்.

ஸ்ரீஸ்ரீபாதராஜர் தமது 'இட்டாங்கே இருவேனோ ஹரியே' என்று பாடியிருக்கிறார். நம் மேல் ஸ்ரீஹரியின் கருணை இருந்தால் என்ன ஆகும், இல்லையென்றால் என்ன ஆகும் என்பதை பல்வேறு உதாரணங்கள் (உணவு, உடை, படுக்கை, சத்ர, சாமர முதலான உதாரணங்கள்) கொடுத்து அதில் பாடியிருப்பதின் ஸாரத்தையே இங்கு ஸ்ரீபுரந்தரதாஸர் சொல்லியிருக்கிறார் என்று அறிய வேண்டும். அந்தப் பாடலின் இறுதியில், ஸ்ரீஸ்ரீபாதராஜர், பாண்டுரங்கனே, உன்னுடைய பக்தர்களின் ஸங்கத்தையே எனக்கு அருள்வாயாக. அப்படி இருந்தால் மட்டுமே, உன்னுடைய பார்வை என் மேல் விழும் என்கிறார்.

ஸ்ரீஹரியின் கருணையே தேவை. அது மட்டும் இல்லையெனில், வேறு யார் நம்முடன் இருந்தாலும், அதில் எவ்வித ப்ரயோஜனமும் இல்லை என்பதை விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

***

**மத்வஸரோவரதல்லி இத்து பூஜெயகொம்போ**
**முத்து ருக்மணிய அரஸ ரங்கய்யகெ**
**பத்மதாருதிய பெளகுவெ புரந்தரவிட்டலா ||56**

மத்வ ஸரோவரத்தில் இருந்து கொண்டு, பூஜையை ஏற்றுக் கொள்ளும் அழகான ருக்மிணி தேவியின் அரசனான ரங்கய்யனுக்கு பத்மத்தின் ஆரத்தியை எடுப்பேன், ஸ்ரீபுரந்தரவிட்டலா.

தூபாரதிய நோடுவ பன்னி என்று துவங்கும் தன்னுடைய கீர்த்தனையில் ஸ்ரீபுரந்தரதாஸர் ஸ்ரீகிருஷ்ணனுக்கு மங்கள ஆரத்தியை எடுப்போம் வாருங்கள் என்று சொல்லி அந்த ஆரத்தியில் தெரியும் ஸ்ரீகிருஷ்ணனின் மகிமைகளைப் பற்றி பாடியிருக்கிறார். அதன் ஸாரமே இந்த சிறிய உகாபோகத்தில் இருக்கிறது என்று சொல்லலாம்.

* மத்தளெ. ஜாங்கடெ, தாள, தண்டிகெ, பேரி போன்ற வாத்தியங்களின் ஓசையில், அற்புதமான சங்கு ஒலியின் நடுவே நம் பத்பனாப தேவருக்கு எடுக்கப்படும் ஆரத்தியை பார்ப்போம் வாருங்கள்.
* அகரு, சந்தன, குக்குல, சாம்ப்ராணி ஆகிய அனைத்தும் கலந்ததான தூப ஆரத்தியை எடுப்போம்.
* அதிகமான பக்தியுடன் எடுக்கும் ஏகாரத்தியில் நம் ஜகன்னாத விட்டலனுக்கு ஆரத்தி எடுப்போம்.
* ஹரி ஸர்வோத்தமனை, பக்தர்களை காப்பவனை, பரம மங்கள மூர்த்தியை, பவித்ரமானவனை, பரதெய்வமான ஸ்ரீரங்கநாதனை, புரந்தரவிட்டலனின் தேவபூஜை சமயத்தில், எடுக்கப்படும் தூப ஆரத்தியை பார்ப்போம், வாருங்கள்.

இந்த அற்புதமான கீர்த்தனையில் ஸ்ரீஹரியின் பூஜையில், ஆரத்தி, தூபாரத்தி ஆகியவை எடுக்கப்படுவதையும், அந்த சமயத்தில், பகவந்தனின் மகிமைகளை நினைத்தவாறு, பல்வேறு வாத்தியங்கள் இசைக்கப்படுவதையும் சொல்லி நம்மை பரவச நிலைக்கு எடுத்துச் செல்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

***

**ஏகானேகமூருதி லோகவெல்ல மூருதி**
**ஸனகாதிகளல்லி ஸான்னித்ய மூருதி**
**முனிகளல்லி மினுகுவ மூருதி**
**நம்ம கனமஹிம பொம்மமூருதி**
**புரந்தரவிட்டலனெ காணிரோ ||57**

அவன் ஒருவனே மூருதி (ஸர்வோத்தமன்). உலகில் அனைத்திலும் இருப்பவன் அவனே. ஸனகாதிகளே முதலான அனைவரிலும் ஸான்னித்யம் கொண்டுள்ள மூருதி அவனே. அனைத்து முனிவர்களிலும் இருந்து ஒளிரும் மூருதி அவனே. அபாரமான மகிமைகளைக் கொண்டவனான நம் மூருதி ஸ்ரீபுரந்தரவிட்டலனை காணுங்கள்.

ஜீவ, ஜடாத்மக ஜீவரில் அணுரேணு-த்ருணகாஷ்டனாக நிலைத்திருக்கும் ஸ்ரீஹரி அனைத்து ஜீவர்களில் பிம்பமூர்த்தியாக இருக்கிறான். ஜீவர்களில் இருந்து, அவர்களினால் அனைத்து செயல்களையும் செய்து, செய்வித்து, ஜீவர்களுக்கு ஸுக துக்கங்களைக் கொடுத்து, ஸஜ்ஜீவிகளிடமிருந்து அனைத்து பூஜைகளையும் ஏற்றுக்கொண்டு, இறுதியில் அதற்கேற்ப பலன்களை கொடுப்பவன் அவனே ஆகியிருக்கிறான்.

அனைவரிலும் இருக்கும் ஸ்ரீஹரியின் சிறப்பு விளக்கமுடியாதது. அனைத்து இடங்களிலும் இருக்கும் ஸ்ரீஹரியை அறிந்து, நாம் செய்த செயல்களை நம்மிடமிருந்து பெற்று, அதற்கேற்ப பலன்களை நமக்குக் கொடுப்பவன் என்பதை அறிய வேண்டும். 'ஔஹொர கொந்தாகோ தனக' 'அந்தர்பஹிஸ்ச தத் சர்வம் வியாப்த நாராயண ஸ்தித:' என்பதுபோல அனைத்து ஜீவர்களின் இதய-கமலத்தில் நிலைத்திருக்கும் ஸ்ரீஹரியும் ஒன்றே என்று நினைத்து தன்யர் ஆகவேண்டும்.

***

**காவ தெய்வவு நீனே கொல்லுவ தெய்வவு நீனே**
**கைவல்யபலதாத கேசவனு நீனே**
**ஆவ தெய்வக்கின்னு ஈ வைபவவ காணெ**
**ராவணாந்தக ஸ்வாமி புரந்தரவிட்டலா ||58**

நம்மை காக்கும் தெய்வமும் நீயே. எம்மை கொல்லும் தெய்வமும் நீயே. மோக்ஷத்தைக் கொடுக்கும் கேசவனும் நீயே. உன்னைத் தவிர வேறு எந்த தெய்வத்திற்கும் இந்த வைபவத்தை நான் காணவில்லை. ராவணனைக் கொன்றவனான ஸ்வாமியே, புரந்தரவிட்டலனே.

ஒரே காலத்தில், ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயங்களை செய்கிறான். என்றால், பொதுவாக ஸ்ருஷ்டி காலத்தில் உலகத்தைப் ஸ்ருஷ்டிக்கிறான். மத்திய காலத்தில் அதை பாதுகாக்கிறான். பிரளய காலத்தில் அதனை அழிக்கிறான் என்று சொன்னாலும், 'ஜனம் ஜனேன ஜனர்ய ம்ருத்யுனாத்மன:' காலநாமகனான ஸ்ரீஹரி, தன் வசத்தில் இருக்கும் பிரம்மாதிகளாலும் இதர மக்களாலும் ஸ்ருஷ்டி செய்தவாறு, ஒரே காலத்தில் தன் வசத்தில் இருக்கும் ம்ருத்யுவிற்குக் காரணமான நோய்களால், அழித்தும் வருகிறான். பாகவத 3ம் ஸ்கந்தத்தின் வாக்கியத்தின்படி ஒருவரில் இருந்து ஸ்ருஷ்டிக்கிறான், அதே சமயத்திலேயே இன்னொருவரில் இருந்து பிறந்தவர்களை அழிக்கிறான். இன்னொரு ரூபத்தினால் கொல்கிறான். ஆனால், உலகத்தில் மக்கள் பிறப்பதை, வாழ்வதை, இறப்பதை அனைவரும் பார்த்துக் கொண்டிருந்தாலும், இவை அனைத்தும் பகவந்தனின் வியாபாரம் என்று யாரும் அறிவதில்லை. ஞானிகளுக்கு மட்டுமே இவை புரியும். பாரத யுத்தத்தில் அர்ஜுனனுக்கு விஸ்வரூபத்தைக் காட்டியபோது, பீஷ்ம முதலானவர்கள் ஸ்ரீகிருஷ்ணனின் வாயில் பிரவேசிப்பதை ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு காட்டியதையும், அதனை அர்ஜுனன் கண்டதையும், கீதையின் 11ம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறான். அதிலிருந்தே பகவந்தனின் மகிமைகள் புரியவில்லையா? என்று பொருள்.

***

**ஆவின கொம்பின துதியல்லி ஸாஸிவெ நிந்தித்த கா**
**லவெ நின்ன நெனெதவ ஜீவன்முக்தனல்லவெ**
**ஸர்வ காலதலி ஒரலுத்த நரலுத்த ஹரிஹரி எந்தவ**
**ஜீவன்முக்த எம்புதக்கெ ஏனு ஆஸ்சர்யவய்ய புரந்தரவிட்டலா59**

ஒரு பசுவின் கொம்பின் நுனியில் ஒரு கடுகு நிற்கும் கால அளவில் உன்னை நினைத்தவன் ஜீவன் முக்தன் அல்லவா?. அப்படியிருக்கையில், அனைத்து காலங்களிலும், போகும்போதும் வரும்போதும் ஹரிஹரி என்றவன் ஜீவன் முக்தனே என்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது, ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

ஸ்மரணை பற்றி ஹரிதாஸர்கள் பற்பல மேற்கோள்களை காட்டி பாடியிருந்தாலும், ஸ்ரீஹரிகதாம்ருதஸாரத்தில் வரும் ஒரேயொரு பத்யத்தை இங்கு பார்ப்போம்.

வாஸுதேவன குணஸமுத்ரதோ
ளீஸ பல்லவ பவஸமுத்ரா
யாஸவில்லதெ தாடுவனு ஷீக்ரதலி ஜகதொளகெ |
பேஸரதெ துர்விஷயகள அபி
லாஷெயலி பளலுவவ நானா
க்லேஷகள நனுபவிப பக்தி ஸுமார்க்க காணதலெ ||13-5

இந்த உலகில், யாரொருவன், வாசுதேவனின் குணக்கடலில் நீந்துவதற்கு அறிந்தவனோ, எப்போதும் பரமாத்மனின் குணங்களையே கொண்டாடியவாறு, நினைத்தவாறு, நாம ஸ்மரணை செய்தவாறு, நிஷ்காம கர்மங்களை செய்தவாறு காலத்தை கழிக்கிறானோ, அத்தகையவர், சம்சாரம் என்னும் கடலை எவ்வித சோர்வுமின்றி தாண்டுவதற்கான தகுதியுள்ளவன். அப்படி இல்லாமல் எப்போதும், மனைவி, மக்கள், வீடு, நிலம் என்று காம்ய கர்மங்களில் மூழ்கியிருக்கிறானோ, அவன் சம்சாரத்தில் அனேக கஷ்டங்களை அனுபவிக்கிறான்.

***

**ஹா க்ருஷ்ண ஹா த்வாரகாவாஸ எந்தெனலு**
**ஸ்ரீபதி அக்ஷயவஸ்த்ரவனித்து**
**த்ரௌபதியபிமானவ காய்த ||60**

ஹே கிருஷ்ண ஹே த்வாரகாவாஸா என்று கூவ, ஸ்ரீபதியான ஸ்ரீகிருஷ்ணன் அக்ஷயவஸ்த்ரங்களை அளித்து திரௌபதியின் மானத்தை காத்தான்.

திரௌபதி மானஸம்ரக்ஷணெ என்று ஒரு க்ருதியை இயற்றியிருக்கும் ஸ்ரீபுரந்தரதாஸர், அதன் சுருக்கமாக இந்த உகாபோகத்தை கொடுத்திருக்கிறார். அந்த க்ருதியிலிருந்து ஒரு பத்யம் இவ்வாறு.

ரங்கனொலித நம்ம கிருஷ்ணனொலித |
அங்கனெ திரௌபதிகெ வஸ்த்ர அக்ஷயவெந்தனு ||

பொந்திதவர பொரெவ கருணி ஸிந்துஷயன ஸ்ரீகிருஷ்ண
நலவிந்த த்ரௌபதிகெ வஸ்த்ர அக்ஷயவனித்தனு |
ஒந்து இரடு மூரு நால்கு கோடி ஸங்க்யெ ஸுளிது
நொந்து பெந்து துஷ்ஷாஸனனு நாசி குளிதனு || 20

தன்னை நம்பியவர்களை எப்போதும் காப்பவனான கருணாமூர்த்தியான, பாற்கடலில் படுத்திருப்பவனான ஸ்ரீகிருஷ்ணன், மிகவும் கனிவுடன் திரௌபதிக்கு வஸ்த்ரங்களை முடிவில்லாததாக அளித்தான். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என வளர்ந்ததான அந்த வஸ்த்ரங்களின் எண்ணிக்கை கோடிகளையும் தாண்டியது.

அத்தகைய பற்பல வஸ்த்ரங்களை இழுத்தவனான துச்சாதனன், மிகவும் நொந்து, வெந்து, மிகவும் வெட்கப்பட்டு, சோர்வடைந்து அமர்ந்தான்.

***

**அதளதல்லிரிஸோ ஸுதளதல்லிரிஸோ**
**தளாதள பாதாளதல்லிரிஸோ**
**யோனியொளிரிஸோ மத்தாவியோனியல்லிரிஸோ**
**நீனெல்லிரிஸிதெரெ நானல்லிரதாதெனெ**
**நீனெந்து நடெது நடெஸிகொம்புவெயோ**
**நானந்தந்தெ நடெயுவெ புரந்தரவிட்டலா ||61**

என்னை அதள உலகிலோ, ஸுதள உலகிலோ, தளாதள உலகிலோ, பாதாளத்திலோ என்னை தள்ளுவாயாக. வேறொரு யோனியில் என்னை இறக்குவாயாக. மறுபடி வேறொரு யோனியில் என்னை இறக்குவாயாக. நீ என்னை எங்கு இருக்கச் செய்கிறாயோ, நான் அங்கேயே இருக்கிறேன். நீயே எனக்குள் இருந்து, செயல்களை செய்து, செய்விப்பாயாக. நீ சொல்வதை (செய்வதைப்) போலவே நான் நடந்து கொள்கிறேன் ஸ்ரீபுரந்தரவிட்டலா.

ஜீவ ஈஷ பேதத்தையும், ஜீவனின் அஸ்வதந்த்ரத்தையும் தெள்ளத்தெளிவாக சொல்லும் உகாபோகம் இது. ஜீவன் சொல்கிறான். நீ என்ன என்ன செய்யச் சொன்னாலும், நான் அதை செய்கிறேன். எங்கு போகச் சொல்கிறாயோ அங்கு போகிறேன். ஏனெனில் நீ ஈஷன். நான் உன் தாஸன். அனைத்து செய்து, செய்விப்பவன் நீயே.

பரமாத்மன் ஸ்வதந்த்ரன். ஜீவன் அஸ்வதந்த்ரன். பரமாத்மன் துக்கங்கள் அற்றவன். ஜீவன், ஜனன மரணாதி பற்பல துக்கங்களைக் கொண்டவன் என்று இதைப் போன்ற பல்வேறு வேறுபாடுகள் பரமாத்மன் மற்றும் ஜீவர்களிடையே இருக்கிறது என்றும், ரமாபிரம்மாதிகள் அனைவரும் பரமாத்மனின் அதீனத்திலேயே இருக்கின்றனர் என்பதை அறிந்து, உபாசனை செய்வதே ஸதுபாசனை. இத்தகைய ஸதுபாசனையை செய்பவரகளுக்கு இஹபரங்களில் பரமாத்மன் தன் தரிசனத்தை கொடுக்கிறான்.

***

**அல்லத கர்மவ ஆசரிஸிதவ கெட்ட**
**எல்லரொளகெ விரோதிஸிதவ கெட்ட**
**பல்லிதவரொடனெ ஸெணஸி மெரெதவ கெட்ட**
**லல்லெ மாதின ஸதிய நம்பிதவ கெட்ட**
**புல்லலோசன நம்ம புரந்தரவிட்டலன**
**மெல்லடிய நம்பதவ கெட்ட நரகேடி || 62**

செய்யக்கூடாத (பின்பற்றக்கூடாத) கர்மங்களை செய்தவன் கெட்டான். அனைவருடனும் விரோதம் செய்து கொள்பவன் கெட்டான். கற்றறிந்த அறிஞர்களுடன் பழகாமல் திகழ்பவன் கெட்டான். மிகவும் காதலுடன் பேசும் மனைவியின் பேச்சினை நம்பியவன் கெட்டான். மலர்ந்த மலர்களைப் போன்ற கண்களைக் கொண்ட நம் புரந்தரவிட்டலனின் காலடிகளை நம்பாதவன் கெட்டான். ஜீவர்களிலேயே அவன் கெட்டவன்.

பற்பல அறிவுரைகளைக் கொண்ட, அந்த பட்டியலைக் கொண்ட உகாபோகம் இது.
* சாஸ்திரத்தின்படி Do's & Dont's சொல்லப்பட்டிருக்கின்றன. அவரவர்களின் வர்ணாஸ்ரம தர்மங்களின்படி இருக்கும் இந்த செயல்களில், செய்யக்கூடாதனவற்றை செய்பவன் கெட்டான்.
* ஸங்கவாகலி ஸாது ஸங்கவாகலி, ஸங்கதிந்த லிங்க தேஹ பங்கவாகலி - என்று சொல்லியிருப்பதைப் போல, கற்றறிந்த அறிஞர்களுடன் நாம் பழக வேண்டும். விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும். இதை விடுத்து, அனைவரிடமும் விரோதம் பழகக்கூடாது.
* சாஸ்திரங்களின்படி, ஆசார்யரின் நிர்ணயங்களின்படி நடக்கவேண்டுமே தவிர, மனைவியின் (சுற்றத்தாரின்) பேச்சின் ஆதாரங்களின்படி நடக்கக்கூடாது.

* ஸ்ரீஹரியின் பாத கமலங்களையே ஆஸ்ரயமாகக் கொள்ள வேண்டும். அவனையே நம்ப வேண்டும். ஈஷ தாஸ பாவம் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யாதவன் கெட்டான்.

***

**எரடு களிகெ பௌகு இரலு க்ரஹஸ்தகெ ஸ்னான**
**கரவ முகிது மாடு ஸங்கல்ப தேவ**
**பரமபுண்ய ப்ராஹ்மணதர்மவெந்து**
**புரந்தரவிட்டலனு மெச்சி பாலிஸுவ ||63**

ஸ்னான ஸங்கல்பத்தை செய்ய வேண்டிய காலத்தைப் பற்றியதான உகாபோகம் இது. சூரிய உதயம் ஆவதற்கு இன்னும் இரு நாழிகை இருக்கையில் கிருஹஸ்தனானவன் ஸ்னானம் செய்ய வேண்டும். கையைக் குவித்து சங்கல்பத்தை செய்ய வேண்டும். இதுவே ப்ராஹ்மண தர்மம், இதுவே பரமபுண்ணியம் என்று நினைத்து யாரொருவன் இதனை செய்கிறானோ, அவனை, தேவனான ஸ்ரீபுரந்தரவிட்டலன் மெச்சி அருள்கிறான்.

அப்படி ஸ்னானம் செய்யும்போது செய்ய வேண்டிய அனுஸந்தானங்களை பற்பல ஹரிதாஸர்கள் பல இடங்களில் பாடியிருக்கிறார்கள். ஸ்ரீஜகன்னாததாஸர் ஹரிகதாம்ருத ஸாரத்தில் சொல்லியுள்ள ஒரு விஷயத்தை மட்டும் இங்கே பார்க்கலாம்.

நாம் ஸ்னானம் செய்யும்போது, தேகத்தை சுத்தம் செய்வதற்காக குளிக்கிறோம் என்று நினைக்காமல், தேகமானது பரமாத்மன் வசிக்கும் ஒரு ரதம் என்றும், அந்த ரதத்தை சுத்தம் செய்வதற்காக குளிக்கிறோம் என்று நினைத்தால், அதுவே முக்திக்கு சாதனையாகும். போலவே, தேகத்தை அலங்கரிப்பது, மக்கள் நம்மை புகழ்வதற்கு என்று நினைத்தால், அது நரக-சாதனை. பகவந்தன் அமரும் ரதமாகையால், பரமாத்மனை மகிழ்விப்பதற்காக ரதத்தை அலங்கரிக்கிறேன் என்று நினைத்தால் அது முக்தி-சாதனை.

***

**யதுகிருஷ்ண யாதவகிருஷ்ண எந்தவரிகெ அந்த்யகாலதல்லி**
**மொதலின ஷப்தகேளித மாத்ரதிந்த முததி முக்தியனித்தந்தெ**
**ஸதா பகுதிய தன்னபாததல்லி கொட்டு**
**எரடனெய நாம கேளிதக்கெ ஏன கொடலெந்து நாசி**
**நம்ரதி ஸதய ஸ்ரீபுரந்தரவிட்டலஸ்வாமி**
**முததி நாமஸ்மரணெய கொட்டு காய்வ ||64**

யதுகிருஷ்ணா, யாதவகிருஷ்ணா என்று சொல்பவர்களுக்கு அவர்களின் கடைசி காலத்தில், அவர்கள் கிருஷ்ணா என்று முதல் முறை சொன்னதிலேயே மிகவும் மகிழ்ச்சியுடன் முக்தியை அளிக்கிறான். எப்போதும் தன் பாதங்களில் பக்தியுடன் சரணாகதி அடைந்தவர்களுக்கு, இரண்டாவது முறையாக தன் பெயரை உச்சரித்தால் என்ன கொடுப்பது என்று ஸ்வாமியே வெட்கப்பட்டு, நம் ஸ்வாமியான கருணைக் கடலான ஸ்ரீபுரந்தரவிட்டலன், மிகவும் மகிழ்ச்சியுடன் அவனது நாமத்தை நம் வாயில் வருமாறு செய்து, அதன் மூலம் ஜீவர்களை காக்கிறான்.

பகவந்தனின் நாமஸ்மரணையின் வலிமையை சொல்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர். தனது குருவான ஸ்ரீவ்யாஸராஜர் - கிருஷ்ணா கிருஷ்ணா கிருஷ்ணா எந்து மூரு பாரி நெனெயிரோ, சந்துஷ்டனாகி முகுதி கொட்டு மிக்க பாரவ ஹொருவனோ - என்று பாடியதையே இந்த உகாபோகத்தில் ஸ்ரீதாஸர் சுருக்கி கொடுத்திருக்கிறார் என்பதை பார்க்கிறோம்.

அந்த ஸ்ரீஹரியின் நாமஸ்மரணைக்கு மிகை இவ்வுலகில் எதுவும் இல்லை; அந்த கமலனாபநின் (சங்கு, சக்ர, கதா, பத்ம, நாராயண) சின்னங்களை தரித்துக் கொள்ள வேண்டும். இதைக் கண்டால் அந்த யமதூதர்களே அஞ்சி ஓடுவார்கள்; நாம் பிறந்து வந்த இந்த மத்வ மதத்தின் தத்வங்களை

அனுசரித்து நடங்கள். அப்படி செய்தால், ஸ்ரீகிருஷ்ணன் தன்னுடைய உலகத்தையே (மோக்ஷத்தையே) நமக்குக் கொடுப்பான். -- இதுவே ஸ்ரீவ்யாஸராஜர் இயற்றிய அந்த தேவரநாமாவின் ஸாரம்.

***

**கஜதுரக ஸஹஸ்ரதான கோ குலகோடி தான**
**பூதான ஸமுத்ர பர்யந்தர தான**
**புரந்தரவிட்டலன த்யானக்கெ ஸமவில்ல ||65**

யானை, குதிரைகளை ஆயிரம் எண்ணிக்கையில் தானம் கொடுத்தல்; கோடி பசுக்களை தானம் கொடுத்தல்; ஸமுத்ர வரையிலான இருக்கும் அனைத்து நிலத்தையும் தானம் கொடுத்தல்; இவை எதுவுமே ஸ்ரீபுரந்தரவிட்டலனின் தியானத்திற்கு சமம் இல்லை. அதாவது, ஸ்ரீஹரியின் தியானமே மிகச் சிறந்தது என்று அர்த்தம்.

ஸ்ரீஜகன்னாததாஸர் தனது ஹரிகதாம்ருதஸாரத்தில் 'தியான ப்ரக்ரியா ஸந்தி' என்று தியானத்தைப் பற்றி ஒரு சந்தியையே இயற்றிக் கொடுத்திருக்கிறார்.

நின்ன ஸர்வத்ரதலி நெனெவவ
ரன்யகர்மவ மாடிதரு ஸரி
புண்யகர்மக ளெனிஸுவுவு ஸந்தேஹ வினிதில்ல |
நின்ன ஸ்மரிஸதெ3 ஸ்னான ஜப ஹோ
மான்ன வஸ்த்ர கஜாஷ்வ பூ தன
தான்ய மொதலாதகில தானவ மாடி பலவேனு ||8

என்று இந்த பத்யத்தில், ஸ்ரீபுரந்தரதாஸர் கூறியதையே கூறியிருக்கிறார்.

ஸ்ரீஹரியை நினைக்காமல், ஸ்நான, ஜப, ஹோமங்களை செய்தாலும், அன்ன, வஸ்திர, யானை, குதிரை, பூமி, தன, தான்ய ஆகிய அனைத்தையும் தானமாகக் கொடுத்தால் என்ன பலன்? (பலன் கிடைக்காது என்று பொருள்).

***

**ஸ்ரீதேவிய மூருதியல்லி**
**பூதேவ பரிபூர்ண நீனே**
**அவ்யக்தாகாஷதலி ஸ்வாமி**
**அவ்யக்த பரிபூர்ண நீனே**
**அனந்தானந்ததலி ஸ்வாமி**
**அனந்தபரிபூர்ண நீனே**
**ஜகன்னாயக புரந்தரவிட்டல**
**ஸர்வஜகக்கெ பரிபூர்ண நீனே ||66**

ஸ்ரீதேவியின் மூருதியில், பூதேவனான நீ பரிபூர்ணமாக இருக்கிறாய். ஹே ஸ்வாமியே, அவ்யக்த ஆகாஷத்தில், முழுவதுமாக நிறைந்திருப்பவன் நீயே. அனந்தானந்த காலங்களில் நீ அனந்த பரிபூர்ணனாக இருக்கிறாய். உலகத்தின் நாயகனான ஸ்ரீபுரந்தரவிட்டலனே, அனைத்து உலகங்களிலும் பரிபூர்ணமாக நிறைந்திருப்பவன் நீயே.

வேதங்களில் பகவத் மகிமைகளைப் பற்றி எவ்வளவு சொல்லப்பட்டிருக்கிறதோ, பிரம்மாதிகள் அவ்வளவு மட்டுமே அறிந்து, அவ்வளவே மகிழ்ச்சியை அடைகின்றனர். லட்சுமிதேவியரோ, வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் பகவத் மகிமைகளை, யோசிக்காமலே அறியும் சக்தியைப் பெற்றிருக்கின்றனர். அவற்றில் சொல்லப்பட்டிருக்கும் அபாரமான குணங்களை யோசித்தவாறு, பரமாத்மனின் அனந்தானந்த

ரூபங்களைப் பற்றி, ஒவ்வொரு ரூபங்களுக்குள்ளும் இருக்கும் அனந்தானந்த பாகங்களைப் பற்றி, ஒவ்வொரு பாகங்களுக்குள்ளும் இருக்கும் அனந்தானந்த செயல்களைப் பற்றி, ஒவ்வொரு செயல்களில் இருக்கும் புதுப்புது விஷயங்களைப் பற்றி, ஒரு நொடியின் அனந்தானந்த பாகங்களில், ஒரு பாகத்தின் மிகச்சிறிய காலத்தில் மிகத்தெளிவாக அறிந்து, ஒரு முறை கண்ட வியப்பினை மற்றொரு முறை காணாமல், புதிதுபுதிதான விஷயங்களையே காண்கிறார் என்றும், அந்த மகிழ்ச்சியிலேயே மூழ்கி, ஸ்தோத்திரம் செய்தவாறு, மெய்மறந்து, பூரிப்படைந்தவாறு இருக்கிறார்.

***

**நாரதமுனி நிம்ம பாடிதனல்லதெ**
**நாடதாவத கொட்டனு ஹேளய்யா**
**ப்ரஹ்லாதனு நின்ன பொகளிதனல்லதெ**
**பொடவிதானவ தானித்தனெ**
**விபீஷணனு நின்ன மொரெஹொக்க**
**நல்லதெ ஏனு தனவித்தனய்ய**
**த்ரிதஷாத்யரு நின்ன துதிஸி**
**தரல்லதெ ஏனு பாக்யவனித்தரை**
**அந்தினவரு நினகெ ஏனுகொட்டரு**
**ஹரியே நானேனு கொடதெ ஹோதெனோ**
**அந்து ஸிரிவந்தனே இந்து நீ படவனே**
**எலெ லக்ஷ்மீலோல லக்ஷ்மிபதியே த்ரிதஷவந்தித**
**இது ஏனு விசித்ர புரந்தரவிட்டலா ||67**

நாரதர் உன்னைப் பாடினாரே தவிர, ஏதாவது ஒரு நாட்டினை கொடுத்தாரா சொல். ப்ரகலாதன் உன்னை புகழ்ந்தானே தவிர, பூமி எதையாவது எழுதிக் கொடுத்தானா சொல். விபீஷணன் உன்னிடம் வந்து சரணடைந்தானே தவிர, ஏதாவது செல்வம் கொடுத்தானா. தேவதைகள் உன்னை துதித்தார்களே தவிர ஏதாவது பாக்கியங்களை கொடுத்தனரா. அன்று இருந்தவர்கள் உனக்கு எதை கொடுத்தனர், ஸ்ரீஹரியே நான் உனக்கு எதைக் கொடுக்காமல் போனேன். அன்று நீ செல்வந்தனாக இருந்தாயா அல்லது இன்று நீ ஏழையாக இருக்கிறாயா; ஹே லக்ஷ்மிதேவியின் தலைவனே, தேவதைகளால் வணங்கப் படுபவனே, இந்து என்ன விசித்ரமோ ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

நிந்தா ஸ்துதி ரூபத்தில் அமைந்த உகாபோகம் இது. ஹே ஸ்ரீஹரியே, அன்று நாரதர், ப்ரகலாதன், விபீஷணன், தேவதைகள் என அனைவரும் உன்னை வணங்கினார்களே தவிர, வேறு எதையும் கொடுக்கவில்லை. நானும் அவர்களைப் போலவே உன்னை வணங்குகிறேனே / துதிக்கிறேனே, எனக்கும் நீ அவர்களை காத்ததைப் போல காக்க வேண்டும் என்று ஸ்ரீதாஸர் சொல்கிறார் என்பது கருத்து.

***

**தர்மபதவ மெட்டலு மனவெரகது துஷ்**
**கர்மகாதரெ ஜிகிஜிகிதாடுவுது யுக**
**தர்மவோ ஹரி ஜீவன கர்மவோ**
**துர்மாய யுக்திகளிந்த சரிஸுவவர மய**
**சர்மவ ஸுலிஸதெ பிடனு ஸ்ரீபுரந்தரவிட்டலா ||68**

தர்மத்தின் வழியில் செல்ல வேண்டும் என்றால் மனம் அதில் இறங்காது. துஷ்கர்மங்களுக்கு என்றால், உடனடியாக தயாராகி நின்றுவிடும். நம் கலியுக தர்மமோ, அல்லது ஸ்ரீஹரியைக் குறித்தான, அல்லது நம் ஜீவனத்திற்கான கர்மமோ, அதனை கெட்ட வழியில் / யுக்திகளில் செய்யலாம் என்று செல்பவர்களின் தேகத்தின் தோலினை கிழிக்காமல் (பிய்க்காமல்) விடமாட்டான் ஸ்ரீபுரந்தரவிட்டலன்.

ஷ்ருணு விப்ர ப்ரவக்ஷ்யாமி யமமார்க்கம் ஸுதுர்கமம் |
ஸுகதம் புண்யஷீலானாம் பாபினாம் பயதாயகம் ||
(நாரத புராணத்தின் 31ம் அத்தியாயம்)

புண்ணியம் செய்தவர்களுக்கு எம மார்க்கம் மிகவும் சுகத்தை தருகிறது. பாவிகளுக்கு மிகவும் பயத்தை கொடுப்பதாக இருக்கிறது என்று அத்தியாயம் துவங்குகிறது. எம மார்க்கம் மொத்தம் 86 ஆயிரம் யோஜனைகள் தூரம் இருக்கிறது. தானம் செய்தவர்கள் தர்மத்தை பின்பற்றியவர்கள், தம்முடைய வழியில் சுகமாக செல்கின்றனர். யார் தர்மத்தை விட்டார்களோ, அவர் மிகவும் துக்கம் அடைகிறார்கள். தர்மத்தை விட்டவர்களுக்கு எம தூதர்கள் நிரந்தரமாக அடித்துக் கொண்டே இருக்கின்றனர். சேற்றில் மூழ்கடிக்கின்றனர். நெருப்பில் இறக்குகின்றனர். இன்னும் சில தூரம் வழியில் கத்தியை தீட்டிக் கொண்டிருக்கின்றனர். முட்களை போட்டு இருக்கின்றனர். கடும் இருட்டு இருக்கிறது. வழியானது திடீரென்று தென்படாமல் பெரும் பள்ளம் தெரிகிறது. அந்த வழியில் தப்பித்துக் கொண்டு செல்வதற்கு முயற்சி செய்தவர்கள், எம பாஷத்திலிருந்து அடிபடுகிறார்கள். இவ்வாறு தர்மத்தை விட்டவர்களின் நிலை பற்றி சக முனிவர்கள் சொல்கின்றனர்.

***

**தனதாஸெ தைன்யவம்படிஸுதிதெ**
**வனிதெயர ஆஸெயென்ன ஓட்யாடிஸுதலிதெ**
**மனதாஸெ மந்த்ரவ கெடிஸுதிதெ**
**மனெவார்த்தெயாஸெ மனவ பாதிஸுதிதெ**
**இனிதராஸெய பிடிஸி நின்ன சரணங்கள**
**நெனெவந்தெ மாடோ புரந்தரவிட்டலா ||69**

செல்வத்தின் மேலான ஆசை என்னுடைய பணிவினை குறைத்துவிட்டது. பெண்களின் மேல் உள்ள ஆசை என்னை அங்குமிங்கும் ஓடச்செய்கிறது. மனதின் ஆசைகள் என் சாதனையை கெடுக்கிறது. வீட்டின் (குடும்பத்தின்) மேல் உள்ள ஆசை என் மனதினை பாதிக்கிறது. இன்னும் இருப்பதான வெவ்வேறு ஆசைகளை விடுவித்து, நான் எப்போதும் உன்னுடைய சரணங்களையே நினைக்குமாறு செய்வாயாக ஸ்ரீபுரந்தரவிட்டலா.

ஆசை என்பது ஒருவனுக்கு காலில் கட்டிய சங்கிலியைப் போன்றதாகும். ஏனெனில், கட்டியவுடன் அவனுக்கு கால் இருந்தாலும், அவன் எங்கும் போகாமல் அமர்ந்து விடுவான். அந்த சங்கிலியை அவிழ்த்தவுடன், மிகவும் மகிழ்ச்சியுடன் ஓடிவிடுவான்.

ஆசையும் அப்படியே. ஆசைக்கு மயங்கியவன், கண்டவர்களுக்கு தாசனாகி, அவர்களிடம் வேண்டி, தன் ஆசை பூர்த்தி ஆகாமல் கஷ்டப்படுவான். யார் ஒருவனுக்கு ஆசையே இல்லையோ, அந்த ஆசையை அவன் தன் தாசனாக ஆக்கிக் கொள்வான். இவன் சொல்வதைப்போல அந்த ஆசை கேட்குமே தவிர, தான் ஆசைக்கு அடிமை ஆகமாட்டான். ஆசையை விட்டவன் எவனோ, அவனுக்கு இந்த உலகத்தில் எதனாலும், யாராலும் ஆவதென்ன? உலகத்தில் இருக்கும் அனைத்தும் கிருமி போன்றதே. ஆகையால், இத்தகைய ஆசையை விட்டு, எவ்வித பலன்களையும் எதிர்பாராமல், பரமாத்மனை வேண்டினால், கருணைக்கடலான ஸ்ரீஹரி ரமா சமேதனாகி, தானே தரிசனம் அளித்து, தன்னையே கொடுக்கிறான்.

***

**காளிகிக்கித தீவிகெயந்தெ ஈதேஹ**
**நிமிஷவோ நிமிஷார்த்தவோ திளியலாகது**
**காலகாலகளலி ஹரிகுண கல்யாணகள**
**கேளதவன ஜன்மவ்யர்த்தவோ புரந்தரவிட்டலா ||70**

இந்த உயிரானது காற்றில் ஆடும் தீபத்தைப் போன்றதாகும். எந்த நொடியில் அணைந்துவிடுமோ தெரியாது. அந்த மரணமானது இந்த நிமிடத்திலேயோ, இந்த அரை நிமிடத்திலேயே என்பது கூட நமக்குத் தெரியாது. ஆகவே, நாம் இப்போதே, நினைவுடன் இருக்கும்போதே, அந்த ஸ்ரீஹரியின் கல்யாண குணங்களை பிறர்

சொல்ல கேட்க வேண்டும். ஸ்ரவணம் செய்ய வேண்டும். அப்படிக் கேட்காதவனின் வாழ்க்கை வீண் ஆகிவிடுமே, ஸ்ரீபுரந்தரவிட்டலா.

அந்தகன தூதரிகெ கிஞ்சித்து தயவில்ல
சிந்தெயனு பிட்டு ஸ்ரீஹரியே நெனெவோ மனவே -
என்று ஸ்ரீபுரந்தரதாஸர் தனது தேவரநாமாவில் பாடியதையே இங்கு உகாபோகமாக பாடியிருக்கிறார்.

எமதேவரின் தூதர்களுக்கு சிறிதும் கருணை என்பதே இல்லை. எந்த நேரமும் அவர்கள் நம்மை அழைத்துச் செல்ல வந்துவிடலாம். ஆகவே, கிடைத்திருக்கும் இந்த சிறிய நேரத்தில், ஸ்ரீஹரியின் நாமஸ்மரணையை செய்வாயாக, மனமே.

***

**ஹிம்ஸகர ஸங்கதிந்த பந்த பாதகக்கெ**
**கம்ஸ ஹிம்ஸகனெந்தரெ ஸாலதெ**
**ஜாரர ஸங்கதிந்த பந்த பாதகக்கெ**
**கோபி ஜாரனெந்தரெ ஸாலதெ**
**சோரர ஸங்கதிந்த பந்த பாதகக்கெ**
**நவனீத சோரனெந்தரெ ஸாலதெ**
**ஜார சோரராத அஜாமிளாதிகளன்னு**
**வைகுண்டகேரிஸித புரந்தரவிட்டலகெ நமோ நமோ ||71**

மற்றவர்களை துன்பப்படுத்துபவர்களுடன் நட்பு வைத்துக் கொண்டதால் வந்த பாதகங்களுக்கு, 'ஹே கம்ஸ ஹிம்ஸகா' என்று உன்னை புகழ்ந்தால் போதாதா?. பிற பெண்களின் மனம் கவர்ந்தவர்களுடன் நட்பு வைத்துக் கொண்டதால் வந்த பாதகங்களுக்கு, 'ஹே கோபி ஜார' என்று உன்னை புகழ்ந்தால் போதாதா?. திருடர்களுடன் நட்பு வைத்துக் கொண்டதால் வந்த பாதகங்களுக்கு, 'ஹே நவனீத சோர' என்று உன்னை புகழ்ந்தால் போதாதா?. இவ்வாறு ஜார, திருடர்களான அஜாமிளனே முதலானவர்களை மோக்ஷம் அளித்து வைகுண்டத்தில் சேர்த்த ஸ்ரீபுரந்தரவிட்டலனுக்கு நமோ நமோ ||.

இதே உகாபோகத்தின் ஸாரமாக இருக்கும், ஸ்ரீஜகன்னாததாஸரின் ஹரிகதாம்ருதஸாரத்திலிருந்து ஒரு பத்யத்தினை பார்ப்போம்.

பூ4தளதி ஜனருகளு மர்மக
மாதுகளனாடிதரெ ஸஹிஸதெ
காதி ஸுவரதி கோபதிந்தலி எச்சரிப தெரதி |
மாதுளாந்தக ஜார ஹே நவ
நீத சோரனே எனலு தன்ன நி
கேதனதொளிட்டவர ஸந்தெயிஸுவனு கருணாளு ||13-31

உலகத்தில் யாராவது யாரையாவது, அவர் மனம் புண்படும்படி பேசிவிட்டால், உடனே அவர் அதை பொறுக்காமல், அவருக்கு தக்க தண்டனை கொடுப்பார். உயர்ந்த குரலில் மறுபடி இதைப்போல செய்யாதே என்று எச்சரிப்பார். ஆனால், ஸ்ரீபரமத்மன் அப்படியல்ல. ஹே மாதுளாந்தகா. ஹே ஜார. ஹே நவனீத சோரா. என்று உரத்த குரலில் அழைத்தால், மிகுந்த கருணையுடன் அவர்களுக்கு முக்தியைக் கொடுத்து காப்பாற்றுவான். ஆகையாலேயே, கருணாளு என்கிறார் ஸ்ரீஜகன்னாததாஸர்.

***

**ஹரிசரணரு என்ன மனெகெ பந்தரெ மனெ பாவன்னவப்பது**
**ஹரிசரணரு என்ன கூடெ மாதனாடிதரெ தனு பாபஹோஹூது**
**மனெயொளுண்டரெ என்ன இப்பத்தொந்துகுல பாவன்னவப்பது**
**ஹரிசரணரெனகெ கதி ஹரிஸரணரெனகெ தெஸெ**
**ஹரி கதுகின வீர நாராயண புரந்தரவிட்டலா || 72**

ஹரிபக்தர்கள் என் வீட்டிற்கு வந்தால், என் வீடு பவித்ரமாகிறது. ஹரிபக்தர்கள் என்னுடன் பேசினால், என்னுடைய (தேகத்தின்) பாவங்கள் தொலைகின்றன. அவர்கள் என் வீட்டில் உண்டால், என்னுடைய 21 குலங்கள் பவித்ரமாகின்றன. ஹரிபக்தர்களே எனக்கு கதி. அவர்களே எனக்கு வழிகாட்டி. ஹே ஹரியே, கதுகின வீர நாராயணனே, ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

ஸங்கவாகலி ஸாது ஸங்கவாகலி, ஸங்கதிந்த லிங்க தேஹ பங்கவாகலி - என்று சொல்லியிருப்பதைப் போல, கற்றறிந்த அறிஞர்களுடன் நாம் பழக வேண்டும். அவர்களை நம் வீட்டிற்கு வரவழைத்து, பேசி, ம்ருஷ்டான்ன போஜனங்களை அளித்து உபசரித்தால், நம் வீடு பவித்ரமாகின்றது, நம் குலம் தழைக்கின்றது என்று ஸ்ரீதாஸர் சொல்வதாக அறிய வேண்டும்.

இதற்கு மாறாக நடந்தால் என்ன நடக்கும் என்பதையும் இதே உகாபோகத்திலிருந்து அறியலாம். கற்றறிந்த பகவத் பக்தர்களுடன் சங்கம் செய்யவில்லையென்றால், வீட்டிற்கு அழைக்கவில்லையெனில், உபசரித்து, அன்னாதிகளை அளிக்காவிடில், இங்கு சொல்லப்பட்டுள்ள பலன்களுக்கு எதிராகவே அவை அமையும் என்பது தெள்ளத்தெளிவு.

***

**பாதகரொளகெல்ல நானு வெக்களவனய்ய**
**ப்ராயச்சித்ததலி நின்ன நாம வெக்களவய்ய**
**பாதகவ நா மாடிதெனு ப்ராயச்சித்தவ நீடு**
**இன்னீதர பயவய்ய புரந்தரவிட்டலா ||73**

கெட்டவர்களில் நான் மிகச் சிறந்தவன் ஐயா. ப்ராயச்சித்தம் செய்வதில் (கொடுப்பதில்) உன்னுடைய பெயர் மிகச் சிறந்தது ஐயா. கெட்ட செயல்களை நான் செய்தேன்; ப்ராயச்சித்தத்தை நீ கொடு. அதைவிட வேறு என்னதான் பயம் எனக்கு ஸ்ரீபுரந்தரவிட்டலா.

இதற்கான உதாரண பத்யமாக ஸ்ரீஜகன்னாததாஸரின் ஹரிகதாம்ருதஸாரத்தில் ஒரு பத்யத்தை பார்ப்போம்.

பாபகர்மவ ஸஹிஸுவொடெ லகு
மீபதிகெ ஸமராத திவிஜர
நீ பயோஜபவாண்ட தொளகாவல்லி நா காணே |
கோப குருவினமடதி ப்ருகு நக
சாப மொதலாதவரு மாட்த ம
ஹாப1ராதகளெ ணிஸிதனெ கருணாஸமுத்ர ஹரி ||(2-19)

பக்தர்கள் செய்யும் பாவ கர்மங்களை மன்னிப்பதில், லட்சுமிபதியான, கருணைக்கடலான ஸ்ரீஹரியை விட்டால், இந்த பிரம்மாண்டத்தில் எங்கு தேடினாலும், வேறு யாரும் கிடைக்கமாட்டார்கள். தேவேந்திரன், சந்திரன், பிருஹஸ்பதி ஆச்சார்யரின் மனைவியான தாரா, ப்ருகு ரிஷி, ருத்ரதேவர் ஆகியோர் செய்த மகா அபராதங்களை (தவறுகளை), கண்டுகொள்ளாமல் இருந்தானே? ஆகையாலேயே, அவனுக்கு கருணைக்கடல் என்று பெயர் வந்தது.

***

**ஸ்வானன கங்குளொளகிட்டு வாரணாஸிகெ போதனந்தெ**
**மானவகேளு மதமத்ஸரகள பிடதெ**
**ஏனு மாடிதரேனு வ்யர்த்தவல்லவெ**
**ஞானி புரந்தரவிட்டலன நெனெ காணொ மருளி || 74**

ஒரு நாயை உடன் அழைத்துக் கொண்டு வாரணாஸிக்கு சென்றவனைப் போல; ஹே மனிதனே, இதனை கேள். மத மத்ஸரங்களை விடாமல், என்ன நற்செயல்களை செய்தால் என்ன?. அது வீணே ஆகும். ஞானியான ஸ்ரீபுரந்தரவிட்டலனை நினைப்பாயாக. அவனையே திரும்பத் திரும்ப நினைப்பாயாக.

அரிஷட் வர்க்கங்களான காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யங்களை நாம் விடவேண்டும் என்று ஹரிதாஸர்கள் பற்பல பத, பத்யங்களில் பாடியிருந்தாலும், ஒரேயொரு ஹரிகதாம்ருதஸார பத்ய உதாரணத்தை இங்கு பார்ப்போம்.

வேத சாஸ்திர புராண கதெகள
நோதி பேளிதரேனு ஸகல நி
ஷேதகர்மவ தொரெது ஸத்கர்மகள மாடேனு |
ஓதனங்கள ஜரிது ஷ்வாஸ நி
ரோதகைஸிதரேனு காம
க்ரோதவளியதெ நானு நன்னது எம்ப மானவனு ||10-16

காம, குரோதங்களை விடாமல், எப்போதும் நான், எனது என்னும் ஸ்வதந்த்ர பாவத்துடன் உள்ள மனிதன், என்ன புராண, வேத சாஸ்திரங்களை படித்தால், கேட்டால், அதனால் எந்தவொரு பலனும் இல்லை. செய்யக்கூடாத செயல்களை விட்டு, விதிப்படி செய்யவேண்டிய சத்கர்மங்களை சரியாக பின்பற்றினாலும், எந்தவொரு பலனும் இல்லை. தான் ஒரு மிகப்பெரிய யோகி என்று சொல்லிக்கொண்டு அன்ன ஆகாரங்களை விட்டு, மூச்சினை அடக்கினாலும், இவை அனைத்தையும் பரமாத்மனே செய்விக்கிறான் என்று அறிந்து, காம, குரோதங்களை வெல்லும்வரை, எந்தவொரு பிரயோஜனமும் இல்லை என்பது கருத்து.

***

**ஸுகக்கெ தானாரோ துக்கக்கெ தானாரோ**
**ஸுக துக்கவெரடு ஸ்ரீஹரிய அதீனவல்லவே**
**ஸ்ரீ புரந்தரவிட்டலா ||75**

ஸுகத்திற்கு காரணம் யாரோ; துக்கத்திற்கு காரணம் யாரோ; இந்த சுகம், துக்கம் இரண்டும் ஸ்ரீஹரியின் அதீனமாக இருக்கின்றனதானே. ஸ்ரீபுரந்தரவிட்டலா.

சுக துக்கம் இரண்டும் ஸ்ரீஹரியின் அதீனம். எது வந்தாலும் அதனை ஏற்றுக் கொண்டு, அவற்றை ஸ்ரீஹரிக்கே சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்வதான ஹரிகதாம்ருதஸாரத்தின் ஒரு பத்யத்தினை இங்கு பார்ப்போம்.

ஹரியெ முக்ய நியாமகனு எ
ந்தரிது புண்யாபுண்ய ஹருஷா
மருஷ லாபாலாப ஸுகதுக்காதி த்வந்த்வகள |
நிருத அவனங்க்ரிகெ ஸமர்ப்பிஸு
நரக பூ ஸ்வர்க்காபவர்கதி
கரண நியாமகன ஸர்வத்ரதலி நெனெவுதிரு ||11-14

ஸ்ரீஹரியே அனைத்து செயல்களையும் செய்விக்கிறான் என்று அறிந்து புண்ய பாவங்களை, ஸ்ரீபரமாத்மனுக்கு சமர்ப்பணம் செய்யவேண்டும். மகிழ்ச்சி, கோபம், லாபம், நஷ்டம், சுக, துக்கம், என அனைத்தையும், எது வந்தாலும், அவை அனைத்தும் பகவத் விருப்பமே என்று சிந்தித்து, பரமாத்மனுக்கு சமர்ப்பித்து, நரக, பூமி, ஸ்வர்க்க, முக்தி முதலான எந்த இடத்திற்கு நாம் சென்றாலும், நம் இந்திரிய

நியாமகனான ஸ்ரீஹரியே அங்கும் இருந்து, அந்தந்த சுக துக்கங்களை கொடுக்கிறான் என்று அனைத்து இடங்களிலும் பரமாத்மனை சிந்திக்க வேண்டும்.

***

**கண்ணல்லி கேளுவ காம்புதனரிவ**
**ஆக்ராணிஸுவ ஆஸ்வாதிஸுவ ரஸனதி கேளுவ**
**கர்மலோபக லோகவிலக்ஷண புரந்தரவிட்டலா ||76**

கண்களால் பார்க்கிறான். பார்ப்பதை அறிகிறான். (அந்த இந்த்ரியத்தினாலேயே) நுகர்கிறான். (அந்த இந்த்ரியத்தினாலேயே) சுவைக்கிறான். வாயினால் கேட்கிறான். கர்மங்களின் லோபங்கள் அற்றவன். உலகத்திலுள்ள அனைத்திலிருந்தும் விலக்ஷணன். ஸ்ரீபுரந்தரவிட்டலன்.

இந்த உகாபோகத்திற்கு தக்க உதாரணமாக உள்ள ஒரு ஹரிகதாம்ருதஸார பத்யத்தினை பார்ப்போம்.

ஜக$^{3}$வனெல்லவ நிர்மிஸுவ நா
ந்மொகனொளகெ$^{3}$ தானித்து$^{3}$ ஸலஹுவ
க$^{3}$க$^{3}$னகேஷனொளித்து ஸம்ஹரிஸுவனு லோகக$^{3}$ள |
ஸ்வக$^{3}$தபே$^{4}$த$^{3}$ விவர்ஜிதனு ஸ
ர்வக$^{3}$ ஸதா$^{3}$னந்தெ$^{3}$ய்கதே$^{3}$ஹனு
ப$^{3}$கெ$^{3}$ப$^{3}$கெ$^{3}$ய நாமத$^{3}$லி கரெஸுவ ப$^{4}$குதரனு பொரெவ ||2-8

ஸ்ரீஹரி, தோஷங்கள் அற்ற அனேக குணங்களை பூரணமாக உள்ள ஸ்வரூபன். ஸ்வதந்த்ரன். சேதனாத்மக சரீரம் இல்லாதவன். வெறும் ஆனந்தத்தையே கொடுக்கக்கூடிய கை, பாதம், முகம், வயிறு ஆகியவற்றைக் கொண்டவன். அனைத்து இடங்களிலும் இருக்கக்கூடிய ரூபங்களில் பேதங்கள் இல்லாதவன். தன் அங்கங்களில், நம்மைப் போல கண்களாலேயே பார்க்க வேண்டும், காதுகளாலேயே கேட்க வேண்டும் என்னும் தர்மங்கள் அவனுக்கு இல்லை. நாம் கை, கால்களினால் செய்யக்கூடிய வேலைகளை, பரமாத்மன் தன் ஒரு முடியினாலும், நகத்தினாலும் கூட செய்யத்தக்கவன். ஆகையால் 'ரோமஸ்ச பூர்ண: நகஸ்சபூர்ண:' ஆகிய வாக்கியங்களால் பரமாத்மனை வேதங்கள் புகழ்கின்றன.

***

**அந்து கோகுலதல்லி கோபாலகராகி**
**அனிமிஷரெல்ல ஸாலோக்யவ படெதரு**
**அந்து கோவுகளாகி ஸாதனமாடி**
**ஸாமீப்யவன்னு படெதரு கெலரு**
**அந்து நின்னனு கூடி ஆடி ஸாரூப்யவெம்ப**
**முக்திய படெதரு தத்வாபிமானிகளு**
**ஒந்தொந்து அவயவதல்லி ஸாயுஜ்யவெம்ப**
**முகுதிய படெதரு கெலவு**
**ஆக ஸாயுஜ்ய ஸர்வாங்கதல்லி அஜகித்து**
**ஸலஹிதெ அனுபம குணநிலய**
**குருபுரந்தரவிட்டல முக்யப்ரதானனிகெ ||77**

அன்று கோகுலத்தில் கோபாலகர்கள் ஆகி, தேவதைகள் அனைவரும் ஸாலோக்ய மோக்ஷத்தை அடைந்தனர். அவர்களில் சிலர் அங்கு பசுக்கள் ஆகி, ஸாதனை செய்து, ஸாமீப்ய மோக்ஷத்தை அடைந்தனர். தத்வாபிமானி தேவதைகளோ, உன்னுடன் கூடி, ஆடி, பின்னர் ஸாரூப்ய என்னும் மோக்ஷத்தை அடைந்தனர். ஒவ்வொரு அவயவத்திலும் ஸாயுஜ்ய என்னும் முக்தியை பெற்றனர் சிலர். அப்போது, ஸர்வாங்கங்களில் ஸாயுஜ்ய மோக்ஷத்தை ப்ரஹ்மனுக்கு அளித்து நீ அருளினாய். எல்லையில்லாத குணங்களின் நிலையனே. குருபுரந்தரவிட்டலனே. முக்யப்ராணனுக்கு (அருளினாய்).

முக்தியின் பல நிலைகளைப் பற்றி சொல்வதான உகாபோகமாக இது இருக்கிறது. இந்த நான்கு வித மோக்ஷங்களைப் பற்றி, பல ஹரிதாஸர்கள் பல க்ருதிகளில் பாடியிருந்தாலும், ஸ்ரீமோஹனதாஸர் இயற்றிய கோலு ஹாடுவில் உள்ள ஒரு பத்யத்தை மட்டும் இங்கே பார்ப்போம்.

ஸாரூப்ய ஸாலோக்ய ஸாமீப்ய ஸாயுஜ்ய
ஸாரிஷ்டி பஞ்சவித முக்தி கோலெ |
ஸாரிஷ்டியெம்போது விரிஞ்சியொப்பகெ
ஈரெரடு முக்தி இதரரிகெ கோலெ ||113

ஸாரூப்ய, ஸாலோக்ய, ஸாமீப்ய மற்றும் ஸாயுஜ்ய என்பது முக்தர்களின் நான்கு வித நிலைகளாகும்.

பரமாத்மனின் உறுப்புகளிலிருந்து பிறந்து, அவற்றையே வணங்கிக் கொண்டு, அந்த உறுப்புகளையே (அவற்றின் மகிமைகளையே) உபாசனை செய்து, முக்தியில் அந்தந்த அங்கங்களிலேயே நுழைந்து, பற்பல போகங்களை அனுபவிக்கும் சூர்ய, சந்திராதி தேவதைகள் அடையும் முக்தி 'ஸாயுஜ்ய' ஆகும்.

**இதர முக்திகள்**, ஸ்ரீஹரி எல்லா இடங்களிலும் இருப்பதால், அனைத்து உலகங்களிலும் இருக்கின்றன. முக்தர்களுக்குக் கிடைக்கும் ஸ்தானங்கள், அவர்களது ஞானாதி தகுதிகளின்படி, ஸ்ரீஹரியின் த்ரிதாமங்களுக்கு அருகிலும் இருக்கின்றன.

ஸார்ஷ்டி முக்தி என்றால் சரிசமமான இடம் மற்றும் அதிகாரம் என்று பொருள். இதையே சந்தத்துக்காக ஸாரிஷ்டி என்றிருக்கிறார். இது ஸாயுஜ்ய முக்தியிலிருந்து சற்று வேறுபட்டதாக இருக்கிறது. சூர்யாதி முக்த தேவதைகள், கண் போன்ற ஸ்ரீஹரியின் அங்கங்களில் நுழைந்து, தத்தம் போகங்களை அங்கே அனுபவிப்பதைப் போல, பிரம்மனின் போகம் இல்லை. பிரம்மன் மட்டும் ஸர்வாங்க ஸாயுஜ்யத்தை அனுபவிப்பவர். அதுவே ஸார்ஷ்டி ஆகும்.

பிரம்மனைத் தவிர இதர முக்தர்களுக்கு ஸாலோக்யாதி நான்கு (ஈரெரடு) வித முக்திகளும் (அவரவர் தகுதிக்கேற்ப) கிடைக்கின்றன.

ஸார்ஷ்டி என்னும் சொல், ஸாயுஜ்ய என்னும் அர்த்தத்திலும் பயன்படுத்தப்படுகிறது. ஸர்வாங்க ஸாயுஜ்யத்தை ஸார்ஷ்டி என்று சொல்லி, முக்திகள் இவ்வளவு விதங்கள் என்று இந்த ஸ்லோகத்தில் சொல்லியிருக்கிறார் ஸ்ரீமோஹனதாஸர்.

***

**ஒப்பர பண்டனாகி கால களெவுதுகிந்த**
**நிர்ப்பந்தவில்லதெ தன்னிச்செயொளித்து**
**லப்யவாதொந்து தாரக ஸாகு ஸாகு எனகெ**
**அப்பரவொல்லெனய்ய அஷ்டரல்லி ஸந்துஷ்டனஹெனு**
**கருணாகர புரந்தரவிட்டல லப்ய ஒந்து தாரக ஸாகு ஸாகு ||78**

ஒருவரின் சேவகனாக இருந்து காலத்தை கழிப்பதைவிட, எவ்வித நிர்ப்பந்தங்களும் இன்றி, தன்னிச்சையாக (யாரும் சேவகம் செய்யாமல்) இருந்து கொண்டு, எனக்கு ஒரு தாரகம் (உதவி) கிடைத்திருக்கிறது; அதுவே எனக்கு போதும், போதும் என்றவாறு; அதிகமாக எதையும் வேண்ட மாட்டேன் ஐயா, இருப்பதை வைத்துக் கொண்டே திருப்தி ஆகியிருக்கிறேன் என்று (இருக்கிறேன்). கருணாகரனான, ஸ்ரீபுரந்தரவிட்டலனின் பெயர் என்னும் தாரகமே எனக்கு போதும் போதும்.

இந்த உகாபோகத்தின் ஸாரத்தை விளக்குவதான ஒரு பத்யத்தை ஸ்ரீஜகன்னாததாஸர், தனது 'பலவிது பாள்துதக்கே' என்னும் க்ருதியில் இயற்றியிருக்கிறார்.

ஸ்வோசித கர்மகளாசரிஸுத பலு
நீசரல்லிகெ போகி யாசிஸதெ
கேசரவாஹ சராசர பந்தக
மோசகனஹுதெந்து யோசிஸுதிப்புதே |1|

ஓம் விஹிதத்வாச்சாஸ்ரமகர்மாபி ஓம் (பிரம்மசூத்திரம்). வர்ணாசிரமத்திற்கேற்ப கர்மானுஷ்டானங்களை, விதிகளுக் கேற்ப பிரம்மஞானிகளுக்கும் உண்டு என்று சொல்லியிருக் கின்றனர். ஸ்வயோக்ய கர்மங்களை பக்தியுடன் பின்பற்றி அவற்றை அர்ப்பணம் செய்வதே சிறந்த பகவத்பூஜை என்றும், அதுவே பரம தர்மம் என்றும், அதற்கு எதிரான நடவடிக்கைகள் அனைத்தும் அதர்மமே என்றே, கீதாசார்யனான ஸ்ரீகிருஷ்ணன் உபதேசம் செய்தான் என்று ஸ்ரீமன் மத்வாசார்யர் நிர்ணயம் செய்திருக்கிறார்.

நீசரன்னு என்றதில், துர்ஜனர்களை கேட்கக்கூடாது என்பது மட்டுமல்ல, நம் அனைத்து விருப்பங்களையும் வேண்டுதல் களையும் நிறைவேற்றக்கூடிய ஸ்ரீமன் நாராயணனைத் தவிர்த்து, அல்ப பலன்களைக் கொடுக்கக்கூடிய கீழ் மட்ட (அதமரான) பிற தேவதைகளை யாசிக்கக்கூடாது. அது ஒரு விஷ்ணு பக்தனுக்கு அழகில்லை. இதையே பாகவதத்தில் பக்தன் அக்ரூரர் சொல்கிறார்.

அந்த தாரக மந்த்ரம் என்றால் என்ன? அதை ஸ்ரீபுரந்தரதாஸரே தனது ஒரு தேவரநாமாவில் இவ்வாறு பாடியிருக்கிறார்.

ராம மந்தரவ ஜபிஸோ, ஹே மனுஜா
ராம மந்த்ரவ ஜபிஸோ
ஆ மந்த்ர ஈ மந்த்ர மெச்சி கெடலுபேடா
சோம சேகர தன்ன பாமெகே ஹேளித மந்த்ர (ராம)

குலஹீனனாதரு கூகி ஜபிஸுவ மந்த்ர
சல பீதியொளு உச்சரிப மந்த்ர
ஹலவு பாபங்கள ஹதகெடிசுவ மந்த்ர
சுலபதிந்தலி ஸ்வர்க சூரெகொம்புவ மந்த்ர (ராம)

மருதாத்மஜ நித்ய ஸ்மரணெ மாடுவ மந்த்ர
சர்வ ரிஷிகளிலி சேரித மந்த்ர
துரித கானனகிது தாவானல மந்த்ர
பொரெது விபீஷணிகே பட்ட கட்டித மந்த்ர (ராம)

ஞானநிதி நம்ம ஆனந்த தீர்த்தரு
சானுராகதி நித்ய சேவிப மந்த்ர
பானுகுலாம்புதி சோம நேனிப மந்த்ர
தீன ரக்ஷக புரந்தர விட்டலன மந்த்ர (ராம)

***

**காலமேலெ மலகி ஸிம்பிலி ஹால குடிது பெளதெ**
**மூரு லோகவு நின்னுதரதல்லிரலு**
**ஈரேளு லோகவனீரடி மாடலு**
**மூருலோகதொடெய ஸ்ரீபுரந்தரவிட்டல நின்ன**
**பாலகதனத லீலெகெ நமோ நமோ ||79**

(ஹே ஸ்ரீகிருஷ்ணா) கால் மேல் கால் போட்டுக் கொண்டு, ஒரு கிண்டியில் பால் குடித்தவாறு நீ வளர்ந்தாய் - மூன்று உலகங்களும் உன் வயிற்றிலேயே இருக்கையில். ஈரேழு பதினான்கு உலகங்களையும், உன்னுடைய

இரு காலடிகளில் அடக்குவதற்கு வந்தாயே, மூன்று உலகங்களின் தலைவனான ஸ்ரீபுரந்தர விட்டலனே. உன்னுடைய பால லீலைகளுக்கு நமோ நமோ.

ஸ்ரீகிருஷ்ண பால லீலைகள் பற்றி அனேகமாக எல்லா ஹரிதாஸர்களும் பாடியிருப்பார்கள். ஸ்ரீவாதிராஜர் இயற்றிய 'பாகவத 10ம் ஸ்கந்த பாடலும்' , ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸர் இயற்றிய பாகவதம் பற்றியதான பாடல்களின் தொகுப்பும் முக்கியமானவை. இங்கு ஹரிதாஸினி அம்பாபாய் இயற்றிய 'ஸ்ரீகிருஷ்ணன பால லீலே ஜோகுள' தீர்க்க க்ருதியிலிருந்து சில பத்யங்களை பார்ப்போம்.

நமோ நமோ குருசரண கமலகளிகெரகுவெனு
க்ரமதிந்தெ ஸூரரிகபிநமிஸெ | அபிநமிஸி பேளுவெனு
கமலனாபன்ன ஜோகுளவ ||1

கெட்ட பூதனியெம்ப துஷ்ட ரக்கஸி பஹள
ஶிஷ்டளந்தெ நடிஸி கோகுலகெ | கோகுலகெ ஸாருத்த
த்ருஷ்டிஸி நோடிதளு கந்தன்ன ||30

புட்டபாயலி தன்ன பட்ட குசகளனிட்டு
கொட்டளு விஷத மொலெயன்னு | மொலெயன்னு சீபுத்தா
துஷ்டெ அஸுவன்னே ஹீரிதனு ||31

***

**அல்லி வனகளுண்டு அப்ராக்ருதவாத**
**பலபுஷ்பகளிந்தொப்புதலிஹுது பக்ஷி ஜாதிகளுண்டு**
**அதி விலக்ஷணவாத கிலகில ஶப்தவு ரஞ்ஜிஸுவ நுடிகளு**
**முகுதரு பந்து ஜலக்ரீடெகள மாடி ஸுகிபரு**
**இந்தா ஸுக பேகாதரெ நீச வ்ருத்திய பிட்டு**
**பரலோக ஸுகவீவ புரந்தரவிட்டலன பஜிஸு ஜீவ || 80**

இந்த உகாபோகத்தில் மோக்ஷத்தின் வர்ணனை இங்கு இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

அங்கு அல்லி வனங்கள் இருக்கின்றன. அப்ராக்ருதமான பழ, புஷ்பங்களால் அந்த வனங்கள் நிறைந்திருக்கின்றன. பற்பல பறவை ஜாதிகள் அங்கு இருக்கின்றன. அந்தப் பறவைகள் அனைத்தும் விதம்விதமான சப்தங்களை செய்கின்றன. இனிமையாக பாடுகின்றன. முக்தர்கள் அந்த இடத்திற்கு வந்து, ஜலக்ரீடைகளை செய்து சுகமாக இருக்கின்றனர். பக்தர்களுக்கும் இத்தகைய சுகங்கள் வேண்டுமெனில், நீசமான வ்ருத்திகளை (செயல்களை / நடவடிக்கைகளை) விட்டு, அவனை வேண்டினால், இத்தகைய பரலோக சுகங்களை அருள்கிறான் ஸ்ரீபுரந்தர விட்டலன். ஆகையால், ஜீவனே அவனை பஜிக்க வேண்டும்.

ஸ்ரீவாதிராஜர் இயற்றிய தத்வஸார என்னும் வைகுண்ட வர்ணனெ கன்னட க்ருதியில், மோக்ஷ ஸந்தியில், மோக்ஷத்தின் வர்ணனை மிகவும் விஸ்தாரமாக செய்யப்பட்டுள்ளது. மோக்ஷ ஸ்தானத்தின் சிறப்புகள், அங்கு இருக்கும் அரண்மனைகள், தோட்டங்கள், தடாகங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் மகிமைகளை சொல்லி, அங்கிருக்கும் முக்தர்களின் நிலை எப்படியிருக்கும் என்பதை ஸ்ரீவாதிராஜர் அற்புதமாக விளக்கியிருக்கிறார் என்பதை அந்த க்ரந்தத்தை படித்து தெரிந்து கொள்ளலாம். அதையே மிகவும் சுருக்கமாக இந்த உகாபோகத்தில் ஸ்ரீபுரந்தரதாஸர் பாடியிருக்கிறார்.

***

**மனெயெம்ப ஆஸெயு என்ன முந்துகெடுஸுதிதெ**
**மனெவாருதெயு என்ன பங்கபடிஸுதிதெ**
**வனிதெஸுதராஸெயு என்ன தைன்ய படிஸுதிதெ**
**இனிதாஸெயளிது புத்தி நின்னல்லி**
**நிலுவந்தெ மாடோ புரந்தரவிட்டலா ||81**

வீட்டின் (குடும்பத்தின்) மேலான ஆசை, என்னை முன்னே செல்லவிடாமல் (ஸாதனை செய்யவிடாமல்) கெடுக்கிறது. வீட்டின் நடவடிக்கைகள் என்னை துன்பப்படுத்துகின்றன. மனைவி, மக்களின் மேல் உள்ள ஆசை என்னை தைரியம் இழக்கச் செய்கிறது. இத்தகைய ஆசைகளை அழித்து, என் புத்தியானது உன்னில் நிலைத்து நிற்குமாறு செய்வாயாக ஸ்ரீபுரந்தரவிட்டலா.

இந்த ஸம்சார ஸாகரத்தில் விழுந்து கஷ்டப்படுபவர்கள் நாம். ஆனால் இந்தப் பிறவி நிரந்தரமல்ல என்று இந்த தேகத்தின் மேல் உள்ள ஆசையை விட்டுவிடு என்கின்றனர் தாஸர்கள். நம் உறவினர், நண்பர் யாரும் நம்முடன் வரமாட்டார்கள். வருவது நாம் செய்த தர்மம் மட்டுமே. அதற்கே 'தர்மவ களிஸிரோ' என்ற ரகசியத்தை நம் காதில் ஓதினார்கள். நாளை செய்கிறேன் என்று சொல்லாதீர்கள். காரணம், நாம் நாளை இருப்போமா என்பது தெரியாது. ஸ்ரீகோபாலதாஸர் ஒரு இடத்தில் இதையே 'ஹோகுதிதெ எலோ ஹொத்து, கூகுதிதெ எலோ ம்ருத்யு' என்றார். இதை நினைவில் கொள்ளவேண்டும்.

இந்த தேகம் நிரந்தரமல்ல. இந்த தேகத்தினால் செய்த பாவ புண்ணியங்கள் நம்முடன் வரக்கூடியவை. இதற்காக தாஸர் 'நாளெ மாடுவ தர்மவிந்தெ கெய்யலி பேகு' என்றார். இது அனைத்து ஸாதகர்களும் மறக்கக்கூடாத விஷயமாகும். நற்காரியங்கள் செய்வதற்கு கிடைத்த பிறவி இது என்று அறிந்து, உடனடியாக அதை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆணையிட்ட தாஸர்களின் கருணை அளப்பரியது.

***

**ஏனு ஓதிதரேனு ஏனு கேளிதரேனு**
**ஹீன குணங்கள ஹிங்கத ஜனரு**
**மானாபிமானவ நினகொப்பிஸித மேலே**
**நீனே ஸலஹபேகோ புரந்தரவிட்டலா ||82**

எவ்வளவு படித்தால்தான் என்ன, எவ்வளவு ஸ்ரவணங்களை செய்தால்தான் என்ன, தமது கெட்ட குணங்களை விடாத மக்கள், (பிறகு) மானாபிமானங்களை உன்னிடமே ஒப்படைத்த பிறகு, நீயே அவர்களை காக்க வேண்டும் ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

இத்தகைய சரணாகதி முறையைப் பற்றி ஸ்ரீதாஸரே தனது ஒரு கீர்த்தனையில் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

நானேன மாடிதேனோ ரங்கய்யா ரங்க நீ என்ன காயபேகு
மானாபிமானவு நின்னது எனகேனு
தீனரக்ஷக திருப்பதிய வெங்கடரமணா ||ப

முப்பிடு அவலக்கிய தந்தவனிகே ஒப்புவந்தே கொடலில்லவே
ஸர்ப்பஷயன ஸ்ரீபுரந்தரவிட்டலா, அப்ரமேய காயோ ||

என்னுடைய மான, அபிமானங்கள் அனைத்தையுமே உன்னிடம் சமர்ப்பித்திருக்கிறேன். இதைத் தவிர நான் வேறென்ன தவறுதான் செய்தேன்?. நீதான் என்னை காக்க வேண்டும். - என்று சொல்லி - நிந்தா ஸ்துதிரூபமான இந்த கீர்த்தனையில் ஸ்ரீதாஸர் புராணங்களிலிருந்து பல்வேறு பக்தர்களின் உதாரணங்களைத் தந்து நானும் அவர்களைப் போல்தானே, என்னை மட்டும் நீ காணாமல் இருப்பது ஏன்? என்று உரிமையுடன் ஸ்ரீபுரந்தரவிட்டலனை கேட்பது போல அமைந்துள்ள கருத்தே, இந்த உகாபோகத்தின் கருத்தாகும்.

***

**நின்ன கால்ஹெஜ்ஜெய பிடிது நா நில்லுவெ**
**நின்ன பஞ்ஜு ஹிடிது ஒட்டி பொப்பிடுவே**
**நின்ன சத்ர சாமர பிடிதேளுவெ**
**நீரு நிவாளிஸிகொண்டு கொப்பிவேனு**
**பிடெனு பிடெனு நின்ன சரணகமலவ**
**புரந்தரவிட்டல நின்ன பாதவ பிடேனு ||83**

உன்னுடைய கால் சலங்கைகளை (கொலுஸுகளை) பிடித்து நான் நிற்பேன். உன்னுடைய தீபத்தை (தீபஸ்தம்பத்தை) பிடித்து நான் உனக்கு பூஜை செய்வேன். உன்னுடைய சத்ர, சாமரங்களை நான் பிடித்து நடப்பேன். தண்ணீர் கலந்து கொண்டு உனக்கு திருஷ்டி சுற்றுவேன். உன்னுடைய சரண கமலங்களை நான் என்றைக்கும் விடமாட்டேன். ஹே ஸ்ரீபுரந்தரவிட்டலனே, உன்னுடைய பாத கமலங்களை நான் விடமாட்டேன்.

ஸ்ரீப்ரஸன்ன வெங்கடதாஸர் இயற்றிய 'பிடெனோ நின்னங்க்ரி ஸ்ரீனிவாஸா' க்ருதியில் உள்ள இதே விஷயங்களை பார்ப்போம்.

* பல்லவி மற்றும் முதலாம் சரணத்தில் தாசர், 'ஹே ஸ்ரீனிவாசனே, செல்வங்கள் நிறைந்த உன்னுடைய பாதங்களை நான் விடுவதில்லை. என்னுடைய தவறுகளை எண்ணாமல், என் மூலமாக சேவையை பெற்றுக் கொள். 'ந மே பக்த: ப்ரணஷ்யதி' என்னும் நித்ய உண்மையான வாக்கினை நம்பி வாழ்கிறேன்.

* 'ஹே ஸ்ரீனிவாசனே, கோடி சூரியன்களின் ஒளியைக் கொண்ட உனக்கு முன்னால் நான் தீபத்தை பிடித்துக் கொண்டு நிற்கிறேன். உன்னுடைய பிரசாதத்தை அன்புடன் ஏற்றுக் கொள்கிறேன். உன்னுடைய பக்கத்தில், உனக்கு அனுகூலம் ஆகுமாறு உன்னுடைய தாம்பூலத்தை துப்பும் பாத்திரத்தை பிடித்துக் கொண்டு இருக்கிறேன். உனக்கு வெள்ளை குடையை பிடித்து, சாமரங்களை வீசியவாறு மனதில் மகிழ்கிறேன். உன்னுடைய ரத்ன பாதுகைகளை எப்பொழுதும் தலையில் ஏந்தியவாறு மகிழ்ச்சி அடைந்து நடனம் ஆடியவாறு உனக்கு பின்னால் வருகிறேன்' என்று சொல்கிறார் ஸ்ரீதாஸர்.

***

**மலகி பாடிதரெ குளிது கேளுவனு**
**குளிது பாடிதரெ நிந்து கேளுவனு**
**நிந்து பாடிதரெ நலிது கேளுவனு**
**நலிது பாடிதரெ ஸ்வர்க்க**
**ஸூரேபிட்டெனெம்ப புரந்தரவிட்டலா ||84**

நாம் எந்த நிலையில் இருந்தாலும் ஸ்ரீஹரியை விடாமல் தியானிக்க / நினைக்க வேண்டும். அப்படி செய்தால் ஸ்ரீபுரந்தரவிட்டலன் என்ன செய்வான் என்பதை மிகச் சிறப்பாக இங்கு சொல்லியிருக்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

நாம் படுத்துக் கொண்டு அவனைக் குறித்து பாடினால் அமர்ந்து கேட்பான். நாம் அமர்ந்து கொண்டு பாடினால் அவன் நின்று கேட்பான். நாம் நின்று கொண்டு பாடினால், அவன் ஆடிக் கொண்டே கேட்பான். மற்றும் நாம் ஆடிக் கொண்டே பாடினால், ஸ்வர்க்கத்தையே நமக்கு அருள்வான் ஸ்ரீபுரந்தரவிட்டலன்.

பரமாத்மனை வழிபடுவதற்கு நேரம், காலம், இடம் ஆகியவை பொருட்டல்ல. எந்த இடத்திலும், காலத்திலும், எந்த நிலையிலும் பரமாத்மனை வழிபடலாம் என்பதற்கே 'மலகி பாடிதரெ' என்றிருக்கிறார். இப்படியாக ஏகாந்த பக்தர்கள் அவனை பஜிப்பதற்கு, நேரம், காலம், இடம், நிலை, ஆகியவை காரணம் ஆவதில்லை என்னும் அபிப்பிராயத்தையே தாசராயர் இந்த பத்யத்தில் சொல்லியிருக்கிறார்.

இந்த உகாபோகத்தில் சொல்லியிருப்பதற்கு உதாரணமாக பீஷ்மாசார்யர், புண்டலீகன், பிரகலாதன்,, நாரதர் முதலான அனைவருக்கும் கிருஷ்ணன், விட்டலன், நரசிம்ம, நாராயணர்கள் பிரத்யட்சமாக காட்சியளித்திருக்கின்றனர் என்பதை சொல்லலாம்.

***

**தன்ன தானரியதா ஞானவேனு**
**சென்ன ஸ்ரீபுரந்தரவிட்டலன நெனெயதவ**
**ஸன்யாஸியாதரேனு ஷண்டனாதரேனு ||85**

தன்னைத் தானே அறியாதவனின் ஞானத்தினால் என்ன பலன்?. ஸ்ரீபுரந்தரவிட்டலனை நினைக்காதவன் அவன் ஸன்யாஸியாக இருந்தால் என்ன? கீழானவனாக இருந்தால் என்ன?.

ஒருவர் எந்த வர்ணாஸிரமத்தில் இருந்தாலும், எப்போதும் ஸ்ரீபுரந்தரவிட்டலனை நினைக்காதவனாக இருந்தால், அதனால் எவ்வித பலனும் இல்லை என்று அர்த்தம்.

ஸ்ரீவ்யாஸராஜர் இயற்றிய இந்தப் பாடலில் உள்ள இதே போன்றதான கருத்துக்களை பார்ப்போம்.

அந்தரங்கதொளு ஹரிய காணதவ ஹுட்டு குருடனோ
ஸந்தத ஹரி கிருஷ்ண சரிதெ கேளதவ ஜடமதி கிவுடனோ ||

யதார்த்த ஞானத்தை அடைவதன் நோக்கம் என்ன?. நமக்குள் ஸ்ரீஹரியே முதலான அனைத்து தத்வாபிமானி தேவதைகளும் இருக்கிறார்கள் என்றும், அதற்காக அவர்களையே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் சொல்கிறார். இவ்வாறு ஸ்ரீஹரியை தனக்குள் அறியாதவன், பிறவிக் குருடன். மற்றும் ஸ்ரீகிருஷ்ணனின் சரிதையை தொடர்ச்சியாக / இடைவிடாமல் கேட்காதவன், கடும் செவிடன் என்றும் திட்டுவதாக இந்த க்ருதி இருக்கிறது. மேலும் ஸ்ரீஹரி பூஜையை செய்யாதவன் கை உடைந்தவன்; ஸ்ரீஹரியை நினைத்து ஆடாதவன், முடவன்; ப்ரஸாதத்தை உண்ணாதவன் தின்பது கழிவு என்றெல்லாம் பலவாறாக திட்டுவதாக இருப்பதான அந்த க்ருதியில் (மற்றும் இந்த உகாபோகத்தில்) சொல்லியபடி செய்து, நம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்வோமாக.

***

**ஹரிகுருகளிகெ எரகதெ ஹரிபக்தி ஒதகுவுதெ**
**கெரவ திம்போ நாயிகெ துப்பவாக ஸொகஸுவுதெ**
**ஹரி நாமக்கெ ஹரிதாஸரு கரகுவரல்லதெ**
**நரகபாஜனரு பாமரரு கரகுவரெ**
**சந்த்ர கிரணக்கெ சந்த்ரகாந்தி ஒஸருவுதல்லதெ**
**கோருகல்லு ஒஸருவுதெ ஸிரிபுரந்தரவிட்டலா ||86**

ஹரிகுருகளுக்கு இரங்காத பக்தி நமக்கு உதவுமா?. கழிவைத் தின்னும் நாய்க்கு நெய் அன்னம் பிடிக்குமா?. ஹரி நாமத்திற்கு ஹரிதாஸர்கள் இரங்காமல், நரகத்திற்கு செல்பவரான பாமரர்கள் இரங்குவார்களா?. சந்த்ரனின் கிரணங்களுக்கு சந்த்ரகாந்தி என்கிற அழகான பூ மலராமல், கோருகல்லு என்பதான இன்னொரு வகை தாவரம் (எரிபொருளாக மட்டுமே பயன்படுவது) மலருமா?, ஹே ஸ்ரீபுரந்தரவிட்டலா!!.

ஸ்ரீஹரிவாயுகுருகளிடம் பக்தி செலுத்த வேண்டும். ஸ்ரீஹரி நாமத்திற்கு மயங்க வேண்டும் என்கிற கருத்துக்களை கொண்ட உகாபோகம் இது. இதற்கு ஸ்ரீவ்யாஸராஜர் இயற்றிய 'ஸ்ரீமன் மத்வமதே ஹரி: பரதர:' என்றும் ஸ்தோத்திரத்தில் 'முக்திர்னைவ ஸுகானுபூதிரமலாம் பக்திஸ்ச தத்ஸாதனம்' - அதாவது, 'ஸ்வரூபானந்தத்தைக் காண்பதே முக்தி. திடமான பக்தியே முக்திக்கு ஸாதனம்' என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, ஸ்ரீஹரியின் மகிமைகளை அறிந்து, பக்தியுடன் செய்யப்படும் எந்த காரியமும் நற்பலன்களையே கொடுக்கும். இப்படி செய்தால், நாம் கேட்காத முக்தியும் நம்மைத் தேடி வரும் என்கிறார் தாஸர்.

ஸ்ரீஹரியின் நாமங்களின் மகிமை, அனைத்தையும் கொடுக்க வல்லது என்றே அனைவரும் பாடுகின்றனர். எந்த காலத்திற்கும் நிஸ்சல தூய்மையான பக்தியுடன், நற்சிந்தனையுடன் ஸ்ரீஹரியை நினைக்க வேண்டுமென்பதே அனைத்து தாஸர்களின் விருப்பமாக இருக்கிறது.

***

**அபாய கோடிகோடிகளிகெ**
**உபாய வொந்தெ ஹரிபக்தரு தோரிகொட்ட**
**உபாயவொந்தெ புரந்தரவிட்டலனெந்து**
**போவிட்டு கரெவ உபாயவொந்தெ ||87**

கோடிக்கணக்கான ப்ரச்னைகளுக்கு உபாயம் ஒன்றே. அது ஹரிதாஸர்கள் திரும்பத்திரும்ப காட்டிக் கொடுத்த உபாயம். அது என்னவென்றால் - புரந்தரவிட்டலா - என்று வாய்விட்டு கத்தும் (கூறும்) உபாயமே.

ஹரிகதாம்ருதஸாரத்திலிருந்து இதே கருத்தினை சொல்லும் ஒரு பத்யத்தினை பார்ப்போம்.

பிட்டிகள நெவதிந்தலாகலி
ஹொட்டெகோசுக வாதராகலி
கெட்டரோக ப்ரயுக்தவாகலி அணகதிந்தொம்மெ |
நிட்டுசிரினிம் பாய்தெரது ஹரி
விட்டலா சலஹெந்தெனலு கை
கொட்டு காவ க்ருபாலு சந்தத தன்ன பகுதரனு ||22-14

சம்பளமே இல்லாமல் வேலைகளை இலவசமாக செய்யும்போது வரும் கஷ்ட காலங்களிலோ, வயிற்றுக்கு இல்லாமல் கஷ்டப்படும்போதோ, நோயின் தாக்கத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாதபோதோ, பக்தி வைராக்கியத்தினால், ஒரு மனத்துடன், பெருமூச்சு விட்டு, வாய் திறந்து, அய்யோ அப்பா என்று சொல்லாமல், ஹரே, விட்டலா, என்னைக் காப்பாற்று என்று நினைத்தால் போதும். கருணாளுவான ஸ்ரீஹரி, தன் பக்தர்களின் சிந்தனையை மெச்சி, அவர்களை கை கொடுத்து காக்கிறான்.

***

**லேஸு தாஸரிகெ க்லேஶ துஷ்டரிகெ**
**ஸிரி பாகவதரிகெ தாரித்ர்ய த்ரோஹிகளிகெ**
**கீர்த்தி கிங்கரரிகெ அபகீர்த்தி க்ரூரரிகெ**
**ஜய தேவரிகெ அபஜய மங்குகளிகெ**
**நஷ்ட கபடரிகெ லாப மஹாத்மரிகெ**
**புரந்தரவிட்டலன ஆளுகளிகெ முக்தி**
**தைத்யரிகெ அந்தந்தமஸ்ஸு ஸந்தேஹவில்ல ||88**

தாஸர்களுக்கு இன்பம், துஷ்டர்களுக்கு துன்பம். பாகவதர்களுக்கு செல்வம், த்ரோகிகளுக்கு ஏழ்மை. சேவகர்களுக்கு புகழ், க்ரூரர்களுக்கு இகழ். ஞானம் உள்ளவர்களுக்கு வெற்றி, இல்லாதவர்களுக்கு தோல்வி. கபடம் கொண்டவர்களுக்கு நஷ்டம், மஹாத்மருக்கு லாபம். ஸ்ரீபுரந்தரவிட்டலனின் ஆட்களுக்கு (பக்தர்களுக்கு) முக்தி. தைத்யர்களுக்கு அந்தம்தமஸ். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஸ்ரீஹரியின் நாமஸ்மரணைக்கு கிடைக்கும் பலன்களைப் பற்றி பல்வேறு பத, பத்யங்கள் உள்ளன. அதிலிருந்து (இந்த உகாபோகத்திற்கு சம்பந்தப்பட்ட) ஒரேயொரு விளக்கத்தினை மட்டும் இங்கு பார்ப்போம்.

மக்களின் பாவ புண்ணியாதி கர்மங்களை தான் ஏற்றுக்கொண்டு, த்வேஷிகளுக்கு த்வேஷ பலன்களைக் கொடுத்து, பக்தர்களுக்கு புண்ய பலன்களைக் கொடுக்கிறார். 'ஷுபம் பவத்யஸௌ நித்யம் னாஷுபம் ஸஹரி: பிபேத்' என்னும் பிரம்மசூத்ர பாஷ்யத்தின் வாக்கியத்திற்கேற்ப பாபிகளின் பாப கர்மங்களுக்கேற்ப அவர்களுக்கு பலன்களைக் கொடுக்கிறார். பக்தர்கள் செய்யும் பாப கர்மங்களை பஸ்மம் ஆக்குகிறார். புண்ய பலன்களை தான் உண்டு, அவர்களுக்கும் கொடுக்கிறார். ஆனால், நிஜ பக்தர்கள் பூஜைகளை செய்து, அறுசுவைகளுடன் அன்ன, பக்ஷ்ய, பழங்களைக் கொடுத்தால், அதை ஏற்றுக்கொள்கிறார். ஆனால் அவை தனது இந்திரிய ப்ரீதிக்காக அல்ல.

***

**ஆவாவ யுகதலி விஷ்ணுவ்யாபகனாகி**
**விஷ்ணு இத்தல்லி விஷ்ணுலோகாகிப்புதாகி**
**ஸாலோக்ய ஸாரூப்ய ஸாமீப்ய ஸாயுஜ்ய**
**ஸாத்ருஷ்யங்களு பஞ்சவித முக்குதிதாயக**
**பரித நம்ம புரந்தரவிட்டலா ||89**

அந்தந்த (எல்லா) யுகங்களிலும் விஷ்ணுவானவன் (அனைத்து இடங்களிலும்) வ்யாபகனாக இருக்கிறான். விஷ்ணுவின் இருப்பிடங்களான முக்தி லோகத்தில் (பக்தர்கள் செல்வதற்காக) ஸாலோக்ய, ஸாரூப்ய, ஸாமீப்ய, ஸாயுஜ்ய, ஸாத்ருஷ்ய எனப்படும் ஐந்து வித முக்திகளை கொடுப்பவனாக நம் ஸ்ரீபுரந்தரவிட்டலன் இருக்கிறான்.

ஸ்ரீவாதிராஜர் வைகுண்ட வர்ணனெ யில் இவ்வாறு கூறுகிறார்.

ஸாயுஜ்ய ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப்ய
ஈ யந்ததி சதுர்வித முகுதியொளு
ஹேயலிங்கதேஹ போதரே மேலவரவர
யோக்யதெயிந்தலொப்புவ கட ||1
ஸாயுஜ்ய, ஸாலோக்ய, ஸாமீப்ய, ஸாரூப்ய என்று முக்தியில் நான்கு விதங்கள் உள்ளன. அழியக்கூடிய (அழிவதற்கு யோக்யமான) லிங்கதேகம் சென்றால், அதற்குப் பிறகு அந்தந்த ஜீவர்களின் யோக்யதைக்கேற்ப (அவரின் ஸ்வரூபம் தோன்றி) ஒளிரும்.

ஸ்ரீகாந்தனங்கவ முட்டிகொண்டிப்புது
பேகாத ஸாயுஜ்ய முக்தி காணிரோ
ஈ குஜனரெம்பைக்யவ யுஜிர் யோகே எம்ப
வியாகரணோக்தி பிடிஸிது ||2
லட்சுமிபதியின் தேகத்தை கொண்டிருப்பது ஸாயுஜ்ய முக்தி என்பதை அறியுங்கள். மாயாவாதிகள் என்னும் துர்ஜனர்கள் சொல்லும் 'ஐக்ய' ஷப்தார்த்தத்தை,'யுஜிர் யோகே' என்னும் யுஜிர் தாது, யோக (ஸம்பந்த) என்னும் அர்த்தத்தில் இருக்கிறது என்னும் வ்யாகரண நிரூபணம் தெளிவாக கூறுகிறது.

***

**ஸிரிசதுர்முக ஸுரரு மனு முனிகளு**
**மனுஜோத்தமரு தாரதம்யயுக்தரு**
**புரந்தரவிட்டலன ஸதா சரணரு || 90**

ஸ்ரீலட்சுமிதேவி, சதுர்முக ப்ரஹ்மதேவர், மனு முதலான முனிவர்கள், மனுஷ்யோத்தமர்கள் என தாரதம்யத்தில் இருக்கும் அனைவரும் ஸ்ரீபுரந்தரவிட்டலனின் பாதங்களில் நிரந்தரமாக வணங்குபவர்கள்.

ஸ்ரீமதாசார்யாரின் தத்வவாதத்தில் முக்கியமான விஷயம் என்றால் அது தாரதம்யம். ஸ்ரீமன் நாராயணன் ஸர்வோத்தமன். லட்சுமிதேவியிலிருந்து அனைவரும் தாரதம்யத்தின்படி அவனுக்கு கீழானவர்கள் என அவரவர்களின் (தேவதைகளின்) தாரதம்யத்தை அறிந்து, அதன்படி அவர்களை வணங்கினால், பகவத் ப்ரஸாதம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.

இத்தகைய முக்கியமான தாரதம்யத்தைப் பற்றி நாம் நன்றாக அறிய வேண்டும் என்பதற்காக ஸ்ரீஜகன்னாததாஸர், ஹரிகதாம்ருதஸாரத்தில் கீழே சொல்லியவாறு, பல்வேறு ஸந்திகளை இயற்றியிருக்கிறார். அவற்றைப் படித்து, தாரதம்யத்தை நன்றாக அறிய வேண்டியது நம் கடமை.

* குண தாரதம்ய ஸந்தி
* ப்ருஹத் தாரதம்ய ஸந்தி
* அபரோக்ஷ தாரதம்ய ஸந்தி
* ஆரோஹண தாரதம்ய ஸந்தி

* அவரோஹண தாரதம்ய ஸந்தி
* அனுக்ரமணிகா தாரதம்ய ஸந்தி
* தேவ தைத்யர தாரதம்ய ஸந்தி
* தைத்ய தாரதம்ய ஸந்தி
* கக்ஷ தாரதம்ய ஸந்தி

***

**ஸனகாதிகள ஹம்ஸதந்தெ கமலதலி**
**நலிவ மூருதியனு மனுஜோத்தமரெம்ப**
**மன அம்பரதொளு காலமிஞ்சினந்தெ**
**தளதளிஸுவ குரு புரந்தரவிட்டலா ||91**

ஸனகாதிகளின் தந்தையானவரின், தாமரையில் வீற்றிருக்கும் மூர்த்தியை, ஜீவோத்தமரான ப்ரஹ்மதேவரின் (முக்யப்ராணரை), அவரது மன ஆகாஷத்தில் ஒளிரும் மின்னல் போல இருப்பவரானவர் குரு ஸ்ரீபுரந்தரவிட்டலன்.

பிரம்மாண்டத்தில் முக்கிய அங்கமாக இருக்கும் வாயுதேவரிடமிருந்தே அனைத்து செயல்களையும் செய்யவேண்டும் என்பது ஸ்ரீஹரியின் விருப்பம். இந்த திட பக்தரின் சேவைக்கு ஈடானது வேறொன்றும் இல்லை. இதற்கே 'புரந்தரவிட்டலனு ஹனுமனோள் வாஸா' என்றார் தாஸர். மேலும்:

பாரதிரமண நினகெணெ காணே மூரு லோகதல்லித்தந்த |
ஸகல ப்ராணதல்லிதந்த பஞ்ச ப்ராணகளிகெ ப்ராணநாத ||

'குருப்ரஸாதோ பலவான்' என்பது ஸ்ரீமதாசார்யரின் வாக்கு. இப்படி வாயுதேவரின் தரிசனம் பெற்றால், ஸ்ரீஹரி தரிசனம் தருவான். காரணம், ஸ்ரீஹரியைக் காட்டுபவர் இவரே ஆவார்.

பாரதிரமணனான வாயுதேவர் மற்றும் அவனது ப்ரபுவான புரந்தரவிட்டலனின் கருணை நமக்கு எப்போதும் இருக்கட்டும் என்று அனைத்து ஹரிதாஸர்களும் பாடியிருக்கின்றனர்.

ஆகவே, நமது ஸித்தாந்தத்தில் ஸ்ரீஹரியை கொண்டாட வேண்டுமெனில், 'பாரதிரமண முக்யப்ராணாந்தர்கதனான நாராயணன்' என்றே சங்கல்பமோ / சமர்ப்பணமோ செய்ய வேண்டும் என்ற விதி இருக்கிறது. இதையே ஸ்ரீதாஸரும் இந்த சிறிய உகாபோகத்தில் தெரிவித்திருக்கிறார்.

***

**நின்னன்னெ ஹாடுவெ நின்னன்னெ பாடுவே**
**நின்னன்னெ பேடி பேஸரிஸுவெ ரங்கய்யா**
**நின்ன ஹாரயிஸுவெ நின்ன காலனு பிடிவெ**
**நின்ன தொண்டரிகெ நா கைய்ய கொடுவெ கிருஷ்ண**
**நின்னந்த ஸாகபல்ல ஸ்வாமி**
**மத்தெனகுண்டெ புரந்தரவிட்டலரேய ||92**

உன்னையே பாடுவேன். உன்னையே வேண்டி, தொந்தரவு செய்வேன் ரங்கய்யா. உன்னையே விரும்பி, உன் கால்களை பிடிப்பேன். உன்னுடைய தொண்டர்களுக்கு நான் கை கொடுப்பேன் கிருஷ்ணா. உன்னைப் போன்று அனைவரையும் காக்கும் ஸ்வாமி, எனக்கு வேறு யாராவது உண்டா ஸ்ரீபுரந்தரவிட்டலா.

" ஓ ஸ்ரீஹரியே! நீயே என் ஸ்வாமி, நான் உன் தாசன். அனைத்து உலகங்களில் அனைவரையும் விட உத்தமனானவன் என்றால் அது நீ ஒருவனே. உனக்கு சரிசமமானவர் வேறு யாரும் இல்லை. உத்தமனானவனோ இல்லவே இல்லை" .

இப்படி உலகத்தின் தலைவனான ஸ்ரீஹரியிடம் செய்யும் நட்பே பக்தி எனப்படுகிறது. அந்த ஸ்ரீஹரியிடம் வைக்கும் நட்பு, அவரின் மகாத்ம்ய ஞானத்தை அறிந்ததாக இருக்கவேண்டும். அன்பினால் நிறைந்திருக்க வேண்டும். செல்வம் முதலான தற்காலிக விஷயங்களில் இருக்கும் அன்பை மீறியதாக இருக்கவேண்டும். மரணமே வந்தாலும் அது திடமாக இருக்க வேண்டும். அதுவே உண்மையான பக்தி. இத்தகைய பக்தியினாலேயே மோட்சம் கிடைப்பதற்கு சாத்தியம். இத்தகைய பக்தியை விட்டால், வேறு எதாலும் மோட்சத்தை அடைவதற்கு சாத்தியமே இல்லை. பக்தி மட்டுமே மோட்சத்திற்கான வழி - என்பதை அறிந்து அவனுடைய ஸர்வோத்தமத்வத்தையும், ஸார்வஜ்ஞத்வத்தையும் கொண்டாடி வணங்கினால், ஸ்ரீஹரி மகிழ்கிறான் என்று தாஸர்கள் பாடியிருக்கின்றனர் என்பதை பார்க்கிறோம்.

***

**ஹரிய பஜிஸபேகு மனமுட்டி**
**பஜிஸிதரெ அவன கார்யவெல்ல க3ட்டி**
**இல்லதித்தரெ தாபத்ரயகளு பென்னட்டி**
**யமதூதரெளிவரு ஹெடமுட்டி கட்டி**
**புரந்தரவிட்டலன கோபத த்ருஷ்டி**
**ஹரிய பஜிஸபேகு மனமுட்டி ||93**

ஸ்ரீஹரியை பஜிப்பாயாக (பக்தி) நிறைந்த மனதுடன். அவ்வாறு பஜித்தால், பஜிப்பவர்களின் செயல்கள் அனைத்தும் கண்டிப்பாக நடக்கும். அப்படியில்லையெனில், கஷ்டங்கள் அவன் பின்னேயே வரும். யமதூதர்கள் அவனை உடலில் கட்டி இழுத்துச் செல்வார்கள். ஸ்ரீஹரியை பஜிப்பாயாக (பக்தி) நிறைந்த மனதுடன். அவ்வாறு செய்தால், ஸ்ரீபுரந்தரவிட்டலனின் கோபத்துடனான பார்வை அந்த யமதூதர்கள் மேல் பாயும்.

பக்தி என்றால், அது எப்படி இருக்க வேண்டும் என்பதை பல ஹரிதாஸர்கள் பல்வேறு கீர்த்தனைகளில் நமக்கு பாடி புரியவைத்திருக்கிறார்கள். அவற்றின் ஸாரமாக இந்த பின்வருவதை கூறலாம்.

ஸ்ரீஹரியே! நீயே எனக்கு தாய்! நீயே என் தந்தை! நீயே உறவினன்! என் நெருங்கிய உறவினனும்கூட நீயே! நான் கஷ்டப்பட்டு படிக்கும் கல்வியும் நீயே! இரவும் பகலுமாக கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் செல்வமும் நீயே. என் வாழ்க்கையில் அனைத்தும் நீ ஒருவனே. நான் நம்பும் தெய்வம் என்றால் அது நீ ஒருவனே. உன்னைத் தவிர எனக்கு வேறு யாரும் வேண்டாம். தந்தை, தாய், உற்றார் உறவினர், நண்பர் யாரும்கூட எனக்கு முக்கியமில்லை. பலவித ஆசைகளை, காசு பணம் ஆகியவற்றையும்கூட நான் விரும்புவதில்லை. நிரந்தரமாக உன் தாஸனாக இருக்கவேண்டும் என்று மட்டுமே விரும்புகிறேன். நான் அடுத்த பிறவிகளில் எங்கு, எப்படி பிறந்தாலும், உன் தாஸனாகவே பிறக்க வேண்டுமென்று மட்டும் விரும்புகிறேன். உன்னிடமே என் மனது நிலைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

***

**அந்து பாஹோது நமகிந்தே பரலி**
**இந்து பாஹோது நமகீகலே பரலி**
**ஈக பாஹோது நமகீக்ஷணவே பரலி**
**புரந்தரவிட்டலன தயவொந்து நமகிரலி ||94**

பிறகு வரவேண்டியது, நமக்கு இன்றே வரட்டும். இன்று வரவேண்டியது நமக்கு இப்போதே வரட்டும். இப்போது வரவேண்டியது நமக்கு இந்த நொடியே வரட்டும். ஸ்ரீபுரந்தரவிட்டலனின் கருணை என்பது நமக்கு எப்போதும் இருக்கட்டும்.

ஸ்ரீஹரியின் கருணை நம் மேல் இருக்க நாம் என்ன செய்யவேண்டும் என்பதை ஸ்ரீஜகன்னாததாஸரின் ஒரு பத்யம் மூலம் பார்ப்போம்.

மலகுவாகலி ஏளுவாகலி
குளிது மாதாடுதலி மனெயொளு
கெலஸகள மாடுதலி மைதொளெவாக மெலுவாக |
கலுஷதூரன ஸகலடாவிலி
திளியெ தத்தன்னாம ரூபதி
பளியலிப்பனு ஒந்தரெக்ஷண பிட்டலகலனவர ||3

படுப்பது முதலான காலங்களில், அனைத்து இடங்களில், அந்தந்த நாம ரூபத்தை அறியவேண்டும். அதாவது, நாம் படுக்கும்போது, ஸ்ரீபரமாத்மனுக்கு சேஷன் படுக்கையாக இருப்பதைபோல, இந்த படுக்கையிலும் ஸ்ரீபரமாத்மன் இருக்கிறான் என்று நினைக்க வேண்டும். அடுத்து, நம்மில் பரமாத்மன் நம் ரூபத்திலும், லட்சுமிதேவி என் மனைவியின் ரூபத்திலும் இருக்கிறார் என்றும் நினைத்து, போகாதிகளை அனுபவித்து தூங்க வேண்டும். நம் யோக்யதைக்கேற்ப, அந்த சுகத்தை சிறிதளவு நமக்குக் கொடுக்கிறான் என்று நமக்குள்ளும், படுக்கையிலும், மனைவியிலும் லட்சுமி நாராயணனையே நினைக்க வேண்டும் என்பது கருத்து. இவ்வாறு செய்தால், ஸ்ரீஹரி ஒரு நொடியும் நம்மை விட்டு விலகாமல் நம்முடனே இருந்து நம்மை காப்பான் என்கிறார் ஸ்ரீதாஸர்.

***

**ஹரிஸிரிசரணவிரலு மிக்க**
**பூரி தைவகள்யாகெ பஜிஸுவெ மருளி**
**நீரடிஸி ஜாஹ்னவி தீரதல்லித்து பாவி**
**நீரு குடிவ மானவருண்டெ**
**காருண்ய வைகுண்ட விட்டலரேய**
**திருவெங்களப்ப ஸிரிபுரந்தரவிட்டலன ||95**

ஸ்ரீஹரி, ஸ்ரீலக்ஷ்மிதேவி இருவரின் பாதகமலங்கள் எனக்கு இருக்கையில், மற்ற (கீழான) தெய்வங்களை நான் ஏன் பஜிக்க வேண்டும் பயந்து?. தாகம் எடுப்பவன், கங்கை நதிக்கரையில் இருக்கையில், அங்கு இருக்கும் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து குடிப்பானா?. கருணைக்கடலான வைகுண்ட விட்டலரேயனே, திருவேங்கடத்தில் இருக்கும் ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

ஹரி ஸர்வோத்தமத்வத்தை விளக்குவதான பற்பல பாடல்களை ஹரிதாஸர்கள் பாடியிருந்தாலும், ஸ்ரீபுரந்தரதாஸர் பாடிய இந்த ஒரு பாடலை மட்டும் இங்கே பார்ப்போம்.

ஸகல க்ரஹபல நீனே ஸரஸிஜாக்ஷ
நிகிள வ்யாபக நீனே விஸ்வரக்ஷகா ||ப

இந்தப் பாடலில் ஸ்ரீஹரியே அனைத்தும் என்பதை அழகாக ஒரு பட்டியலிட்டு காண்பிக்கிறார் ஸ்ரீதாஸர். இவ்வாறாக ஸர்வஸ்வாமியாக இருப்பவனான ஸ்ரீஹரியையே வணங்க வேண்டும் என்பதே இந்த உகாபோகத்தின் கருத்து.

* ரவி, சந்த்ர, புத, ராஹு, கேது, கவி, குரு, சனி, மங்கள ஆகியவை.
* திவ, ராத்ரி, நவ விதான ஆகியவை
* பக்ஷ, மாஸ, பர்வ கால, நக்ஷத்ர, யோக, கரண ஆகியவை
* ருது, வத்ஸர, வ்ரத, யுகாதி, க்ரது, ஹோம, யஜ்ஞ, ஸத்கதி

***

**எல்லி ஹரிகதா ப்ரஸங்கவோ அல்லி கங்கா**
**யமுனா கோதாவரி ஸரஸ்வதி**
**நர்மதா ஸிந்து காவேரி**
**எல்ல தீர்த்தகளு பந்து எணெயாகி நில்லுவுது**
**ஸிரிவல்லப புரந்தரவிட்டலனு ஒப்புவனு ஜயஜய || 96**

ஹரிகதா ப்ரஸங்கத்தின் மகிமையை சொல்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

எங்கெல்லாம் ஹரிகதா ப்ரஸங்கம் நடக்கிறதோ, அங்கெல்லாம் கங்கை, யமுனை, கோதாவரி, ஸரஸ்வதி, நர்மதா, ஸிந்து, காவேரி என அனைத்து தீர்த்தங்களும் வந்து நிற்கின்றனர். இதனை ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனான ஸ்ரீபுரந்தரவிட்டலனும் ஒப்புக் கொள்கிறான். அவனுக்கு வெற்றி உண்டாகட்டும்.

அதாவது, ஹரிகதா ஸ்ரவணம் என்பது எவ்வளவு புண்ணியகரமான செயல் என்றால், மேற்சொன்ன அனைத்து தீர்த்தங்களிலும் ஸ்னானம் செய்ததற்கான பலனுக்கு சமமாகும் என்று அர்த்தம் கொள்ளலாம். இத்தகைய ஸ்ரவணத்தின் மகிமையையே ஸ்ரீஜகன்னாததாஸர் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

ஸ்ரவண மனனானந்தவீவுது
பவஜனித துக்ககள களெவுது
விவித போகவ னிஹபரங்களலித்து சலஹுவுது |
புவனபாவன நெனிப லகுமி
தவன மங்களகதெய பரமோ
த்ஸவதி கிவிகொட்டாலிபுது பூசுரரு தினதினதி ||2-1

பரமாத்மனின் கதைகளைக் கேட்கும்போது பேரானந்தம் ஆகிறது. நவகாதம்பரிகளை (நவீன நாவல்களை) படிக்கும்போதுகூட மகிழ்ச்சியே ஆகிறது. அதனால் என்ன என்று கேட்டால், அதில் கர்ணானந்தம் (கேட்கும் மகிழ்ச்சி) மட்டுமே ஆகும். இதில் சம்சாரத்திலிருந்து விடுதலையும் ஆகிறது. இதுமட்டுமல்லாமல், அனைத்து துக்கங்களையும் பரிகரித்து பரலோகத்திலும் பற்பல விதமான போகங்களைக் கொடுத்து சுகத்தையும் கொடுக்கிறது. ஆகையால், இத்தகைய லோகபாவனனான, ஸ்ரீரமாபதியின் மங்கள கதையை மிகுந்த மகிழ்ச்சியுடன் பக்தர்கள் அனைவரும் கேட்கவேண்டும்.

***

**புட்டுவ பீதி பொந்துவ பீதி**
**விட்டலனங்க்ரிய நெனெயதவரிகெ காலன பீதி**
**பாபத பீதி நிரயத பீதி**
**ஸ்ரீகோபாலன தாஸனாகதவரிகெ**
**அரிஷட்வர்க்கத மஹாபீதி**
**ஸ்ரீஹரி நாமவனுச்சரிஸதவகெ**
**ஹலவு மாதின்னேனு ஹலவு பீதி**
**செலுவ புரந்தரவிட்டலன்ன பூஜிஸதவகெ || 97**

பயம் இல்லாத மனிதரில்லை. பிறந்ததிலிருந்து இறக்கும்வரை அனைத்திலும் பயமே. ‘அபய’ நாமகன் ஒருவனே இதற்கு தீர்வு / வழி. அனைத்து இடங்களிலும் ஸ்ரீஹரியை நினைப்பவர்களுக்கு என்றும் பயம் இல்லை என்று சொல்லி விளக்குகிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

பிறந்தால் பயம். வாழ்வதற்கு பயம். விட்டலனின் காலடிகளை நினைக்காதவர்களுக்கு காலனின் பயம். பாவம் செய்தால் பயம். அதனால் கிடைக்கும் பலன் - நரகத்தின் பயம். ஸ்ரீகோபாலனின் தாஸர் ஆகாதவர்களுக்கு காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்ய என்னும் அரிஷட்வர்க்கங்கள் வந்துவிடுமோ என்னும் பெரிய பயம். ஸ்ரீஹரியின் நாமஸ்மரணை செய்யாதவனுக்கு, மிகவும் அதிகமான பயம். அழகான ஸ்ரீபுரந்தரவிட்டலனை பூஜிக்காதவர்களுக்கு எப்போதும் பயம்.

ஸ்ரீஹரியை 'பயக்ருத் பய நாசன:' என்று ஆகமங்கள் புகழ்கின்றன. ஸஜ்ஜனர்களுக்கு ஸ்ரீஹரி எப்போதும் அபய ப்ரதனாகவே இருக்கிறான். இதுவே அவனின் கருணை. எதையும் எதிர்பார்க்காத நண்பனான ஸ்ரீஹரி அனைவரையும் காப்பவன் என்பதான விஷயத்தையே இந்த உகாபோகத்தின் மூலம் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

***

**அர்ப்பகன தொதல் நுடி தாய்தந்தெ கேளி மன**
**உப்பி நலிவந்ததலி உரகஶயன**
**கொப்பி நானாடிதரு தாளி ரக்ஷிஸு என்ன**
**கப்புபில்லன பித புரந்தரவிட்டல ||98**

தங்களின் சிறு குழந்தையின் மழலைச் சொற்களை தாய் தந்தையர் கேட்டு, மனதில் மிகவும் மகிழ்ந்து திகழ்வதைப் போல, உரக ஶயனனை வணங்கி நான் திகழ்ந்தால் அதனை ஏற்றுக் கொண்டு என்னை காப்பாயாக, மன்மதனின் தந்தையான ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

இந்த கருத்தினை சொல்வதான ஒரு ஹரிகதாம்ருதஸார பத்யத்தினை பார்ப்போம்.

பாலகன கலபாஷெ ஜனனியு
கேளி ஸுகபடுவந்தெ லகுமி
லோல பகுதரு மாடுதிஹ ஸம்ஸ்துதிகெ ஹிக்குவனு |
தாள தன்னவரல்லி மாடுவ
ஹேளனவ ஹெத்தைய்வ விதுரன
ஆலயதி பாலுண்டு குருபன மானவனெ கொண்ட ||2-14

தன் குழந்தையின் மழலைப் பேச்சினைக் கேட்டு தாயானவள் மகிழ்ச்சியடைவதைப் போல, லட்சுமிவல்லபன் தன் பக்தர்கள் செய்யும் மிகச்சிறிய ஸ்துதிகளைக் கேட்டு மகிழ்கிறான். தன் பக்தர்களை யாராவது அவமானம் செய்தால், அதைக்கண்டு சகிக்க மாட்டான். ஆகையால், பாண்டவர்களுக்கு அவமானம் செய்த துரியோதனனின் (திருதராஷ்டிரனின்) வீட்டில் உண்ணாமல், விதுரனின் வீட்டில் உணவை உண்டு துரியோதனனுக்கு அவமானம் செய்தான்.

***

**கிச்சினொளகெ பித்த கீட நானய்யா**
**அச்யுதனெ காயோ அனந்தனெ தெகெயோ**
**கோவிந்த ரக்ஷிஸோ கோரபாதகி நானு**
**கருணாளு காயய்யா புரந்தரவிட்டலா ||99**

நெருப்பினுள் விழுந்த பூச்சி நானய்யா. அச்யுதனே என்னை காப்பாயாக. அனந்தனே என்னை (அந்த துன்பத்திலிருந்து) வெளியில் எடுப்பாயாக. கோவிந்தனே என்னை காப்பாயாக. கடும் தவறுகளை செய்தவன் நான். கருணைக்கடலே என்னை காப்பாயாக. ஸ்ரீபுரந்தரவிட்டலனே.

ஸ்ரீஹரியிடம் இருக்கும் பக்தியை குறிப்பிடுவதாக உள்ள உகாபோகம் இது. பக்தியைப் பற்றி இன்னொரு புத்தகத்தில் படித்ததை இங்கு பகிர்கிறேன்.

பரமேஸ்வரனே! என்றும் முடிவில்லாத அனந்தானந்த கல்யாண குணங்களின் ஸ்வரூபம் என்றால் அது நீயே. கொஞ்சம்கூட தோஷத்திற்கு வாய்ப்பே இல்லாத நற்குணங்களின் ஸ்வரூபம் என்றால் அது நீயே. மேரு பர்வதத்தைவிட அதிகமான குணங்களைக் கொண்ட உன் முன் நான் கடுகினைப் போல சிறியவனாக இருக்கிறேன். என் நண்பர்கள் அனைவரும்கூட உன் முன் மிகச்சிறியவர்களாக இருக்கின்றனர். நான் மற்றும் என் நண்பர்களில் இருக்கும் குணங்களைவிட அனந்தானந்த குணங்களை உடையவன் நீ ஒருவனே. எனக்கு ஆயிரக் கணக்கான பிரச்னைகள் வந்தாலும்கூட, உன்னிடம் எனக்கு இருக்கும் இந்த நட்பு குறையவே வேண்டாம். கங்கையின் பிரவாகத்தைப் போல எல்லா பிறவிகளிலும், எல்லா ஆண்டுகளிலும், எல்லா

நாட்களிலும், ஒவ்வொரு நொடிகளிலும் அந்த பக்தியானது என்னிடம் பெருகியவாறு இருக்கட்டும். என்றும் அதற்கு தடை வரவேண்டாம். ஓ தேவனே! இத்தகைய பக்தியை எனக்குக் கொடு. என்னை காப்பாற்று.

***

**ப்ரபன்னரக்ஷக நீனு பாலிஸோ நின்னவனு நானு**
**உபஸாதனவரியெனு ஒம்மெ நின்ன நெனெவேனு**
**அபராதி நானாதடேனு அபயப்ரதனு நீனு**
**விபரீத மாடதென்னனு ஸலஹோ புரந்தரவிட்டலா ||100**

கஷ்டப்படுபவர்களை காப்பவன் நீ. நான் உன்னுடையவன். என்னை காப்பாயாக. வேறு ஸாதனங்கள் எதையும் அறியாதவன் நான். ஒரு முறை உன்னையே நினைக்கிறேன். நான் அபராதியாக இருந்தால் என்ன? அபயப்ரதன் நீதானே?. என்னை கைவிட்டுவிடாமல் காப்பாயாக ஸ்ரீபுரந்தரவிட்டலா.

ஸ்ரீஹரியே நம் தலைவன் (ஈஶன்). நாம் அவனது தாஸன். அவனிடம் சரணாகதி அடைந்தாலே, நம் அனைத்து துன்பங்களும் விலகும் - என்பதை சொல்வதான உகாபோகம் இது.

ஓ நாராயணனே! நீ அனைத்து குணங்களால் பரிபூர்ணனாக இருக்கிறாய். எவ்வித தோஷங் களும் இல்லாதவனாக இருக்கிறாய். அனைத்து வேதங்களால், அவற்றின் ஒவ்வொரு பதங்களால், எழுத்துக்களால் போற்றப்படுபவனாக இருக்கிறாய். அனைத்து ஞானிகளின் ஸ்தோத்திரங்களால் சர்வோத்தமன் என்று அழைக்கப்படுகிறாய். கண்ணிற்குத் தெரியும் இந்த உலகின் ஸ்ருஷ்டி-ஸ்திதி-லய- நியமன -ஞான- அஞ்ஞான- பந்த- மோக்ஷங்களுக்கு காரணனாக இருக்கிறாய். இத்தகைய அனந்த பிரம்மாண்டங்களை நடத்துபவன் நீயே. பிரம்ம ருத்ராதி தேவாதி தேவதைகளைவிட சிறந்தவனாக இருக்கிறாய். இத்தகைய நீ ஒருவனே எனக்கு இவ்வுலகில் நண்பன். நீயே என் உறவினன். நீ என்றும் கைவிடாத என் காதலன்.

***

**தப்புஸாஸிரகள ஒப்பி காயோ க்ருபாளு**
**முப்புரவனளிதந்த முனீந்த்ரவந்த்ய**
**அப்ரமேயனெ நின்ன அத்புதமஹிமெகள**
**அப்புநிதியல்லி புட்டிதவளரியளு**
**கப்புமேக காந்தியொப்புவ திம்மப்ப**
**அப்ராக்ருத ரூப புரந்தரவிட்டலா ||101**

ஆயிரம் தவறுகளை நான் செய்திருந்தாலும் அவற்றை மன்னித்து என்னை காப்பாயாக, கருணியே. முப்புரங்களை அழித்தவனே. முனிவர்களால் வணங்கப்படுபவனே. அப்ரமேயனே. உன்னுடைய அற்புத மகிமைகளை கடலில் பிறந்தவள்கூட (லக்ஷ்மிதேவி) முழுவதும் அறியமாட்டாள். மேகத்தைப் போல கருமையான காந்தியில் ஒளிர்பவனே. திம்மப்பனே. அப்ராக்ருத ரூபத்தைக் கொண்ட புரந்தரவிட்டலனே.

இட்டிகல்லனு பகுதியிந்தலி
கொட்ட பகுதகெ மெச்சி தன்னனெ
கொட்ட படபிராமணன ஒப்பிடியவலி ககிலார்த்த |
கெட்ட மாதுகளந்த சைத்யன
பொட்டெயொளகிம்பிட்ட பாணத
லிட்ட பீஷ்மனவ குணகளெணிஸிதெனெ கருணாளு ||2-11

புண்டலீகன் என்னும் பக்தன், தான் நிற்பதற்காக பக்தியுடன் கொடுத்த செங்கல் மேல் நின்று, விட்டல ரூபத்தினால் அவனுக்கு தரிசனம் அளித்து, பண்டரிபுரத்தில் நின்றுவிட்டான். பரம ஏழையான குசேலன் என்னும் பிராமணன், பக்தியுடன் கொண்டு வந்திருந்த ஒரு பிடி அவலை ஏற்றுக்கொண்டு, அவனுக்கு சதுர்வித புருஷார்த்தங்களைக் கொடுத்தான். சிசுபாலன் அசுராவேஷத்தினால் ஸ்ரீகிருஷ்ணனை மனம் போல திட்டியும், அவனைக் கொன்று, தன் வயிற்றில் வைத்துக் கொண்டான். போர்க்களத்தில் அம்புகளால் தன்னை

துளைத்த பீஷ்மாசார்யரை, அவரின் தவறுகளை மன்னித்தான். ஆகையால், இவனது கருணையை எவ்வளவு வர்ணித்தாலும் அது மிகக்குறைவே என்று பொருள்.

***

**நவரத்னகளு கண்ட கண்ட டாவினல்லி உண்டே**
**நவவிதபகுதி கண்டகண்டவரிகுண்டெ**
**தேவ நின்ன பகுதி ஸுகானுபவ ஸூரெ**
**கண்டரெ பாரது கலிதரெ பாரது**
**புரந்தரவிட்டல நின்ன தயவில்லதனக ||102**

நவவித பக்திகளின் சிறப்பினை இந்த உகாபோகத்தில் சொல்கிறார்.

விலைமதிப்பற்ற நவரத்னங்கள் கண்ட கண்ட இடங்களில் இருக்குமா? இருக்காது. அதன் மதிப்பினை அறிந்தவர்களிடம் மட்டுமே அது இருக்கும். அது போல, நவவித பக்தியும் அனைவரிடமும் இருக்காது. ஸ்வாமியே, உன்னுடைய பக்தி என்பது ஒரு சுகானுபவம். அதனை பார்த்து அறிய முடியாது; கற்றால் வராது. உன்னுடைய தயவு / கருணை இன்றி அத்தகைய பக்தி எனக்கு வராது ஸ்ரீபுரந்தரவிட்டலா.

ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதசேவனம் |
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் சக்யம் ஆத்ம நிவேதனம் ||

ஸாதகர்களிடம் பக்தி செய்வித்து, அவர்களுக்கு ஸத்கதி வழங்குபவன் பகவந்தன். அந்த பகவந்தனைப் பற்றி இந்த ஒன்பது வித பக்தியின் மூலமாக அறிந்து கொள்வதே ஸாதனை என்கின்றனர்.

இந்த ஒன்பது வித பக்தியை பின்பற்றும்போது, மனதில் இந்த சிந்தனை இருக்கவேண்டும். 'விஷ்ணோ: கீர்த்தனம்' என்றும் 'நாஹம் கர்த்தா ஹரி: கர்த்தா' என்றும். எனக்குள் இருந்து அனைத்தையும் நடத்துபவன் அவனே என்று நினைக்கவேண்டும். நம்முள் இருக்கும் ஸ்ரீஹரி தன் ரூபங்களை வெளிப்படுத்தி, பஜிக்கும் ரூபங்களில் ஐக்யம் அடைகிறான். பக்தன் தன் அனைத்தையும் ஸ்ரீஹரிக்கு சமர்ப்பித்துக் கொள்ளும் அறிவே 'அனுஸந்தானம்' (நற்சிந்தனை) எனப்படுகிறது.

***

**ஹகலு நால்கு ஜாவ ஹஸிவெயலி களெதனோ**
**இருளு நால்கு ஜாவ விஷயக்கெ கொடுதெனோ**
**வ்யர்த்த வாயிதெல்ல ஈ ஸம்ஸார ஸுகவில்ல**
**கேளய்ய தந்தெ புரந்தரவிட்டலா ||103**

பகலில் நான்கு நாழிகை - பசியுடனே கழித்தேன். இரவில் நான்கு நாழிகை - எனக்கு பிடித்த விஷயங்களில் கழித்தேன். இவ்வாறாக காலமே வீணாயிற்றே. எனக்கு சம்சார சுகமேயில்லை. தந்தையான ஸ்ரீபுரந்தரவிட்டலனே, (என் வேண்டுகோளை) கேட்பாயாக.

பகவந்தனை நினைக்காமல், வீணாக காலத்தை அரட்டைகளில் கழித்தேன் என்று தன் தவறினை நினைத்து வருந்தி பகவந்தனின் அருளை வேண்டுவதாக இந்த உகாபோகம் இருக்கிறது. இந்த கருத்தே ஹரிகதாம்ருதஸாரத்தில் ஒரு பத்யத்தில் இவ்வாறு வந்திருப்பதை பார்க்கிறோம்.

பக்திபூர்வகவாகி முக்தா
முக்த நிய்யாமகன ஸர்வோ
த்ரிக்த மஹிமெகளனவரத கொண்டாடு மரெயதலெ |
ஸக்தனாகதெ லோகவார்த்தெ ப்ர
ஸக்திகளனீடாடி ஸ்ருதிஸ்ம்ரு
த்யுக்த கர்மவ மாடுதிரு ஹரியாக்ஞெ எந்தரிது ||19-10

முக்தர்களுக்கும், அமுக்தர்களுக்கும் தலைவனான ஸ்ரீபரமாத்மனின் மிகச்சிறந்த மகிமைகளை மறக்காமல் தினந்தோறும் பக்தியுடன் ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். சம்சாரத்தில் மயங்கிவிட வேண்டாம். லௌகிகமான வீண் அரட்டைகளை விட்டு, ஸ்ருதி ஸ்ம்ருதியில் செய்யவேண்டும் என்று சொன்னவற்றை ஹரியின் ஆணை என்று அறிந்து அவற்றை செய்துகொண்டிரு.

***

**மன ஸஞ்சலதி தபவ மாடலு அஸக்யவு**
**கன அஞ்ஞானதி ஹலவு கர்மவு ஹத்தவு**
**தன ஸுத்தியில்லதெ தானவு வ்யர்த்த இவு**
**இனிதாத்தரிந்த புரந்தரவிட்டலா ஈ யுகதி**
**தன்ன நாமஸ்மரணெ லேஸெந்தனு || 104**

ஸஞ்சலமான மனதுடன் தவம் (ஜெபம்) செய்ய முடியாது. மனதில் அஞ்ஞானம் இருக்கும்போது செய்யும் கர்மங்கள் வீணே. சரியான வழியில் ஈட்டாத செல்வத்தினை தானம் செய்தால் அது வீண். இவை இவ்வாறாக இருப்பதால், ஸ்ரீபுரந்தரவிட்டலன் கூறினான் - இந்த யுகத்தில் தன்னுடைய நாமஸ்மரணையே போதும் என்றான்.

உதர வைராக்யவிது என்பதான பாடலில் மேலே உள்ள உகாபோகத்தின் கருத்துக்கள் அப்படியே வந்துள்ளன என்பதை பார்க்கலாம்.

கரதலி ஜபமணி பாயல்லி மந்த்ரவு
அரிவெ முஸுகு மோரெகெ ஹாகி
பர ஸதியர குண மனதலி ஸ்மரிஸுத
பரம வைராக்யஷாலி யெந்தெனிஸி

பூதகதனதலி பஹுள பகுதிமாடி
எனகில்லி சரி யாரெந்தெனிஸி
நாடக ஸ்த்ரீயந்தெ பயலு டம்பவ தோரி
ஊடத மார்க்கவ ஞானவில்லதெ ||

உதர வைராக்யவிது நம்ம
பத்மனாபனல்லி லேஸு பகுதியில்லா ||

***

**ஸதத கணநாத ஸித்தியனீவ கார்யதலி**
**மதிப்ரேரிஸுவளு பார்வதிதேவி யு**
**குதிபதனீவ மன மஹருத்ரதேவரு ஹரிப**
**குதிதாயகளு பாரதி தேவி யு**
**குதிசாஸ்த்ரகளல்லி வனஜஸம்பவனரஸி**
**ஸத்கர்மகள நடெஸி ஸுஜ்ஞானமதி இத்து**
**கதிபாலிஸுவ நம்ம பவமானனு**
**சித்ததலி ஆனந்த ஸுகவனீவளு ரமா**
**பக்தஜனரொடெய ஸ்ரீபுரந்தரவிட்டலனு**
**ஸதத இவரொளு நிந்து க்ருதிய நடெஸுவனு || 105**

ஸ்ரீபுரந்தரதாசர் ஆரோகண கிரமத்தில் அழகாக சுருக்கமாக, மத்வ மதத்தின் தாரதம்யத்தை விளக்கும் உகாபோகம் இது. ஜீவர்களை ஸ்ருஷ்டிக்கு கொண்டு வந்த ஸ்ரீஹரியே அனைவரின் நிலைக்கும், கதிக்கும்

காரணன். உத்தம ஜீவர்களில் இருந்து, ஸ்த்கர்மங்களை செய்பவனும் அவனே. நம் கர்மங்களை பெற்று, அதற்கேற்ப பலன்களைக் கொடுக்கிறான்.

த்வைத சித்தாந்தத்தின் தாரதம்யத்தை விளக்கும் இந்த ஸ்லோகத்தை தினமும் பாராயணம் செய்யவேண்டும். கணநாத (வினாயக) 18ம் வகுப்பில் வரும் தேவதை. பார்வதி - 7ம் வகுப்பு. ருத்ரதேவர் - 5ம் வகுப்பு. பாரதி மற்றும் சரஸ்வதி தேவியர் - 4ம் வகுப்பு. பவமானர் - 3ம் வகுப்பு. ரமாதேவி - 2ம் வகுப்பு. பிறகான முதலாம் இடம் ஸர்வோத்தமனான ஸ்ரீபுரந்தரவிட்டலனான நாராயணனுடையதாகும்.

அந்த தாரதம்யத்தில் இருக்கும் தேவதைகளிடம், அவர்களின் தாரதம்ய க்ரமத்தை அனுஸந்தானம் செய்துகொண்டு, அவர்களிடம் என்னென்ன வேண்ட வேண்டும் என்பதையும் சொல்லி, அவர்கள் அனைவருக்குள்ளும், பாரதிரமணனான முக்யப்ராணாந்தர்கதான ஸ்ரீபுரந்தரவிட்டலனே இருந்து, அனைத்தையும் நடத்துகிறான் என்னும் மிகவும் முக்கியமான ஸித்தாந்த கருத்தினை மிகவும் அழகாக விளக்குகிறார் ஸ்ரீபுரந்தரதாஸர்.

***

**ஆதியல்லி கஜமுகன அர்ச்சிஸி ஆரம்பிஸலு**
**ஆவவகெ கார்யததி ஸித்தி கொளிஸி**
**மோததிம் ஸல்லிஸுவ மனதிஷ்டவ**
**ஸாது ஜனரெல்ல கேளி ஸகலஸுரரிங்கெ**
**மாதவனெ நேமிஸிப்ப ஈ அதிகாரவ**
**அதரிந்தலவரொளகெ தா நிந்து கார்யகள**
**பேத கொளிஸதெ மாள்ப புரந்தரவிட்டலா || 106**

எந்த வேலையை செய்யத் துவங்குவதற்கு முன்னும், விக்னேஸ்வரனை வணங்கியே செய்ய வேண்டும் என்பதை விளக்குவதான உகாபோகம் இது.

வேலையை செய்வதற்கு முன், கஜமுகனை வணங்கி அதனை ஆரம்பித்தால், அனைவருக்கும் அந்த வேலைகளில் மிகவும் உன்னதமான முடிவினைக் கொடுத்து, அவர்கள் விரும்பியதை மிகவும் மகிழ்ச்சியுடன் நிறைவேற்றி வைப்பான். ஸஜ்ஜனர்களே அனைவரும் இதனை கேளுங்கள். இவ்வாறாக, அனைத்து தேவதைகளுக்கும் ஸ்ரீஹரியே இவ்வாறு அதிகாரத்தை கொடுத்திருக்கிறான். அதனால், அவர்களில் (அந்த தேவதைகளில்) தானே நின்று, அந்தந்த செயல்களை, எவ்வித பேதமும் பார்க்காமல் ஸ்ரீபுரந்தரவிட்டலனே செய்து முடிக்கிறான்.

முக்தி சாதனைகளுக்காக செய்ய வேண்டிய சத்கர்மங்களுக்கு வரும் விக்னங்கள் மிகவும் அதிகமானதால், அவை அனைத்தும் நிர்விக்னமாக நடக்க வேண்டி, விக்னேஷ்வரனின் பிரார்த்தனை அவசியம் என்று கணபதி ஸ்தோத்திர சந்தி என்று ஒரு முழு சந்தியையே இயற்றியிருக்கிறார் ஸ்ரீஜகன்னாததாஸர்.

ஸ்ரீஷனதி நிர்மலசுனாபி
தேஷ சம்ஸ்தித ரக்தஸ்ரீக
ந்தா சுஷோபிதகாத்ர லோகபவித்ர சுரமித்ர |
மூஷகசுவரவஹன ப்ராணா
வேஷயுத ப்ரக்யாத ப்ரபு பூ
ரயிஸு பக்தரு பேடித இஷ்டார்த்தகள ப்ரதிதினதி ||28-8

ஸ்ரீபரமாத்மனின் நாபி பிரதேசத்தில் இருக்கும் ஆகாஷத்தில் வசிப்பவனே. ஹே கணபதியே. 'ரக்தாம்பகோ ரக்ததனு: ரக்தமால்யானு லேபன:' என்று தந்த்ரசார சங்க்ரஹத்தில், கணபதி மந்திரத்தின் தியான ஸ்லோகத்தில் ஸ்ரீமன் மத்வாசார்யர் சொல்லியிருக்கும் வாக்கியம் இது. அப்படியே, சிகப்பு வர்ண மிகவும் அழகான சரீரம் உள்ளவனே. உலகத்தையே பவித்ரமாக மாற்றுபவனே. நீ தேவதைகளின் நண்பன். மூஷிகனை வாகனனாகக் கொண்டவன். பிராணதேவரின் ஆவேசத்தைப் பெற்று உலகப் புகழ் பெற்றவன். ஹே பிரபோ, தினந்தோறும் பக்தர்கள் வேண்டும் இஷ்டார்த்தங்களை நிறைவேற்று.

***

**அங்குடொங்காத மஞ்ச அனந்தகாலத மஞ்ச**
**சங்கரன கொரளிகெ பதகவாகிஹ மஞ்ச**
**வெங்கட புரந்தரவிட்டல மலகுவ மஞ்ச**
**ஸ்ருங்காரவாகிதெ ஸ்ரீஹரி ரங்கன மஞ்ச**
**மங்களமூருதி பாண்டுரங்க மலகுவ மஞ்ச || 107**

ஸ்ரீமன் நாராயணனின் படுக்கையான ஸர்ப்ப-படுக்கையைப் பற்றி சொல்வதாக உகாபோகம்.

ஒரே மாதிரியாக இல்லாமல், மேடு பள்ளமாக இருப்பதான படுக்கை. அனந்த காலமாக இருப்பதான படுக்கை. ஸ்ரீருத்ரதேவரின் கழுத்தில் பதக்கமாக இருப்பதான படுக்கை. வெங்கட புரந்தரவிட்டலன் படுப்பதான படுக்கை. இந்த ஸ்ரீஹரி ரங்கனின், மங்களமூர்த்தியான பாண்டுரங்கனின் படுக்கை மிகவும் அழகாக இருக்கிறது.

ஸ்ரீஸேஷ தேவரைக் குறித்தான ஹரிகதாம்ருத பத்யம்:
ஜகதுதரன சுரோத்தமன நிஜ
பெகலொளாந்து கராப்ஜதொளு பத
யுகதரிஸி நகபங்க்தியொளு ரமணீயதரவாத |
நகதரன ப்ரதிபிம்ப காணுத
மிகெஹருஷதிம் பொகளி ஹிக்குவ
கககுலாதிப கொடலி மங்கல சகலசுஜனரிகெ ||32-8

எந்த பரமாத்மன், யோகிகளின் மனதிற்கும், முழுவதுமாக புலப்படாதவனாக இருக்கிறானோ, அத்தகைய வேதங்களால் புகழப்படுபவனான பரமாத்மனை, 2,000 நாக்குகளால் வர்ணித்தவாறு, அனைத்து இடங்களிலும் வியாப்தனான பரமாத்மனுக்கு, யோக நித்திரைக்கு உதவுபவன் என்றால், யோக நித்திரையில் செல்லும் காலத்தில், சேஷன் என்னும் படுக்கையில் படுத்திருக்கிறான் என்று அர்த்தம். பரமாத்மனுக்கு படுக்கையாக இருந்து ஒளிரும் இத்தகைய சர்ப்ப ராஜனான சேஷனின் பாத கமலங்களை நான் எப்போதும் மனப்பூர்வகமாக நமஸ்காரம் செய்கிறேன்.

***

**பாரிபாரிகெ நின்ன சரணக்கெ சரணெந்தெ**
**பாரதிரமணனெ பாரோ மனெகிந்து**
**ஸ்ரீபுரந்தரவிட்டல ராயனே**
**எந்தெந்து நீனே ஜகக்கெ பந்து || 108**

ஹரி ஸர்வோத்தமத்வத்தை, ஜீவ அஸ்வதந்த்ரத்த்தை மற்றும் ஈஷ-தாஸ பாவத்தை பறைசாற்றும் இன்னொரு உகாபோகம்.

திரும்பத்திரும்ப உன்னுடைய சரணத்தில் நான் சரணடைந்தேன். பாரதிரமணனே நீ எனக்கு அருள்வாயாக. ஸ்ரீபுரந்தரவிட்டலனே. தலைவனே. நீயே என்றென்றும் இந்த உலகிற்கு பந்து (உறவினன்).

அனைவரையும் தன் வயிற்றில் வைத்திருப்பவனாகவும், பக்தர்களில் (அவர்கள் மனதில் / தேகத்தில்) நிறைந்திருப்பவனாகவுமாக இருப்பவன் ஸ்ரீஹரி, பக்தகுடும்பி, விஷ்வகுடும்பி என பல பெயர்களில் அழைக்கப்படுகிறான்.

இவன், சூஷ்மமான இதயகமலத்தில் நடுவில் இருப்பதால் இவனை 'ஹ்ருத்கமல மத்ய நிவாஸி' என்பர். இவனையே ஞானிகள் விஷ்வம்பர மூர்த்தி / ஆத்ம மூர்த்தி / ப்ராக்ஞ மூர்த்தி என்றும் சொல்வார்கள். இந்த ஸ்வாமி, தன் பக்தர்களை அன்புடன் பாதுகாப்பதால், பக்தகுடும்பி என்று அழைக்கப்படுகிறான். உலகத்தையே பாதுகாப்பதால், பக்தர்களை அன்புடன் பாதுகாக்கிறான் என்பது கருத்து. இப்படியாக அறிந்து யார் பரமாத்மனை ஸ்தோத்திரம் செய்கிறார்களோ அவரை அனைத்து விதங்களிலும் பரமாத்மன் மகிழ்ச்சிப்படுத்துகிறான்.

***

**ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து**